# தமிழ்நாட்டில் காந்தி

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை–4

[உரிமை பதிவு]

முதற் பதிப்பு, செப்டம்பர் 1944
இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 1954

Printed at the Madras Law Journal Press, TDR.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | .. | v |
| பிள்ளையார் புறப்பாடு | .. | 1 |
| குற்றாலம் - தூத்துக்குடி | .. | 14 |
| ராஜபாளையம் - விருதுநகர் | .. | 25 |
| மதுரை - செட்டிநாடு | .. | 38 |
| மானாமதுரை - மேட்டுப்பாளையம் | .. | 51 |
| குன்னூர் - கோயம்புத்தூர் | .. | 59 |
| போத்தனூர் மோட்டார் விபத்து | .. | 70 |
| வன்னிர்வலசு - தேவாரம் | .. | 75 |
| திருச்சிராப்பள்ளி - நாமக்கல் | .. | 84 |
| சேலம் | .. | 94 |
| தஞ்சாவூர் - நாகப்பட்டணம் | .. | 98 |
| சீர்காழி - சிதம்பரம் | .. | 109 |
| மஞ்சக்குப்பம் - கோடம்பாக்கம் | .. | 122 |
| முடிவுரை | .. | 129 |

முதற் பதிப்பு, செப்டம்பர் 1944
இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 1954

Printed at the Madras Law Journal Press, TDR.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை .. | v |
| பிள்ளையார் புறப்பாடு .. | 1 |
| குற்றாலம் - தூத்துக்குடி .. | 14 |
| ராஜபாளையம் - விருதுநகர் .. | 25 |
| மதுரை - செட்டிநாடு .. | 38 |
| மானாமதுரை - மேட்டுப்பாளையம் .. | 51 |
| குன்னூர் - கோயம்புத்தூர் .. | 59 |
| போத்தனூர் மோட்டார் விபத்து .. | 70 |
| வன்னிர்வலசு - தேவாரம் .. | 75 |
| திருச்சிராப்பள்ளி - நாமக்கல் .. | 84 |
| சேலம் .. | 94 |
| தஞ்சாவூர் - நாகப்பட்டணம் .. | 98 |
| சீர்காழி - சிதம்பரம் .. | 109 |
| மஞ்சக்குப்பம் - கோடம்பாக்கம் .. | 122 |
| முடிவுரை .. | 129 |

# முன்னுரை

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு எழுதிய வரலாறு இச்சிறிய நூல். எழுதிய எனக்கே இதை இப்போது படிப்பதற்குப் புதுமையாகத் தோன்றியது. தமிழர்களின் ஆற்றலையும் உள்ளத்தையும் ஒருவாறு அறிந்துள்ள கலைமகள் காரியாலயத்தார் இதைப் பிரசுரிக்க விரும்பிய பொழுது அதன் உண்மை எனக்கு விளங்கவில்லை. இப்பொழுது நன்கு விளங்குகிறது.

தமிழில் பிரயாணங்களில் உண்டாகும் தோற்றங்கள், உணர்ச்சிகள், கற்பனைகள், பொதுவாழ்வில் காணப்படும் காட்சிகள்-இவைகள் அடங்கிய நூல்கள் இருக்கின்றனவோ என்பது எனக்குச் சந்தேகம். அப்படி ஒரு சமயம் ஒன்றிரண்டு இருந்தாலும், அநேகமாகத் தமிழர்களின் மத்தியில் உலவக் காணவில்லை. புது மலர்ச்சி பெற்றுச் செழித்து மலர்ந்துவரும் தமிழ் நடையில், காதற் கதைகளும் இன்பக் கனவுகளும் நிறைந்திருக்கின்றன. படிக்கும் ஆவலுக்கு அளவில்லை. இத்தகைய மனோபாவம் நிறைந்து ஊக்கம் உடையவர்களுக்கு, கருத்துப் பொருந்திய நிகழ்ச்சிகள் தகுதியுடையவை.

காந்திஜி சுற்றுப் பிரயாணத்தில் ஓயாது பறை சாற்றிய ஒரு சித்தாந்தம் மறக்க முடியாதது. "தீண்டாமை என்னும் பழக்கத்திற்குச் சாத்திரத்தில் ஆதாரம் இல்லை"

என்று சொல்லிய வாக்குறுதியின் காரணத்தால் ஹிந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழிவு குறைந்துவிட்டது. உலகப் போக்கு, பலவிதத்திலும் மாறுபாடு அடைந்து வருகிறது. பழைய கொள்கைகள் உரு மாறியும் மறைந்தும் வருகின்றன. காலத்தின் தன்மையால் நம்மை அறியாமலே நாம் மாறி வந்துகொண்டிருக்கிறோம். இதை வலியுறுத்தியும் உண்மையை வெளிப்படையாக எல்லா மக்களும் அறியும் வண்ணமும் எடுத்துரைப்பது சான்றோர் கடமை.

சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்த வைஷ்ணவ சித்தாந்த ஸ்தாபகராகிய ஸ்ரீமத் ராமாநுஜர் அக்காலத்திலேயே தாம் குருவினிடம் கற்ற ரகசியத்தைத் திருக்கோட்டியூர்க் கோபுரத்தின் மீது ஏறி, மக்கள் அனைவரும் உய்யும் வண்ணம் உரக்க எடுத்துக் கூறினார். "இந்த ரகசியத்தை மக்கள் உய்யும்பொருட்டு நான் வெளிப்படுத்தினேன். இச் செய்கையால் எனக்கு நரகம் கிடைக்குமென்று என் குருநாதர் சொல்லியிருக்கிறார். நான் ஒருவன் நரகம் போனாலுங்கூட, பல்லாயிரக்கணக்கான மக்கள் நற்பதவி அடைவதால், எனது நரக வேதனை எனக்கு மகிழ்ச்சியைத் தரும்" என்று சொன்னார் என்பது சரித்திரம். இக் காலத்தில் உயர்வு பெற்ற ஸ்ரீ வைஷ்ணவரான மகாத்மா காந்தியும் அதே உண்மையைத் தமிழ் நாடெங்கும் தமது சுற்றுப் பிரயாணத்தின் பொழுது ஒரு கோடி தமிழ் மக்களுக்கு உரக்க எடுத்துக் கூறினார். "ஸநாதன தர்மம் என்று சொல்லப்படும் ஹிந்து மதம் உயிர் வாழ வேண்டுமானால் தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் ஒழிய வேண்டும். தீண்டாமை ஒழியாவிட்டால் ஹிந்து மதம் ஒழிந்துவிடும்" என்று ஐயந்திரிபறப் பறைசாற்றினார், காந்தியடிகள். பலர் மனம் மகாத்மாவைப் பின்பற்றியது;

சிலர் மனம் துடித்தது. பல ஆண்டுகளாகப் பாவி, வேரூன்றிய கொடிய பழக்கம் வேரோடு ஆட்டம் கொடுத்தது; வேரும் ஒடிந்துவிட்டது. மரம் சிறுகச் சிறுகச் சாய்ந்து வருகிறது. தீண்டாமை கிராமங்களில்கூட மறைந்து வருகிறது. இந்தச் சுற்றுப் பிரயாணம் சரித்திரத்தில் இடம் பெற்றது. இதைக் 'காந்தி சகாப்தம்' என்றே சொல்லலாம். பின்வரும் சந்ததியார்களும் மறக்காமலிருக்க வேண்டி இச் சரித்திரம் திரும்ப எழுதப்பட்டிருக்கிறது. இதை மறுபடியும் ஒரு புத்தக உருவத்தில் வெளியிட இசைந்து ஆனந்தவிகடனில் வெளியான கட்டுரைகளைப் பதிப்பிக்க உதவி செய்து தமது உரிமையை எனக்கு அளித்த ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனம். இதை அச்சிட்டு வெளியிட்டுப் பிரசுரம் செய்துள்ள கலைமகள் பிரசுராலயத்தார் அவர்களுக்கும் எனது நன்றி உரியது. தமிழ் மக்கள் இந்நூலை அன்புடன் வரவேற்பார்களென்று நம்புகிறேன்.

தி. சே. சௌ. ராஜன்.

# தமிழ்நாட்டில் காந்தி

## 1. பிள்ளையார் புறப்பாடு

உலகத்தில் பலவிதப் பெரியார்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் பற்றிப் படித்தும் கேட்டும் இருக்கிறோம். அவர்கள் தத்தம் அடியார்கள், சுற்றத்தார்கள், சீடர்கள் இவர்களாலே மட்டும் அழைக்கப் பெற்றும், போற்றப் பெற்றும், ஆதரிக்கப்பட்டும் வந்திருக்கின்றனர். அவரவர்களுடைய ஆசிரமங்களிலோ, மடங்களிலோ, காடுகளிலோ, கோயில்களிலோ பல வருடங்கள் தங்கியிருந்து, சாஸ்திர ஆராய்ச்சி, ஆத்ம அநுபவம் இவற்றை உலகத்தோருக்குத் தங்கள் பக்தர்கள் மூலமாகவும் ஆராய்ச்சி நூல்கள் மூலமாகவும் வெளியிட்டு மனித உலகம் உய்யுமாறு செய்திருக்கிறார்கள் என்று அறிந்திருக்கிறோம்.

மகாத்மா காந்தியோ இன்று இருந்த இடத்தில் நாளை யில்லாமல் தேச சஞ்சாரம் செய்யும் கர்மயோகி. புயற் காற்றுப்போல் பறந்துகொண்டு அவர் பிரயாணம் செய்தார். விஜயம் செய்த அந்த அந்த

ஊர் வாசிகள் அவரைச் சற்று நேரம் தரிசிக்கமட்டும் முடிந்ததே தவிர, அவருடைய தினசரி வாழ்க்கை முறையையோ, ஆங்காங்கு நிகழ்ந்த அரிய அநுபவங்களையோ, மொத்தத்தில் அவருடைய சுற்றுப் பிரயாணத்தின் பெருமையையோ அறிந்திருக்க முடியாது. அவருடைய பிரயாண கோஷ்டியுடன் சென்ற ஒருவனுக்குத்தான் அவையெல்லாம் தெரியக் கூடும். அத்தகைய பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தபடியால் நான் கண்டு கேட்டவைகளைத் தமிழர்களுடன் கலந்து அநுபவிக்க வேண்டும் என்னும் ஆசையுடன் இந்தப் பிரயாண வரலாற்றை எழுதலானேன்.

கன்னியாகுமரியை இதற்கு முன் நான் பார்த்ததில்லை. திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்திருந்தாலும் உண்மையில் அது தமிழ்நாட்டின் பகுதி என்றே சொல்லவேண்டும். ஜனவரிமீ 23உ (1934) அன்று பிற்பகல் இரண்டுமணி சுமாருக்கு நான் அங்கே சென்றேன். வெயில் இல்லாமல் அன்று வானம் மூட்டமாக இருந்தது. கடலினின்றும் குளிர்ந்த காற்றுடன் சாரல் வீசிக்கொண்டிருந்தது. கூச்சல், கூக்குரல்கள் இல்லாமல் ஊரின் அமைதி ஒரு புறம்; சற்று இனிய குரலுடன், மலைப் பாறைகளைச் சுற்றி விளையாடும் அலைத் திவலைகள் மற்றொரு புறம். குமரியின் பாதத்தைக் கும்பிடும் நீலக்கடல்; கண்ணுக்கு எட்டிய தூரம் தெற்கே நீர்ப் பரப்பு. இந்த விநோதக் காட்சிக்கிடையே விசாலமான ஒரு தர்மசத்திரத்தின் மேல்புறத்தில்

காந்திஜியும், அவர் பரிவாரமும் தங்கியிருந்ததைக் கண்டேன்.

திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் காந்திஜியின் சுற்றுப்பிரயாணம், சம்பந்தப்பட்ட யாருக்கும் அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை என்று அறிந்தேன். திருவாங்கூர் எல்லைப்புறத்தில் இருக்கும் நாஞ்சில் நாட்டின் பிரதான நகராகிய நாகர்கோயிலில்தான் பொதுஜனங்களின் கூட்டமும் கூட்டத்திற்கேற்ற பண முடிப்பும், ஆரவாரமும் தோன்றின. அதைக் கண்ணுற்ற அடிகள், 'நாம் தமிழ்நாட்டை அணுகிவிட்டோம் என்பதற்கு இக் கூட்டம் அறிகுறி' என்பதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டினரின் அன்பை ஒருவாறு கண்ட மகானுக்குத் தமிழ் மக்களின் அன்பின் நறுமணம் நாஞ்சில் நாட்டிலேயே வீசிற்று. 'தமிழ் நாட்டை அணுகிவிட்டோமே; பொறுப்பாளியான தமிழன் ஒருவனையும் காணோமே; என் செய்வோம்!' என்பதாக வழி பார்த்து எதிர்நோக்கியிருந்த அகில இந்திய ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீயுத தக்கர் அவர்களின் மனம் என்னைக் கண்டவுடன் கவலை நீங்கிற்று என்று சொல்வது மிகையாகாது: "ஒருவரையும் காணோமே என்பதாகக் காத்திருந்தேன். கடைசியில் வந்து விட்டாயா?" என்ற வாழ்த்துடன் அடிகளின் சந்நிதானத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்.

வழக்கம்போல வசீகரிக்கும் பொக்கைவாய்ப் புன்னகையுடன், "வந்துவிட்டாயா, செல்லாத காசு மாதிரி!" என்று காந்திஜி என்னை வரவேற்றார்.

தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்தவுடன் சென்னையில் ஒருதரம், பிறகு பங்களூரில் ஒருதரம், இப்பொழுது தமிழ்நாட்டில் நுழைவதற்கு முன்பாக மூன்றுந் தரம் என்னைப் பார்த்ததனுல் அவருக்கு நான் தம் கண்ணில் எப்பொழுதும் தென்படுவதாகவே தோன்றியதுபோலும்! பெட்டியில் எவ்வளவோ நல்ல ரூபாய் வைத்திருந்து செல்லாத ரூபாய் ஒன்று இருந்தாலும் அச் செல்லாத ரூபாய் சதா கண்ணில் பட்டுக்கொண்டு முன்வருவது நமது அநுபவம். என்னைச் செல்லாத காசு என்று வரவேற்ற என் குருநாதனுக்கு என்ன பதில் உரைப்பது? நானும் சிரித்துக்கொண்டு, "தங்களுடன் இருந்து, தங்கள் கண்ணில் வேண்டும் பொழுதும் வேண்டாத பொழுதும் பட்டுக்கொண் டிருக்கும் பாக்கியம் கிடைத்தது, செல்லாத காசாகிய என்னுடைய அதிருஷ்டமே" என்று சொன்னேன். பிறகு, நான் மோட்டார் முதலியவைகளை ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கும் பெருமையைப் பிதற்றி விட்டுப் புறப்படவேண்டியதற்கான வேலைகளைச் செய்யலானேன்.

அன்று சாயங்காலம் ஆறரை மணிக்குப் பிரார்த்தனை முடிந்ததும் புறப்பட வேண்டுமென்று தீர்மானமாயிற்று. கன்னியா குமரியிலிருந்து திருநெல்வேலிக்கு ரஸ்தா மார்க்கமாக ஐம்பத்தைந்து மைல். வரும் வழியில் நாங்கு நேரியில் உபசாரப் பத்திரம், பணமுடிப்பு, பொதுக்கூட்டம் இவைகளை முடித்துக்கொண்டு

இரவு படுக்கைக்குத் திருநெல்வேலி சேரவேண்டியது என்பது அன்றையத் திட்டம். செவ்வாய்க்கிழமை காந்திஜி அவர்களுக்கு ஓய்வு நாள் என்று தெரிந்துங்கூட, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கி வைத்திருக்கும் நாட்களில் ஒரு விநாடிகூடக் குறையக் கூடாதென எண்ணியிருந்த எனக்கு, மறு நாள் காலை வரையில் புறப்பாட்டைத் தள்ளி வைப்பதில் இஷ்டமில்லை. முதல் நாளே பிரயாணமும், தமிழ் நாட்டு விஜயமும், வேலையும் தொடங்குவதோடு இரவுத் தூக்கமும் கெடாமல் திருநெல்வேலி சேர்வதும் முறை எனத் தோன்றியபடியால் அன்று சாயங்காலமே புறப்பட ஏற்பாடு செய்துவிட்டேன்.

பணக்காரனுடன் பத்துப் பேர், வைத்தியக்காரனுடன் பத்துப் பேர் என்று சொல்வது தமிழரின் பழமொழி. ஆனால் ஏழையுடன் பத்துப் பேர் ஒரு நாளும் இல்லை. காந்திஜியோ பரம ஏழை. அவருடன் கண்ட கோஷ்டியாரை என்னவென்று சொல்வது? வனங்களில் முன்காலத்தில் முனிவர்கள் தங்கள் சீடர்களுடனே கூட்டமாக வசித்திருந்ததாக நான் படித்திருக்கிறேன். ஆனால் நாளொன்றுக்குச் சராசரி நூற்றைம்பது மைலுக்குக் குறையாமல் பிரயாணம் செய்துகொண்டு, பத்து மணி நேரத்திற்கு மேலாக வேலை செய்துகொண்டு, ஓர் இரவு தங்கிய இடத்தில் மறு இரவு தங்காமல் காற்றைப் போலப் பறந்து செல்லும் மகாத்மாவின் பரிவாரங்களின் ஜாப்தா இருபது பேர் என்றால் ஆச்சரியப்படவேண்டுமா, இல்லையா? இதில் குஜராத்தியர்,

ஒன்பது பேர், தமிழர் ஐந்து பேர், ஸ்திரீகள் மூவர், ஹிந்துஸ்தானிகள் இருவர், ஜெர்மானியர் ஒருவர். இந்தத் தொகை அதிகமென்று நினைக்க வேண்டாம். அங்கங்கே கூட வருகிறேன் என்று கங்கணங் கட்டிக் கொண்டு புறப்படுவோர்களை வரக்கூடாதென்று கண்டிப்பாகத் தடை செய்த பிறகு இந்த நபர்கள் மிச்சம்.

தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் உடன் வருபவர்களை ஆங்காங்கே தடை செய்வதான துர்ப் பாக்கியம் எனக்கு ஏற்பட்டதென்றால் என்னைப் பற்றி நீங்கள் பொறாமைப்பட மாட்டீர்கள். மேலும், புறப்படும் முறையில் சாமான்களும் கூட வரும் நபர்களும் காந்திஜி புறப்படுவதற்கு முன் பாகவே புறப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் செய்து விட்டேன். பல தடவைகளில் மகாத்மாவின் சுற்றுப் பிரயாண அநுபவம் எனக்கு வாய்த்திருந் தமையால் இந்த ஏற்பாடு அவசியமெனத் தோன் றிற்று. இதற்கு முன் அடிகளுடன் பிரயாணம் செய்த காலத்து அவர் முதலில் ரெயில்வே பிளாட் பாரத்தில் இறங்கியவுடன் வரவேற்புக் கமிட்டியார் கள், தொண்டர்கள், வேடிக்கை பார்ப்பவர்கள் எல் லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு விடுவார்கள். காந்திஜிக்குத் தயாராக இருக்கும் வண்டியிலேயே அவரை வரவேற்பவர்களும் தொண்டர்களும் இரண்டு பக்கப் படிகளிலும் 'வரிசையாக ஏறிக் கொண்டு விடுவார்கள். பார்க்கும் ஜனங்களுக்கு உள்ளிருப்பவர் தெரியாமல் கை கால்களை வீசிச்

சரமாரியாக "ஜே" போட்டுக்கொண்டே அவர்கள் போய்விடுவார்கள். நானும் சாமான் எடுப்போர் இல்லாமல் கூலி ஆட்களைப் பிடித்து வாடகை வண்டியில் ஏற்றிக் காந்திஜி போன இடம் விசாரித்துக்கொண்டு அவர் சென்ற ஒரு மணி நேரம் கழித்து வீடுபோய்ச் சேர்ந்தது உண்டு. அம்மாதிரி விபத்து இப்பொழுது நேராமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சாமான்களையும், காரில் ஏறுபவர்கள் போக மற்றவர்களையும் பஸ்ஸில் முதல் முதலாக ஐந்து மணிக்கே ஏற்றிவிட்டேன். பிறகு மகாத்மாவிற்கு வேண்டிய அவசியமான சாமான்களையும், மீரா பென் அவர்களையும் திருநெல்வேலியில் தங்குமிடமாகிய ஸ்ரீமான் கூத்த நயினார் பிள்ளை அவர்கள் வீட்டிற்கு ஒரு மணி நேரம் முன்னதாக அனுப்பிவிட்டுச் சரியாக 6½ மணிக்குக் காந்திஜியும் நாங்களும் புறப்பட்டோம். தமக்கென வந்திருக்கும் மோட்டார்காரைக் காந்தியடிகள் பார்த்தவுடன், "நீ கொண்டுவந்திருப்பது சாமான்யமான கார் என்றல்லவா நினைத்திருந்தேன்? பக்கா 'மகாத்மா' காராகவே கொண்டுவந்திருக்கிறாயே!" என்று சொல்லிக்கொண்டே புன்சிரிப்புடன் கன்னியாகுமரியை விட்டுத் தமிழ்நாட்டிற்குப் பிரயாணமானார்.

இச் சமயத்தில், காந்திஜியின் சுற்றுப் பிரயாணத்திற்கென்று நாங்கள் பிரத்தியேகமாகத் தயாரித்திருந்த மோட்டார் வண்டிகளைப் பற்றிச் சற்றுச் சொல்ல வேண்டும். ஒரு காலன் எண்ணெய்க்குப் பத்து மைல் கூடப் போகாததான ஒரு முரட்டு

மோட்டாரைப் பிடித்து, அதில் ஜனங்கள் அனை வரும் காந்திஜியை நன்கு பார்க்கக்கூடிய வண்ணம் உயரமான ஆசனம் போட்டோம். மோட்டார் ஓடும் போதே காந்திஜி இளைப்பாறுவதற்கு உரிய வசதி களும் அதில் ஏற்படுத்திஞேம். மழை, வெயில், வழியில் மோட்டாருக்குச் சாதாரணமாய் நேரக் கூடிய விபத்து இவைகளை முன்னிட்டு அஞ்சல் மூடுமோட்டார் வண்டி மற்ருென்றும் தயாரித் தோம். இவைகளில் முதல் வண்டியைப்பற்றித்தான் மகாத்மா மேற்கண்டவாறு சொன்னது. ஆந்திர, கேரள நாடுகளில் அவருடைய சுற்றுப் பிரயாணக் கஷ்டங்களை அறிந்திருந்தபடியால், தமிழ்நாட்டில் அத்தகைய கஷ்டங்கள் நேராமல் இருக்கும்பொருட் டுச் செய்திருந்த முன்னேற்பாடுகளில் இதுவும் ஒன்ருகும்.

பரதேசிகளில் முதிர்ந்து, முதல் மரியாதை பெற்ற மகாத்மாவிற்குக் காரின் ஓட்டம் சுமாராக இருக்கக் கூடாது. மணிக்கு நாற்பது மைலாவது ஓடினல்தான் வண்டி ஓடுவதாக அவர் நினைப்பார். ஆனல் வேகமாகப் போனபோதிலுங்கூட ஒரு விஷயமாகிலும் அவர் கண்ணுக்குத் தென்படாமல் இருப்பதில்லை. பூமியின் வனப்பும், மலைச்சாரலின் கம்பீரமான இயற்கை அழகும், ஆங்காங்கு மனிதன் தன் உழைப்பால் பண்படுத்தி உணவு உண்டாக்கும் செயற்கை வளம் மிகுந்த கழனிகளில் தோன்றும் காட்சிகளும் அவர் மனத்தில் இடைவிடாது அரிய பெரிய எண்ணங்கள் தோன்றுமாறு செய்விக்கும்.

அச்சமயம் உட்கருத்து அடங்கிய அரிய பெரிய மொழிகளையும் அவரிடமிருந்து கேட்கலாம்.

மகாத்மாவினுடைய வண்டி குறிப்பிட்ட நேரத்தில் தங்களுடைய கிராமத்தின் வழியாகப் போகும் என்கிற செய்தியை யார் பரப்பினார்களோ எனக்குத் தெரியாது. நான் அதே தினம் பிற்பகல் ஒரு மணிக்கு அவ் வழியாகச் சென்ற பொழுது ஊர்களில் ஜனங்கள் இருக்கிறார்களோ என்பதே எனக்குச் சந்தேகமாக இருந்தது. அதே ஊர்களின் வழியாக இப்பொழுது வரும்பொழுது கார் போக முடியாமல் கூட்டம். மேளம், தாரை, தப்பு முதலிய வாத்தியங்கள், தீவட்டி வெளிச்சம் இவைகளுடன் வரவேற்பு! காந்தி யார் என்பதுதான் கேள்வி. அவரை அநேகர் நேரில் பார்த்திராவிடினும் அவர் உருவம் அநேகர் மனத்தில் பதிந்து கிடக்கிறதென்பதை அன்று அறிந்தேன். "அதோ நடுவிலே உட்கார்ந்திருக்கிறார், பாரு. அவர்தான் காந்தி!" என்று ஒரு சிறுவன் காண்பித்தவுடனே, "காந்தி! காந்தி! காந்தி!" என்று எல்லாச் சிறுவர்களும் ஒரே ஓட்டமாகக் காரைத் துரத்திக்கொண்டு தங்களால் இயன்ற மட்டும் ஓடுவது சுற்றுப் பிரயாணம் முழுவதும் நிகழ்ந்த காட்சி.

நாங்குநேரிக்கும் கன்னியாகுமரிக்கும் நடுவிலுள்ள ஒரு குக்கிராமத்தில் பத்தே பத்துக் குடிசைகள் தாம் இருந்தன. அந்தக் குடிசைகளுக்கு மத்தியில் ஒரு பலசரக்குக் கடை இருந்தது. அந்தக் கடைக்காரர் நான் மத்தியான்னம் கன்னியாகுமரிக்

குப் போகும்போது என்னைச் சந்தித்து, " காந்தியடி களுக்கு ஒரு சிறு பணமுடிப்புக் கொடுக்க எண்ணி யிருக்கிறேன்; அவர்கள் போகும்போது சற்றுக் காரை இவ்விடம் நிறுத்தினால் ஒரு மாலை அவர் களுக்குச் சூட்டிப் பணத்தையும் கொடுத்துவிடு கிறேன்" என்று சொன்னார். "நாங்கள் திரும்புவதற் குள் இருட்டி விடுமாகையால் ரோட்டின் இரு புறத் திலும் இரண்டு கியாஸ் லைட்களை உயரமாக மூங்கிலில் கட்டிக் குறுக்கில் ஒரு தோரணமும் கட்டி வையுங்கள்; கார் எங்கே நிற்பது என்பதற்கு அடையாளமாக இருக்கும்" என்று நான் சொல்லிய யோசனையை அவர் ஏற்றுக்கொண்டு அம்மாதிரியே ஏற்பாடு செய்திருந்தார்.

இரவு நாங்கள் திரும்பியபோது, குறிப்பிட்ட அந்த இடத்தில் சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் அடங்கிய ஒரு கூட்டம் மிக்க ஆரவாரத்துடன் கூடி யிருந்தது. மகாத்மாவின் வண்டியைத் தோரணத் திற்கு மத்தியில் நிறுத்தினோம். ஏற்பாடுகள் செய்த வியாபாரியோ சாலை ஓரமாக ஒரு விசிப்பலகையைப் போட்டு அதில் ஒரு தட்டில் மாலையையும் பணத் தையும் வைத்துக்கொண் டிருந்தார். ஆனால் கார் வந்து நின்றவுடன் அவரும், அவருடைய பெஞ்சும், தட்டும் அரை மைலுக்கப்பால் போய்விட்டன போல் எங்களுக்குத் தோன்றின. "ஜே" சத்தத் திற்கும் மேகமட்டும் அளாவிய புழுதி மண்டலத்திற் கும் இடையே நாங்கள் மறைந்துவிட்டதுபோல் இருந்தது. கியாஸ் விளக்குக் கட்டியிருக்கும் மூங்கில்

ஆடின ஆட்டத்தைப் பார்த்தால் மகாத்மாவின் தலையில் அது விழாமல் இருக்கவேண்டுமே என்ற பயம் எனக்கு உண்டாய் விட்டது. இதற்குள் பணப் பையின் கதி என்ன ஆயிற்று என்று புலப்படவில்லை. இவ்வளவு பேரமளியின் நடுவில் பணமும் கிடைக்கா விட்டால், எல்லோரும் ஒரு படி மெல்லிய புழுதியை ஈரலில் உட்கொள்வதைத் தவிர வேறு பலன் ஒன்றும் இல்லாமற் போய்விடுமே என்று தோன்றியது. அப்பொழுது, அந்த மனித சமுத்திரத்தின் மத்தியில் ஒருவர் தலைமயிர் அவிழ்ந்து தொங்க, உயர்ந்து நீட்டிய ஒரு கையில் - தட்டு இருந்த இடம் தெரியாமற் போய்விட்டாலும் - பணப்பையையும் மாலையையும் மாத்திரம் இறுகப் பிடித்துக்கொண்டு, நெற்றி வேர்வை ததும்ப நெக்கித் தள்ளிக்கொண்டு வருவதைக் கண்டேன். அவர்தாம் என்னுடன் பேசிய வியாபாரி. பசித்திருந்த கருட பட்சி தன் இரையை எவ்வாறு கௌவிக்கொண்டு போகுமோ அவ்வாறு நான் அந்தப் பணப்பைய்யையும் மாலையையும் கை நீட்டி வாங்கினதும் கார் புறப்பட்டது. "நிறுத்து", "ஓடாதே", "மெள்ளப் போ" என்ற பலவித உத்தரவுகளுக்கு நடுவே காரும் நகர்ந்தது. அரைமணி தாமதித்துத்தான் நாங்குநேரிக்கு வந்து சேர முடிந்தது.

பகலில் அவ் வழியே போகும்போது, நாங்குநேரியில் ஊக்கமுள்ள தேசபக்தரான ஸ்ரீநிவாஸையங்காரைக் கண்டு, சென்னை அநுபவங்களைச் சொல்லி, சரியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்

என்று எச்சரிக்கை செய்தேன். அவர், "ஓ! நம்முடைய ஊரில் அப்படி ஒன்றும் நீங்கள் எதிர் பார்க்க வேண்டியதில்லை. எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம்" என்றார். ரெயில் போக்கு வரவு இல்லாத சிறிய வைஷ்ணவ க்ஷேத்திரத் தில் அநேகர் ஸநாதனிகளாக இருக்கக் கூடும்; ஆகையால் அதிகக் கூட்டம் சேராது என்று நினைத்தும், உள்ளூர் வாசியாகிய ஸ்ரீநிவாஸையங் கார் சொல்லிய உறுதியான வார்த்தைகளை நம்பியும் சென்றேன். திரும்பும்பொழுது, ஊரில் நுழையும் போதே கடைத் தெரு. அங்கே கூட்டத்தைப் பார்த்தவுடன் பொதுக்கூட்டத்தையே கடைத் தெருவில் வைத்துவிட்டதாக நினைத்தேன். கூட்டம் போட்டிருக்கும் இடத்தில் நிற்கக்கூட இடம் இல் லாது போகவே கடைத்தெருவை அடைத்துக் கொண்டார்கள் என்று தெரிந்தது. மேடை போட்டிருக்கும் இடத்திற்குக் கார் செல்ல இடம் இல்லை. வரவேற்புக்காரர்கள் உயர்ந்த உடை உடுத்து, அழகான திலகங்கள் வைத்து, கையில் கண்ணாடிபோட்ட வரவேற்புப் பத்திரங்களை ஏந்திக் கொண்டு, ரோஜா ஆரங்களுடன் மண்டபத்தில் நின்றுகொண் டிருந்தார்கள். அன்றிரவு மரத்தில் மனிதர்களாகக் காய்த்துத் தொங்கிக்கொண் டிருந் தார்கள். கோயில், மதில், கதவு எல்லாம் மனித மயமாகத் தோன்றின. கடைசியாகக் கால் மணி நேரம் யுத்தம் நடந்த பிறகு வரவேற்புப் பத்திரங் களும் பண முடிப்புகளும் காருக்கு வந்து சேர்ந்தன.

அந்த மனிதப் பேரிரைச்சலில் பேசுவது முடியாத காரியம். அப்படிச் செய்ய அடிகளும் எத்தனிக்கவில்லை. சற்று நேரம் காரிலேயே நின்று தரிசனம் கொடுத்தார். பிறகு போலீசாரின் உதவியின்மேல் கார் விடுவிக்கப்பட்டு, இரவு பத்து மணிக்குத் திருநெல்வேலி போய்ச் சேர்ந்தது. தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்குப் பிள்ளையார் புறப்பாடு போல இன்றைய நிகழ்ச்சி நடந்தேறியது.

## 2. குற்றாலம் - தூத்துக்குடி

திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசிக்கு அருகில் குற்றாலம் என்னும் நீர் வீழ்ச்சி இருப்பது தமிழ்நாட்டில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அப் புனிதமான அருவி அகத்தியர் மலையினின்றும் பெருகி, உச்சியினின்றும் பூமிக்குக் குதித்தோடு கிறது. மனிதர் நோயை இயற்கை முறையில் தீர்ப் பதற்காகவே இறைவனால் அது உண்டாக்கப்பட்ட தென்று சொல்லவேண்டும். என்றைக்குச் சூரிய நாராயணன் உதயமாகி உலகத்தைத் தட்டி எழுப்பும் வேலையில் அமர்ந்தானோ அன்று முதற்கொண்டே இந்த அருவியும் காலாகாலங்களில் பெருகியும் வடிந்தும் தன் கடமை ஆற்றிவருகிறது. ஒருவ ருடைய உத்தரவிற்கும் அது கீழ்ப்படிந்ததாகத் தெரியவில்லை; ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குக் கூட அடங்கியதாகவும் தெரியவில்லை. இந்த நீர் வீழ்ச்சியில் குளித்து முழுகினால் எந்த நோயும் உடலை விட்டு நீங்கும் என்பதாக அநுபவமுள்ள வர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த அருவியின் அடியில் சிவன்கோயில் ஒன்று இருக்கிறது. அருவிக்குப் போக வேண்டு மானால் அந்தக் கோயிலின் முன் மண்டபத்தின் வழியாகத்தான் போகவேண்டும். மனிதப் பிறவி

யில் ஹரிஜனங்கள் தவிர யாரும் அம் மண்டபத்தின் வழியாகப் போய் அருவியில் ஸ்நானம் செய்யலாம். கால் நடைகள் செல்வதற்கும் ஆட்சேபம் இல்லை. ஹரிஜன ஹிந்து என்றால் மாத்திரம் மண்டபத்தின் வழியாகப் போகக்கூடாது. பிற எந்த மதத்தினரும் போகலாம். ஆனால் இதில் ஒரு சந்தேகம். அருவி உண்டான பிறகு கோயில் வந்ததா, அல்லது கோயில் ஏற்பட்ட பிறகு அருவி வந்ததா? ஹரிஜனங்கள் கோயிலுக்கும் அருவிக்கும் முன்பே உண்டானார்களா? இவற்றிற்கெல்லாம் பதில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்தாம் சொல்லவேண்டும். ஏனெனில் அவர் மனிதனுடைய ரத்தம், அதனுடைய குறைகுணம் இவைகளில் ஆராய்ச்சி பெற்றவர்போலப் பேசுகிறார். தீண்டாதாருடைய ரத்தத்தில் ஒருவித விஷம் இருப்பதாக அவர் சூக்ஷ்மக் கண்ணாடியால் கண்டிருக்கிறார் போலும்! ஆகையால்தான் தீண்டாதார் இந்த ஜன்மாவிலும், முன் ஜன்மாவிலும், வரப்போகும் ஜன்மாவிலும் தீண்டப்படாதார்களெனச் சித்தாந்தப் படுத்தியிருக்கிறார்.

ஆனால் சாம்பன் என்கிற ஹரிஜனன் இந்தப் பிறப்பிலேயே இதே தேகத்தோடு பாதிரிகளின் ஞானோபதேசத்தால் ஜான் சாமிக்கண்ணு என்ற கிறிஸ்தவனாகவாவது, ஆலீம்ஸா உபதேசத்தால் முஸ்லிமாகி, சின்னத்தம்பி ராவுத்தராகவாவது ஆகிவிட்டால் அவனுடைய ரத்தம் எப்படி மாறி விடுகிறது என்பதைப் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் விளக்கிச் சொல்லவில்லை. ஏனெனில் இதுவரையில்

குற்ருலம் கோயில் முன் மண்டபத்தின் வழியாகப் போகக்கூடாத சாம்பன், ஜான் சாமிக்கண்ணுகவோ அல்லது சின்னத்தம்பி ராவுத்தராகவோ மாறிவிட்டால், அந்தச் சரீரத்திலுள்ள அதே ரத்தத்தோடு பகிரங்கமாக நடந்து சென்று அருவியில் நீராடலாம்.

குற்ருலத்திலே காந்திஜி தங்கியிருந்த மூன்று மணி நேரத்திற்குள்ளாக நீர் வீழ்ச்சிக் கமிட்டி அமைப்பு, அதிலுள்ள ஷிவகாரங்கள் எல்லாவற்றையும் விசாரித்ததில், ஹரிஜனங்களைப் பற்றிய தடை கமிட்டியாரால் உண்டானதல்ல என்றும், அங்கிருக்கும் கோயில் அதிகாரிகளால் எற்பட்டது என்றும் தெரியவந்தது. கோயில் என்று ஒன்று வைத்து, அதில் எல்லா ஹிந்துக்களுக்கும் (பல நாம ரூபங்களோடு கூடினும்) ஒரே தெய்வம் என்பதாகச் சாஸ்திரம் ஓதி, ஹரிஜனங்களிடமிருந்தும் (அவர்களைத் தூரத்தில் நிறுத்தி வைத்துக்) காணிக்கை மட்டும் வாங்கி வளரும் மனிதச் சாமீ, வழிமறிச்சான் சாமீயாக இன்று விளங்குகிறது,

அன்று பிற்பகல் மூன்று மணிக்குக் குற்ருலம் நீர் வீழ்ச்சியைப் பார்வையிட மகாத்மா சென்ருர். அங்கே இறங்கி நீராடிச் செல்லலாமென நண்பர்கள் சொல்ல, அதற்கு அவர் இணங்கவில்லை. “என்றைத் தினம் என் ஹரிஜன சகோதரர்கள் அருவியில் மற்றவர்களைப் போல ஸ்நானம் செய்ய அநுமதிக்கப் படுகிருர்களோ அன்றைத் தினம் எனக்கும் ஸ்நானம்” என்பதாகப் பதிலளித்து அன்று சாயங்காலமே போய்ச்சேர

வேண்டிய எண்பது மைல் தூரமுள்ள தூத்துக்குடிக்குப் பிரயாணமானார். அங்கே வந்திருந்த ஏழை ஹரிஜனங்களுக்குக் காந்திஜியின் வருகையில் ஏற்பட்டிருந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. இறைவன் தந்தருளிய அருவியை அவர் சிருஷ்டித்த மனித வர்க்கத்தின் ஒரு சாராருக்கு மட்டும் பயன்படாமல், ஆதியந்தமில்லாத கடவுளைச் சிறைப்படுத்தி, அவர் பெயரால் வழியை மறித்து, ஹிந்து மதமெனப் பறைசாற்றும் விபரீதத்தை ஒரு வாக்கியத்தில் மகான் காந்தி அன்று எடுத்துரைத்தார். 'தீண்டாமை என்னும் தொத்து நோய் ஒழிந்தால் ஹிந்து மதம் பிழைக்கும்; இல்லையேல் நிச்சயமாக ஹிந்து மதம் ஒழிந்து போய்விடும்!' என்பதாகத் தமிழ் மக்கள் காதினில் ஆறாத் துயரத்துடன் அழியா மொழிகளால் பறை சாற்றினார்.

* * *

மோட்டார்கார் பிரயாணத்தின் நிகழ்ச்சி முறையைக் குறிப்பிட்டு இந்த இடத்தில் இத்தனை மைலுக்கு அப்பால் பணமுடிப்பு, வரவேற்பு என்பதாகக் கண்டு அச்சிட்டுக் காரில் ஏறும்பொழுது காந்திஜி கையில் கொடுத்து விடுவது வழக்கம். மோட்டார் வெகு வேகமாக ஓடும் காலத்து, சிறு குழந்தைகள் தொட்டிலில் தூங்குவது போலவே ஒரு விநாடியில் அயர்ந்து தூங்கிவிடுவார். எனவே, அடுத்த இடம் போக எவ்வளவு நேரம் ஆகுமென்று கேட்பார். அரைமணி என்று சொன்னால், "அது

போதும்; நல்ல தூக்கம் ஒன்று போடலாம்" என்று புன்னகையுடன் சொல்லி உடனே அமர்ந்துவிடுவார். குறிப்பிட்ட அந்த நேரத்திற்குள் ஒரு நல்ல தூக்கம் தூங்கித் தாமே எழுந்துவிடுவார். ஆனால் இந்தச் சௌகரியம் அவருக்கு முக்கால் வாசி இடங்களில் கிடைக்காமலே போய்விட்டது. வழி நெடுக எதிர் பாராத இடங்களிலெல்லாம் ஏராளமான கூட்டம் வழி நடுவில் நின்றுகொண்டு கையைக் கூப்பிக் காரை நிறுத்த வேண்டுமென மன்றுடுவார்கள். அப்படி நிறுத்தினால், "காந்தி கார்தானு இது?" என்ற கேள்வி பிறக்கும். "ஆம், என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டால், "காந்தியைப் பார்க்க வேண்டும்" என்று ஏககாலத்தில் எல்லோரும் சொல்வார்கள். "பின் பக்கத்தில் தூங்குகிருர்" என்று சொல்லவேண்டியதுதான் தாமதம். திடீ ரென்று அவ்வளவு பேரும் ஒரே அடியாகக் காரின் படி, எஞ்சின் முதலியவைகளின் பேரில் விழுந்து, "காந்திக்கு ஜே!" என்று செவிடுபடக் கத்திக் கொண்டு அவருடைய தேகத்தின் எந்த எந்தப் பாகத்தைத் தொடக் கூடுமோ அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்வார்கள்.

இதன் மத்தியில் கார் பாதி ரிப்பேர் ஆகிக் கூட் டத்திலிருந்து தப்பினுல் போதுமென்று ஆகிவிடும். என்ன சொன்ன போதிலும் கேட்க மாட்டார்கள். "ஐயோ, காலை முதற்கொண்டு காத்திருக்கிருேமே! உங்களுக்கு ஈவு இரக்கம் இல்லையா?" என்பார்கள். மணிக்கு நாற்பது மைல் வீதம் சுற்றுப் பிரயாணம்

ஏற்பாடு செய்த எங்களுக்குப் பத்து நிமிஷத்திற்கு ஒரு தரம் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு ஒவ்வோர் இடத்திலும் ஐந்து நிமிஷம் போய்விட்டால் குறிப் பிட்ட நேரத்திற்கு மற்ற இடங்களுக்குப் போவது எப்படி? அங்கே சுற்றியிருப்பவர்களுக்கு அந்தக் கவலேயே இல்லே. தாங்கள் எவ்விதத்திலும் காந்தி யைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஓர் அவாவைத் தவிர வேறு எண்ணம் இல்லே. இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் காந்தி என்கிற வயசு முதிர்ந்த பல் இழந்த ஒரு மனிதர் மகாத்மா என்ற பெயருக்காகப் பொதுஜன அன்பிஞல் பட்ட கஷ்டம் நேரில் இருந்த வர்களுக்குத்தான் தெரியும். சில கூட்டங்களில் சிறு பண முடிப்புகளும் கிடைக்கும். சில இடங்களில் கதர் மாலேயும் எலுமிச்சம்பழமும் மாத்திரந்தான். எல்லா இடங்களிலும் ஆரஞ்சுப்பழம் தட்டுத் தட்டாக வரும். அவைகளே நாங்கள் வாங்கிச் சேகரித்துக்கொண்டு போஞல் அவைகளேச் சுமக்க எங்களுடன் பின்ஞலேயே ஒரு பஸ் வந்துகொண் டிருக்க வேண்டும்.

இந்தப் பாரத்தை ஒழிக்க வேண்டி அந்த அந்த இடத்திலே உள்ள ஹரிஜனக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிடும்படி காந்திஜி அங்கங்கே திருப்பி விடுவார். சில இடங்களில் திருப்பி வாங்க மாட் டோம் என்று அப்படியே காரில் எங்கள் காலடியில் கவிழ்த்துவிட்டுப் போய்விடுவார்கள். அநேகமாய் ஜனங்கள் வழியைக் குறுக்கிட்டு மறிக்காவிட்டால், நாங்கள் வேகமாகவே காரை விட்டுக்கொண்டு

போய்விடுவோம். அப்படி அவசரமாகப் போகை யில் கூட்டத்தில் எவர் எவர்கள் கண்ணுக்கு யார் யார் காந்தியாகத் தோன்றுவார்களோ அவரவர் கள் காந்திதான். தக்கர் பாபா, காந்திக் குல்லாய் அணிந்து கோட் போட்டுக்கொண்டிருந்ததால் ஜனங் களில் பெரும்பாலார் அவரைக் காந்தி என்று எண்ணிக்கொள்வதில்லை. மேலே கதர் ஆடையைப் போர்த்துக்கொண்டு மொட்டைத் தலையாகப் பிச்சுக் குடுமியோடு காரில் யார் இருந்தாலும் அவர் கள் காந்திக்கு 'ஆக்டிங்' வேலை பார்த்துவந்தார்கள். உண்மைக் காந்தி உறங்கிக்கொண் டிருக்கும் சமயங் களில் அப்படி எங்களுக்கெல்லாம் காந்தி பரிவட் டம் கிடைத்தது.

* * *

தென்காசியிலிருந்து திருநெல்வேலி, பாளை யங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம் வழியாகத் தூத்துக்குடி போகவேண்டும். தூத்துக்குடி ஐந்து மணிக்குப் போய்ச்சேருவதாக ஏற்பாடு. ஸ்ரீவைகுண் டம் வருகிறபொழுதே மணி ஆறு ஆகிவிட்டது. மேலும் அந்த ஊரிலே நிற்க வேண்டிய முன்னேற் பாடும் இல்லை. ஆகையால் நேரமாயிற்றே என்கிற கவலையினால் மோட்டாரை வேகமாகவே விட்டுக் கொண்டு வந்தோம். அந்த ஊர்க் கடைத்தெரு தாண்டியதும் சாலையில் மாவிலைத் தோரணங்கள் கட்டிய வளைவின் மத்தியில் ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. கார் வேகமாக வந்துகொண் டிருந்தமையால் காரின் முன் பக்கத்தில் உட்கார்ந்

திருந்த நான் எழுந்து கூட்டத்தை விலகி வழிவிடும் படி கையைக் காண்பித்தேன். கார் சமீபத்தில் வருவல் வரையில் குறுக்கே நின்றுகொண் டிருந்தவர் கள் இனி வண்டி நிற்காது என்பதாக ஐயமுற்றுத் திடீரென ஒதுங்கினார்கள். ஆனால் அப்படி அவசர மாக ஓடியபோது குறுக்கே போட்டிருந்த பெஞ்சு, உருண்டைப் பாறைகள் இவைகளை எடுக்க நேரமில் லாமையால் வேகமாக வந்த கார் அவைகளின்மேல் மோதி, முன் பின்னாகத் தாண்டி, நான்கு கஜ தூரத் திற்கு அப்பால் போய்த் தொப்பென்று விழுந்தது. ஆனால் இந்தத் தடைகளினாலும் நிற்காமல் போய் விட்டது. பின் பக்கத்தில் தூங்கிக்கொண் டிருந்த காந்திஜி திடீரென விழித்து என்னவென்று கேட்க, நடந்ததைச் சொன்னோம். அன்றைத்தினம் எல் லோரும் தலை குப்புற விழுந்து யமபுரம் போய்ச் சேர்ந்திருக்கவேண்டும்; தப்பினோம். ஆனாலும் காரை நிறுத்துவதற்குப் பயம். நிறுத்தினால் எங்கே ஓரத் தில் ஒதுங்கிய கூட்டம் திரும்பவும் வந்து சூழ்ந்து கொண்டு விடுமோ என்கிற பீதியில் திரும்பிப் பார்க் காமல்கூட ஓட்டம் பிடித்தோம். பிறகு இரவு தூத்துக்குடியில் ஸ்ரீவைகுண்டம் நண்பர்கள் முப்பத் தெட்டு ரூபாய் கொண்ட பண முடிப்பும், கண் ணாடி போட்ட ஒரு வரவேற்புப் பத்திரமும் கொண்டு வந்து கொடுத்தார்கள். வழியில் அவர்கள் தடுத்தது இதற்காகத்தான்.

ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் ஒரு முஸ்லிம் கிராமம். அதில் ஒரு சிறிய பணமுடிப்பும் வர

வேற்புப் பத்திரமும் கொடுப்பதற்காக நடு ரோட்டில் காரை நிறுத்திவிட்டார்கள். பண முடிப்பை முதலில் கொடுத்தார்கள். பிறகு காரின் படியின் மேல் ஏறி நின்றுகொண்டு ஒரு நண்பர் வரவேற்புப் பத்திரம் படிக்க ஆரம்பித்தார். "படிக்க வேண்டாம்; கையில் கொடுத்து விடுங்கள். எங்களுக்கு நேரமாகிறது" என்று வற்புறுத்தியும் அவர் கேட்கவில்லை. ஆனால் கார் புறப்பட்டுவிட்டது. போகிற வேகத்தில் படியிலேயே நின்றுகொண்டு கையால் எழுதிய அந்த வரவேற்புப் பத்திரத்தைப் படித்து முடித்து அவர் மட்டும் ஒரு மைல் அப்பால் வந்து காரை விட்டு இறங்கினர்.

கடைசியாகத் தூத்துக்குடி வந்து சேரும் போது இருட்டுகிற சமயம். ஒரு மைல் தூரத்திற்கு மேலாகத் திரள் திரளாக ஜனக்கூட்டம்! தெருக்கள், வீடுகள், மேல் மெத்தைகள், கூரைகள், மரங்கள் எல்லாவற்றிலும் மனிதர்கள்! தெருவில் கார் போவதற்குக்கூட இடமில்லை.

ஹரிஜனங்களுக்காகத் திறந்து விடப்பட்ட விநாயகர் ஆலயத்தின் முன்பாகத் தீப ஆராதனை செய்து, காந்தியடிகளுக்குப் பூரண கும்பம் சமர்ப்பித்தார்கள். அங்கே கார் சற்று நிற்க வேண்டியதாயிற்று. உடனே அவ்வளவு கூட்டமும் காரின் மேல் வந்து விழுந்தது. பூர்ண கும்பம் போன இடம் தெரியாமற் போய்விட்டது. என் நண்பர் மாசிலாமணிப் பிள்ளை தொண்டர் தலைவர் என்கிற முறையில் மோட்டார்ச் சக்கரத்தினடியில் அகப்பட்டு

அவதிப்படும்படியாக இருந்த சமயம் நல்ல வேளையாகத் தப்பித்துக்கொண்டார். நிறுத்தினால் மறுபடி இதே போல விபத்து ஏற்படுமோ என்ற பயத்தினால் வேகமாகவே அந்த மனிதக் கும்பலைப் பிளந்துகொண்டு சென்றோம். ஸ்ரீமான் வீரபாகுப் பிள்ளை அவர்களின் புதிய மாளிகையில் சற்றுத் தங்கி, அடிகள் ஆரஞ்சுப் பழச் சாற்றை அருந்தினவுடன் பொதுக்கூட்டத்திற்குப் போனோம்.

கூட்டத்தின் ஏற்பாடுகள் வெகு அழகாக இருந்தன. சுமார் மூந்நூறு எலக்டிரிக் விளக்குகள் அலங்காரமாகப் போடப்பட்டிருந்தன. பெரிய மேடையின் மேல் ஒலிபரப்பும் கருவி அமைக்கப்பட்டிருந்தது. முப்பதினாயிரம் ஜனங்களுக்கு மேற்பட்ட ஆண் பெண் அடங்கிய திரளைக் கண்டோம். மேடையின்மீது அமர்ந்த உடனே காந்திஜி என்னைக் கூப்பிட்டார். "இவ்வளவு விளக்கு அலங்காரம் எல்லாம் யாருடைய செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? ஏழை ஜனங்களிடம் வசூல் செய்த பணத்தைக் கொண்டா? இதன் விஷயம் தெரியும் வரையில் நான் கூட்டத்தை ஆரம்பம் செய்ய மாட்டேன்" என்று சொன்னார். இனமாக எலெக்டிரிக் கன்டிராக்டர்கள் செய்த உபயமென்று கூறிய பிறகுதான் ஒருவாறு சமாதானமடைந்து கூட்டத்தை நடத்த ஆரம்பித்தார். வரவேற்புப் பத்திரங்கள், பணமுடிப்புகள், நகைகள் இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு கடைசியில் பேசும்பொழுது எலெக்டிரிக் கன்டிராக்டர்களுக்குத் தமது நன்றி

யைச் செலுத்திவிட்டுப் பிரசங்கத்தை முடித்தார்.

அன்றிரவு படுக்கப் போகும்போது, "காரிய தரிசியிடமிருந்து வரவு செலவு நகல் ஒன்று எனக்கு வேண்டும். அது வரும் வரையில் எனக்குத் தூக்கம் பிடிக்காது" என்று சொன்னார். உடனே சுமாராக ஒரு கணக்குத் தயாரிக்கச் செய்து அடிகளிடம் சமர்ப்பித்தேன். கணக்கின் முக்கிய அம்சம் இதுதான். மொத்தம் வசூலித்த தொகை ரூபாய் 2600; அதில் சுமார் 500 ரூபாய் செலவழிந்தது போக, பாக்கி பணமுடிப்பாகக் கொடுக்கப்பட்டது. அதைப் படித்தார். ஐந்தில் ஒரு பாகம் செலவிடுவது நியாயமில்லை என்பதாகவும் நூற்றுக்கு ஐந்திற்கு மேலாகச் (இருபதில் ஒரு பங்கு) செலவுகள் ஏற்படக்கூடாதென்றும் கூறி, பொதுப்பணம் வசூலிப்பதைப் பற்றியும், அதைப் பொறுப்புடன் செலவு செய்வதைப் பற்றியும் அன்றிரவு ஒரு மணி நேரம் எனக்கு உபதேசம் செய்தார். இரவில் மழையின் உபத்திரவம் ஒரு பக்கம், ஸ்ரீவைகுண்டத்தில் வைகுண்டம் அடையாது தப்பி வந்த அதிர்ச்சி ஒரு புறம், பொது நிதி வரவு செலவில் சிக்கனமுறை உபதேசம் மற்றொரு புறம் - இவைகளுக்கிடையே உறக்கமென்பதைத் துறந்து, அன்று நடந்தவைகளை யெல்லாம் மாறி மாறிக் கனவு கண்டு புரண்டுகொண் டிருந்தேன்.

# 3. ராஜபாளையம் - விருதுநகர்

ஹரிஜன சேவை செய்யாவிடில் உயிருடன் இருக்க முடியாது என்று உண்ணுவிரதம் பூண்ட காந்தியடிகளுக்குத் தீண்டாமை ஒழியவேண்டும் என்ற தியானம் ஒன்றைத் தவிர வேறு எண்ணமே இல்லை. இப்படிக் கவலை கொண்ட அவர் மனத்தில் பீஹார் விபத்தைப்பற்றிய துயரமும் குடியேறி யது. திருநெல்வேலியில், பூகம்ப விபத்தின் விவரங்கள் தெரிந்தது முதல் ஹரிஜன நிதி திரட்டுவதோடு பீஹார் கஷ்டத்திற்கும் தம்மாலியன்ற அளவு உதவி செய்யவேண்டும் என்ற கவலை அடிகள் உள்ளத்தைக் கவர்ந்தது. ரெயிலில் பிரயாணம் செய்தபோதிலும் சரி, ரோட் மார்க்கமாகக் காரில் போகும்பொழுதும் சரி, கூட்டமாக ஜனங்களைக் கண்ட இடத்திலெல்லாம், "பீஹார் நிதிக்கும் பணம் கொடுக்க வேண்டுமே; கொடுத்தீர்களா? எவ்வளவு கொடுத்தீர்கள்?" என்ற கேள்விகள் தாம். "ஜனகன் அரசு புரிந்த தேசம்; சீதை பிறந்து, வளர்ந்து, ராமாயணத்தைப் பாரத நாட்டுக்கு அளித்த தேசம்; பாபு ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் புனித தேச பக்தியுடன் தொண்டு செய்யும் நன்னாடு; இப்பேர்ப் பட்ட சிறப்புகள் வாய்ந்த அந் நாட்டில் தீண்டாமை என்னும் தீய வழக்கத்தைத் தெய்வத்தின் பெயரா

லும் சாஸ்திரத்தின் பெயராலும் கைப்பற்றி, மனிதர்களுள் ஒரு சாராரை மிருகங்களைக் காட்டிலும் கேவலமாக நாம் நடத்திவரும் அநியாயத்திற்காகவே ஈசன் பூமி அதிர்ச்சியை அனுப்பினார்" என்பதாக ஓயாது சொல்லிக்கொண்டார்.

தூத்துக்குடியில் அன்றிரவு முழுதும் ஓயாமல் மழை; சாரல் காற்று. குளிரும் அதிகம். மறு நாள் காலை சற்று இருளாக இருக்கும்போதே வீரபாகுப் பிள்ளை வீட்டை விட்டுப் புறப்பட்டோம். போல்டன்புரம் முதலிய சேரிகளைப் பார்வையிட்டுக் கொண்டு எட்டையாபுரம் வழியாகக் கோயில்பட்டி, சங்கரன் கோயில் முதலிய இடங்களில் காரில் இருந்தபடியே கூட்டங்களுக்குச் சிறு பிரசங்கங்களைச் செய்து பண முடிப்புகளையும் பெற்றுக் கொண்டு, குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி நேரம் பிந்தி ராஜபாளையம் போய்ச் சேர்ந்தோம்.

* * *

ராஜபாளையம் ஒரு பெரிய கிராமம். பாண்டிய நாட்டைத் தெலுங்கர்கள் ஆண்ட காலத்தில் குடியேறிய க்ஷத்திரிய ஜாதியார்களின் சந்ததியார்கள் பெரும்பாலோர் அங்கே இருந்து வருகிறார்கள். ராஜபாளையம் தமிழ்நாட்டில் வேட்டை நாய்களுக்குப் பெயர்போனது என்பதாகச் சிறு வயசு முதல் எனக்குக் கேள்வி உண்டு. அது ஒரு மலையடிவாரம். கம்பங் கூழ் உண்டு உடல் வலிமை பெற்றவர்களுடைய நாடு. அந்த ஊர் நாய்களுக்குக்

கூட ரோஷம் உண்டு என்றால் மனிதர்களுக்குக் கேட்பானேன்?

ராட்டை சுற்றுதல், கதர் நெசவு செய்தல், கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி முதலிய தொண்டு களில் அவர்கள் தீவிரமாய் ஈடுபட்டவர்கள். வேதாரணியம் முதலிய இடங்களில் நடந்த உப்பு சத்தியாக்கிரகம் இவைகளில் அவ்வூர்த் தொண்டர்கள் அநேகர் கலந்துகொண்டார்கள்; சிறை சென்றார்கள். இவர்களுக்கெல்லாம் தலைமை பூண்டு, காந்திஜியிடத்தில் பக்தி நிறைந்த ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவினுடைய வீட்டில் அன்று பகல் தங்கினோம். கூட்டம் முடிந்து வீடு செல்லப் பன்னிரண்டு மணி அடித்தது. பிறகு ஸ்நானம், சாப்பாடு முதலியவைகளை முடித்துக்கொள்வதற்குள் வருண பகவானுடைய ஆவேசம் ஆரம்பித்து விட்டது. இதன் மத்தியில் விருதுநகர் பிரபல தேசத் தொண்டர்கள் ஸ்ரீமான்கள் காமராஜ், முத்துசாமி இவர்கள் அடிகளைப் பேட்டி கண்டார்கள்.

ராஜபாளையத்தை விட்டு மூன்று மணிக்குப் புறப்படுவதாக ஏற்பாடு. இரண்டரை மணிக்கு மழை ஓய்வதாகத் தெரியவில்லை. காந்திஜி ஏறி வந்த காரின் மேல்மூடியை ஜனங்கள் பல இடங்களில் பிடித்து இழுத்துக் கிழித்துவிட்ட படியால் மழை தாங்க முடியாமல் போய்விட்டது. கூட வரும் படியாக ஏற்பாடு செய்திருந்த அஞ்சல் மூடு மோட்டார் காரும் தூத்துக்குடியிலேயே தகரார் செய்து

தனால் எங்களுடன் வராமல் நேராக மதுரை போய் விட்டது. மதுரையிலிருந்து ஸ்ரீ வைத்தியநாதையர் அனுப்பியிருந்த ஒரு வாடகை மோட்டார் மாத்திரம் கூடிய மட்டும் ஒழுகாமல் இருந்தது. சரியாகப் பகல் மணி இரண்டரைக்கு அடிகள் என்னைக் கூப்பிட்டு, "இப்பொழுது புறப்படுவதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்றதும், சரி என்கிற பதிலைத் தவிர வேறு ஒன்றுக்கும் என் நா எழவில்லை. பின் பலகையில் அடிகள் மாத்திரமும், முன் பலகையில் நானும் குமாரசாமி ராஜாவும் வண்டியோட்டியுமாக உட்கார்ந்துகொண்டோம். கண்ணைத் திறக்க விடாமல் மழை. மோட்டார் ஓட்டுவதற்கே வழி புலப்படவில்லை. மழையைக் காட்டிலும் காற்றின் வேகம் அதிகம். நாங்கள் உட்கார்ந்திருந்த பலகைக்குப் பக்கப் படுதா இல்லை. காந்திஜி இந்த மழைக்கு நடுவில் பின் பக்கத்தில் படுத்து உறங்கிவிட்டார். அவர்மீது மழை பெய்யாமலிருக்க வேண்டி நானும் குமாரசாமி ராஜாவும் எங்கள் பேரிலிருந்த கதர் அங்கவஸ்திரங்களைக் குறுக்கில் கட்டி மூடிவிட்டோம். கார் மணிக்குப் பத்து மைலுக்கு மேல் போக முடியவில்லை. இருபத்திரண்டு மைல் தூரத்திற்கு அப்பால் சிவகாசி. அவ்விடம் 3½ மணிக்கு முன்னதாகப் போய்ச் சேர வேண்டும். மழையோ, எதையும் லக்ஷ்யம் செய்யாமல் பிரயாணம் செய்பவர்களின் மேல் கோபங்கொண்டு ஒரு கை பார்த்துவிடுவதாகத் தீர்மானித்துவிட்டது.

* * *

சிவகாசி போய்ச் சேரும்பொழுது மணி 4½. 'இந்த மழையில் யார் இருக்கப் போகிறார்கள்? கூட்டம் எங்கே நடக்கப் போகிறது? நேரே விருது நகர் போகவேண்டியதுதான்' என்பதாக நாங்கள் மனோராஜ்யம் செய்துகொண் டிருந்தபொழுது அவ்வூர்க் கடைத்தெரு வந்து சேர்ந்தோம். இரண்டு பக்கங்களிலும் வரிசை வரிசையாகக் கார் போவதற்குக்கூட இடமில்லாமல் கொட்டும் மழையில், ஆயிரக்கணக்கான ஆண் பெண் அடங்கிய ஜனங்கள், "காந்தியைப் பார்க்கவேண்டும்; கார் மூடி யிருக்கிறதே" என்று காத்திருந்தனர். அவர் இருக்கும் இடமும், கார் போகும் வேகமும் இரண்டும் சேர்ந்ததில் அவர் தரிசனம் யாருக்கும் கிடைக்கவில்லை.

கூட்டம் நடக்கவேண்டிய பள்ளிக்கூட மைதானத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். அந்த மழையில் சுமார் நாலாயிரம் ஜனங்கள் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு நிற்கிறார்கள். இடையில் அலங்கரிக்கப்பட்ட சிறிய பந்தல்; அந்தப் பந்தலின் மத்தியில் கார் நிற்க வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கீழே முழங்கால் மட்டும் மழைத் தண்ணீர்; அதற்கு அடியில் ஓர் அடி ஆழம் புதையும் மண்; மேலிருந்து ஓயாது பெய்யும் மழை! மழைக் குழப்பம், கூட்டத்தின் குழப்பம், கார் மூடி யிருக்கும் குழப்பம்! இந்தச் சமயத்தில் ஓயாமல் போட்டோ பிடித்துக்கொண் டிருந்த நண்பர்களில் யாரையும் காணவில்லை.

காந்திஜி எங்கே போனாலும் அவருக்குத் தேவை

யான பந்தோபஸ்துச் செய்ய வந்துகொண் டிருந்த போலீஸ்காரர்கள் கூட இங்கே காணப்படவில்லை. எங்கள் வண்டியைத் துரத்தியே பின்பற்றி வந்து கொண்டிருந்த போலீஸ் சுருக்கெழுத்துக்காரர்கள் கூடக் கண்ணுக்குத் தென்படவில்லை. எங்கள் கார் பந்தலுக்குள் போகமாட்டாமல் அதற்கு இருபது அடி தூரத்திலேயே மண்ணிலும் தண்ணீரிலும் அகப்பட்டு நகர முடியாமல் நின்றுவிட்டது. உடனே அங்கிருக்கும் ஜனத்திரள் பூராவும் எங்கள் காரின் மேல் வந்து சாய்ந்தது. காரின் மேல்மூடி யெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. சிவகாசி மக்கள் திடகாத்திரம் உள்ளவர்கள் என்று அன்றுதான் நிதரிசனமாகக் கண்டேன். கறுத்த மேனி, திறந்த உடல், விரிந்த தலை மயிர், ஈர உடை, மழை நீர் தலையிலிருந்து தாரைதாரையாக ஓடு கிறது. இதனிடையே வாய் ஓயாமல், "காந்திக்கு ஜே" என்ற பேரமளி. கார் முன் பின் போக முடியாமல் நிற்கும் காட்சி. இதன் மத்தியில் வண்டி ஓட்டி, "ஐயோ! கார் தொலைந்தது" என்று பிரலாபிக்கலானான்.

இப்படி அரைமணி நேரம் ஆயிற்று. சற்றுப் பொறுப்பாளிபோலத் தோன்றிய ஒருவர் என் கையில் ஒரு பணமுடிப்பைக் கொடுத்துத் தொகை இன்னதென்பதையும் தெரிவித்தார். அவர் திரும்பவும் கூட்டத்தை விட்டுத் தப்பியது பிரம்மப் பிரயத்தன மாய்விட்டது. இதன் மத்தியில் அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தல், கூட்டத்தால் தள்ளப்

பட்டுச் சாய்ந்து எங்கள் காருக்கு முன்பாக விழுந்தது. எவ்வளவு சொல்லியும் கூட்டம் வழிவிடவில்லை. மூன்று தரம் வண்டி புறப்படுவதற்கு முயன்றும் பயனில்லை. மணி ஐந்தாகிவிட்டது. இவ்வளவிற்கும் மனங்கலங்காது என்றும் காணாத அமைதியுடன் காந்திஜி தாம் இருந்த இடத்திலேயே வீற்றிருந்தார். அன்றைத்தினம் ஸ்ரீமான் குமாரசாமி ராஜா தமது க்ஷத்திரிய தர்மத்தைச் சிறிது காண்பித்தார். தாம் போட்டிருந்த சட்டை நனைந்து சேற்றினால் நாசமாகி விட்டபடியால் அதைக் களைந்துவிட்டு, வண்டியிலிருந்து கூட்டத்தில் குதித்தார். பந்தலிலிருந்து கீழே விழுந்து கிடக்கும் ஐந்தடி நீளமுள்ள தடியை எடுத்துக்கொண்டு சுழற்ற ஆரம்பித்தார்.

அதைக் கண்டதும் தடி சுழற்றும் பழக்கமுள்ளவர்கள் அந்தப் பந்தலிலிருந்த மிஞ்சிய தடிகளைப் பிடுங்கிக்கொண்டு சுழற்ற ஆரம்பித்தார்கள். இதன் பயனாக வண்டியை முற்றுகையிட்டிருந்த மனிதக் கோட்டை மதிலின் ஒரு புறத்தில் திறப்புக் கண்டது. சிலம்பம் பழகுபவர்களுக்குள் ஒருவரால் ஒருவருக்கு அடி. குமாரசாமி ராஜாவிற்குக் கைவிரல், கால் முதலியவைகளில் அடிபட்டது. கூட்டத்தில் அவர் இருந்த இடமே தெரியவில்லை. அவர் கையில் போட்டிருந்த வைர மோதிரம் அன்று சிவகாசி யுத்தகளத்தில் விழுந்து மறைந்து போய்விட்டது. காருக்கு எல்லாப் பக்கத்திலும் அடி. ஒருபுறம் சற்றுக் கூட்டம் வழி விடுவதாகத் தெரிந்தவுடனே, அழுதுகொண் டிருக்

கும் மோட்டார் ஓட்டியைத் தைரியப்படுத்தி, "உடனே புறப்படு! இதுதான் சமயம்" என்று சொன்னதும் அவன் உடனே வண்டியைத் திருப்பி இஞ்ஜினை வேலைசெய்ய விட்டான். காரும் புறப்பட்டது. தப்பினால் போதும் என்கிற எண்ணத்துடன் பாதை எங்கே போகிறதென்பது கூடத் தெரியாமல் வேகமாய் வண்டியை விட்டுக்கொண்டு சென்றோம்.

*　　　*　　　*

நூறு கஜத்திற்கு அப்பால் குமாரசாமி ராஜா மேல்மூச்சு வாங்கிக்கொண் டிருந்தார். அவரையும் காரில் ஏற்றிக்கொண்டு புறப்படும் சமயத்தில் ஒரு பஸ் நிறைய ரிஸர்வ் போலீஸ் எங்கள் உதவிக்கு வருவதைக் கண்ணுற்றோம். தப்பி வந்த எங்களைக் கண்ணுற்றதும் அவர்களும் திரும்பிவிட்டார்கள். ஊருக்கு அப்பால் இரண்டு மைல் தூரம் வந்து எங்கள் ஈர உடைகளை யெல்லாம் களைந்து பிழிந்து கொண்ட பிறகு புறப்பட்டோம். அதிக மழையினால் நாங்கள் உத்தேசித்திருந்த பாதை வழியாகப் போவதற்கு முடியாமல், பதினைந்து மைல் சுற்றிப் போகவேண்டியதாயிற்று. சற்று ஓய்வதுபோலிருந்த மழையும் திரும்பிவிட்டது. மோட்டார் ஓட்டி தனது வண்டிக்கு ஏற்பட்ட ரிபேர்களைப்பற்றி ஓயாமல் அழுதுகொண்டே ஓட்டிக்கொண்டு சென்றான். எங்கள் வண்டியின் பரிதாப நிலையைக் கண்ட போலீஸ் அதிகாரியும் கருணையுடன் காந்தியடி

களுக்குத் தம்முடைய வண்டியில் இடங் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் காந்திஜி அதை வந்தனத்துடன் மறுத்துத் தம் ஓட்டைக் காரிலேயே வருவதாகச் சொல்லி விட்டார். நாலு மணிக்கு விருதுநகர் சேர வேண்டியவர்கள் ஆறரை மணிக்கு அவ் ஊருக்கு இரண்டு மைலுக்கு அருகில் வரும்பொழுது எங்களை எதிர்கொண்டு ஒரு காரில் காமராஜ நாடார் வந்து சேர்ந்தார்.

எங்களை நிறுத்தி, "விருதுநகரில் ஊர் கொள்ளாமல் ஐம்பது கிராமங்களினின்றும் லக்ஷக் கணக்காகக் கூட்டம் கூடியிருக்கிறது. தெருவில் வண்டி போவதற்கு வழியில்லை. பகல் ஒரு மணி முதல் கூட்டம் காத்துக்கொண் டிருக்கிறது. நீங்கள் இவ்விடமுள்ள இந்தச் சிறிய பங்களாவில் தங்கி, நனைந்து ஈரமாயிருக்கும் உடைகளைக் காய வைத்துக்கொண் டிருங்கள். நாங்கள் போய்க் கூட்டத்தைக் கலைத்துவிட்டுப் பணமுடிப்பை இவ்விடம் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறோம். நீங்கள் விருதுநகரில் தங்காமல் தெரு வழியாகப் போய் விடலாம்" என்று சொன்னார்.

மறுபடியும் சிவகாசி அநுபவம் கிடைக்குமோ என்ற அச்சத்துடன் நாங்களும் அந்தச் சிறு பங்களாவிலேயே தங்கினோம். இருட்டும் சமயம் நெருங்கிவிட்டபடியால் அடிகளுக்கு அன்புடன் மீராபென் அவர்களால் கொடுக்கப்பட்ட பால்கோவாவையும் கிச்சிலிப்பழத்தையும் அவருக்கு அளித்தேன். அவர், "என்னுடன் நீங்கள் இருவரும் சமபந்தி போஜனம்

செய்யலாம். மிகவும் அருமையான தின்பண்டங்கள்" என்று சொன்னதும், கிடைத்த பால்கோவாவையும், கிச்சிலிப் பழத்தையும் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டேன். பாவம்! குமாரசாமி ராஜா பால்கோவாவை வாயில் போட்டார். ஒரு துளி கூட அவருக்கு நெஞ்சில் இறங்கவில்லை. "என்ன டாக்டர், இந்தக் கோவாவை மகாத்மாதான் சாப்பிட வேண்டும். நம்மைப்போன்ற சாமானிய மனிதர்கள் விழுங்க முடியாது" என்று கூறிக் கீழே வைத்துவிட்டு ஒரு கிச்சிலிப்பழத்தை மாத்திரம் சாப்பிட்டார். மிஞ்சிய ஆட்டுப் பாலைக் காய்ச்சி, உருட்டி, இனிப்பு ஒன்றும் இல்லாத அழுக்கடைந்த மண் கட்டி போல் இருப்பதுதான் காந்திஜியின் பால் கோவா! நானும் விழுங்கிப் பார்த்தேன். பாதி உருண்டை விழுங்கினேன். அதற்குமேல் முடியவில்லை.

மணி ஏழாயிற்று; திரும்பி வருவதாகப் போன பேர்வழிகள் திரும்பக் காணவில்லை. பிரார்த்தனையை முடிப்போம் என்று காந்திஜி சொன்னவுடன் அன்றைத் தினம் எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவில்லை. ஒருவேளை சிறைவாசத்தில்கூட இவ்வளவு ஏகாந்தமான பிரார்த்தனை காந்திஜி செய்திருப்பாரோ என்ற எண்ணம் உதித்தது. இன்றைக்கு நானும் குமாரசாமி ராஜாவுந்தான் காந்திஜியின் பிரார்த்தனையில் இருந்தோம். ஆனால் குமாரசாமி ராஜாவிற்கு ஸாபர்மதி ஆசிரமப் பிரார்த்தனைப் பழக்கம் இல்லை. வேலூர்ச் சிறையிலிருக்கும்

காலத்து நாங்கள் காலை மாலை இரண்டு நேரத்திலும் ஆசிரம பஜனாவளி செய்து வந்த முறை மறக்க வில்லை. 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்னும் பல்லவியை மீராபென் அவர்களுடைய சுருதி இல்லாமல் நானும் காந்திஜியுமாக அன்றைக்குப் பாடினோம். நிகழ்ச்சி முறையில் தினந்தோறும் காலை நேரத்தில் காந்திஜிக்கு அரைமணி நேரம் தேகப் பயிற்சிக்காக நடக்க வேண்டுமென்கிற விஷயம் அச்சிடப்பட்டிருந்தது. ஆனால் அது சரிவர நடைபெற முடியவில்லை. வீட்டை விட்டு வெளியே தலையை நீட்டியதும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் துரத்திக் கொண்டு வந்தால், தேகப்பயிற்சிக்காக எவ்விதம் நடக்க முடியும்? இதற்காகத் தங்கியிருக்கும் இடத்தை விட்டு மூன்று நான்கு மைலுக்கு அப்பால் காரில் போய்ப் பிறகு நடக்கவேண்டும். அப்படிப் போய் வருவதற்குள் குறிப்பிட்ட அரைமணி நேரம் கடந்துவிடும். இந்தக் காரணத்தைக் கொண்டே இந்த இரண்டு நாட்களும் மேற்படி நிகழ்ச்சி காகிதத்தில் மட்டும் இருந்துவந்தது.

"நீ போட்டிருக்கும் நிகழ்ச்சி பொய் ஆகக் கூடாது. ஆகையால் புறப்படு! ஒரு மைல் தூரமாகிலும் நடந்துவிட்டு வரலாம்; மழையும் சற்று நின்றிருக்கிறது" என்று அடிகள் சொல்லியதும் இருவரும் நடந்து சென்றோம். சுமார் அரை மணி நேரம் நடந்து திரும்பியதும் விருதுநகரிலிருந்து போலீஸ் அதிகாரிகளும், வரவேற்புச் சபை அங்கத்தினர்களில் சிலரும் வந்தார்கள். கூட்டம் அநேக

மாய்க் கலைந்துவிட்டது. "இனி வந்தால் அதிக இடையூறு இல்லாமல் கூட்டம் நடத்தலாம்; பண முடிப்பை அவ்விடமே கொடுக்கிறோம்" என்று அவர்கள் சொன்னதன் பேரில் இரவு எட்டு மணிக்கு வீருதுநகர் போய்ச் சேர்ந்தோம். இந்த நேரத்தில் கூடப் பத்தாயிரம் ஜனங்களுக்கு மேலாகக் காத்திருந்தனர். பதினைந்து நிமிஷத்தில் அங்கே வேலையை முடித்துக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டோம்.

* * *

மதுரைக்கு ஆறு மணிக்கு வருவதாக ஏற்பாடு. மணி 8½ ஆகியும் முப்பது மைலுக்கு அப்பால் தெற்கே இருந்தோம். போகும் வழியில் மூன்று இடத்தில் கூட்டம்; நான்காவதாக மதுரை. எவ்வளவு வேகமாகப் போகக் கூடுமோ அவ்வளவு வேகமாகச் சென்றோம். திருமங்கலத்தில் 5½ மணிக்குக் காந்தியடிகளுக்கு ஆகாரம் எனக் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு ஏற்ப, பகல் இரண்டு மணிக்கே ஸ்ரீமதி ஜோஸப் (மதுரை பாரிஸ்டர் ஜோஸப் மனைவி) தம் மகளுடன் அவ்வூர்ச் சத்திரத்தில் அடிகளுக்குத் தேவையான உணவைத் தயாரித்துக் காத்திருந்தார். காந்திஜி வராமையால் இனி அவருக்கு உணவு பயன்படாதென்பதை அறிந்த அம்மாள் தம் மகளுடன் பொதுக்கூட்டத்தில் நின்றுகொண் டிருந்தார். மழையின் காரணமாகக் கூட்டத்தில் ஒருவரும் உட்கார முடியவில்லை. ஸ்ரீமதி ஜோஸப் அவர்களைக் கண்ட நான், காந்திஜியிடம் அவர்கள்

வந்திருப்பதைச் சொன்னவுடனே அவர்களை அடிகள் கூப்பிட்டார். தமது பக்கத்தில் உட்காரவைத்து அன்புடன் பேசியதும், அம்மாளின் இரு கண்களினின்றும் அன்பின் ஆர்வம் பெருக, காணாது கண்டவரைப் போல் உள்ளம் உவந்தார்; தம் மகனையும் ஐயன் ஆசீர்வதிக்கப் பெற்றார்.

# 4. மதுரை - செட்டிநாடு

மதுரை சேர்வதற்குப் பத்து மைல் இருக்கலாம். வக்கீல் வைத்தியநாதையருடைய உரத்த குரல் எதிரில் வந்துகொண்டிருந்த வண்டியில் கேட்டது. வைத்தியநாதையர் யாரிடத்திலாவது சிறிய குரலுடன் பேசியிருப்பாரோ என்பது எனக்கு எப்பொழுதும் சந்தேகந்தான். வேலூர்ச் சிறையில் எனக்கு அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் கிடைத்தது. களங்கமற்ற மனம், கருணை நிறைந்த உள்ளம், கபடற்ற குரல், இவைதாம் அவருடைய குணங்கள். அவர் குரலைக் கேட்டதும் மதுரை வைத்தியநாதையர் வந்துவிட்டார் என்பதாகக் காந்திஜியிடம் சொன்னேன். அதே சமயத்தில் வைத்தியநாதையரும் வண்டியை விட்டிறங்கி, 'மதுரையில் கூட்டத்தைக் கலைத்துவிட்டேன். சுமார் இருபத்தையாயிரம் ஜனங்களுக்கு மேலாகச் சாயங்காலம் நாலு மணி முதல் இரவு பத்துமணி வரையில் காத்திருந்தார்கள். மழை ஒரு பக்கம். ஈரம் ஒரு பக்கம். காற்று ஒரு பக்கம். இவைகளை எல்லாம் சகித்துக்கொண்டிருந்தாலும், தாங்கள் எப்பொழுது வரப்போகிறீர்கள், எங்கே வந்துகொண்டிருக்கிறீர்கள் என்கிற சங்கதி ஒன்றும் தெரியவில்லை. எவ்வளவு நேரம் இவ்வளவு பெரிய கூட்டத்

தை நிறுத்தி வைப்பது என்பது விளங்காமல், "இன்றைத்தினம் காந்திஜி வர மாட்டார். மழையில் எங்கே அகப்பட்டுக்கொண் டார்களோ, தெரிய வில்லை. ஆகையால் நாளை தான் கூட்டம்' என்பதாகக் கலைத்து விட்டேன்" என்று தெரிவித்தார். எனவே நாங்கள் வண்டியை நிதானமாகவே ஓட்டிக்கொண்டு இரவு பன்னிரண்டு மணிக்கு மதுரை சேர்ந்தோம். அந்நேரத்தில் கூடக் காந்திஜி வந்துவிட்டார் என்கிற செய்தி பரவியவுடன் ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஸ்ரீமான் சுப்பராமன் பங்களாவைச் சுற்றிச் சூழ்ந்து விட்டார்கள். களைத்து மேல் மெத்தையில் உறங்கச் சென்ற காந்தியடிகள் தாழ்வாரத்தில் வந்து தரிசனம் கொடுத்த பிறகுதான் கூட்டம் கலைந்தது.

மதுரையில் காலை நிகழ்ச்சியில் குறிப்பிடத் தக்கது சேரிகளைப் பார்த்ததுதான். முதலில் ஒரு சேரிக்குச் சென்றோம். முன் இரண்டு நாள் மழை பெய்ததன் காரணமாகச் சேரி வருணபகவானால் ஒருவாறு சுத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் கால் ஊன்றி நடக்க முடியாமல் சிறு பாதைகளிலெல் லாம் சகதி. சேரிகளில் ரோட் போட்டிருக்குமென்று கனவில்கூட நாம் நினைக்க வேண்டியதில்லை. குனிந்து, சரீரத்தை இரட்டையாய் மடித்துக்கொண்டு உள்ளே நுழையவேண்டிய குடிசைகள்! குடிசைக்கு முன்புறம் ஐந்தடி சதுரமுள்ள திறந்த இடத்தில் துருப்பிடித்த தகரங்களால் மூடப்பட்டுப் பொறுக்க முடியாத துர்நாற்றம் கொண்ட எருக் குவியல்கள்! கூடியமட்டில் சுத்தமாக வைத்திருக்கும் சேரியொன்

றைப் பார்வையிடப் போனோம். வைகை ஆற்றில் பெருவெள்ளம். இரு கரையும் புரண்டோடியதால் சேரியின் தெருக்கள் முழங்கால் மட்டுத் தண்ணீரில் மூழ்கிக் கிடந்தன. ஆங்காங்கே காணப்பட்ட திட்டு களில் இருந்த வீடுகளைப் பார்வையிட்ட பிறகு அங்கே கூடியிருந்த வயசு முதிர்ந்த கிழவிகளுடன் மகாத்மா சிரித்துப் பேசிக்கொண் டிருந்தார்.

எங்களைப் பின் தொடர்ந்த போலீஸ் பஸ் சேற்றில் புதைந்து நாங்கள் திரும்பிப் போக இருக்கும் பாதையை மறித்துவிட்டது. அதைத் தூக்கி விட அந்தச் சேரியிலிருக்கும் ஆட்களைப் போலீசார் அழைத்தும் அவர்கள் போக மனமில்லாமல் மகாத்மாவைச் சுற்றித் தயங்கி நின்றுகொண் டிருந்தார்கள். போலீஸ்காரர்களுடைய கார் புதைந்து கிடந்ததைக் கண்ணுற்ற காந்தியடிகள் தம்மைச் சுற்றி இருந்தவர்களை ஏவ, உடனே அவர்கள் கூட்டமாகச் சென்று அந்தப் பஸ்ஸைக் கரையேற்றின பிறகே நாங்கள் புறப்பட முடிந்தது.

*　　　　*　　　　*

சுற்றுப் பிரயாணத்தில் ஸ்திரீகளுக்கெனத் தனிக்கூட்டம் ஒன்று ராஜபாளையத்தில் நடந்தது. அந்த ஊரில் ராஜா கூட்டத்தாருடைய ஸ்திரீகள் கோஷாவாக இருந்தபோதிலும் காந்தியடிகளை வரவேற்க வேண்டுமென்கிற அவாவினால், அடிகளையும் அவருடன் வருபவர்களையும் ஸ்திரீகள் கூட்டத்திற்கு விடச் சம்மதித்தார்கள். மேலும் அந்தக் கோஷா ஸ்திரீகளில் சிலர் சத்தியாக்கிரக இயக்கத்

தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள். அவர்களுடைய முயற்சியே இந்தக் கூட்டத்திற்கு முக்கிய காரணம். சுமார் இருநூறு ஸ்திரீகள் வந்திருந்தார்கள். நகைகளைக் களைந்து ஐயனடியில் சமர்ப்பிப்பது ஸ்திரீகளுக்கு வழக்கமாகி விட்டபடியால் அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவ்வீடம் அடிகளுக்கு அளிக்கப்பட்ட சாமான்களில் ஒரு வெண்கலக் குத்துவிளக்கு விசேஷமானது. தமிழ் நாட்டில் இரண்டாவதாகத் தனிப்பட்ட ஸ்திரீகளின் கூட்டம் வீருதுநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாத்மா இரவு எட்டு மணிக்கு அவ்விடம் சேர்ந்தமையால் நடைபெறவில்லை. ஆனால் அவர்கள் வசூலித்திருந்த சுமார் முந்நூறு ரூபாய் கொண்ட பண முடிப்பை மட்டும் மதுரையில் அவ்வூர் ஸ்திரீகளின் பிரதிநிதிகள் கொண்டு வந்து சமர்ப்பித்தனர். மூன்றாவது ஸ்திரீகளின் தனிப்பட்ட கூட்டம் ஒன்று மதுரையில் நடந்தது. அன்று பிற்பகல் கூட்டம் நடைபெற்ற நாடக்க் கொட்டகையில் திரண்டிருந்த மாதர் கூட்டத்தைப்போல் மதுரை நகரில் யாரும் இதுவரை கண்டதில்லை. குறைந்தது நாலாயிரம் ஸ்திரீகள் இருக்கலாம்.

ஆனால் ஓர் இடத்திலாவது மகாத்மா ஸ்திரீகளுக்கு உபதேசம் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் அந்தக் கூட்டங்களின் அமளிதான். ஸ்திரீகள் ஆயிரம் பேர் இருந்தால் நபர் ஒன்றுக்கு இரண்டு குழந்தைகள் வீதம் இரண்டாயிரம் குழந்தைகளும் இருந்தன. கூட்டம் ஒரு புறம் தள்ளவும், குழந்தை

கள் உச்சஸ்தாயியில் வீரிட்டு அலற ஆரம்பிக்கும். பாட்டிமார்கள் தங்களை இடித்தவர்களுடன் மல் யுத்தம் தொடங்குவார்கள். அடிகள் மேடை ஏறி எல்லோரையும் கை கூப்பித் தண்டனிட்டுக் கால் மணிநேரம் நின்றுகொண் டிருந்த போதிலும் பேரிரைச்சல் அதிகரிக்குமேயன்றிக் குறையாது. கூட்டத்தின் நிகழ்ச்சிகள் மொத்தம் அரைமணி நேரம். இதில் பாதி நேரம் கழிந்த பின்பும் அமளி அதிகரித்துக்கொண் டிருக்கும். ஒரு பெண்மணி வரவேற்புப் பத்திரத்தைத் தனக்குத் தானே படித் துக்கொண் டிருப்பாள். உரக்கப் படித்தாலும் இந்த மனிதக் கடலொலியில் அந்தக் குரல் அமிழ்ந்துவிடும். மகாத்மா இரண்டொரு வார்த்தை பேசுவார். ஒருவர் காதிலும் விழாது. இது பயனற்ற வேலை என்பதை உணர்ந்து நகைகளை வசூலிக்க ஆரம்பித்து விடுவார்.

சமீபத்தில் இருப்பவர்கள் கொடுப்பார்கள். சற்றுத் தள்ளியிருப்பவர்கள் கொடுக்கும் எண்ணத் துடன் முன்வரப் பிரயத்தனம் செய்துகொண் டிருப் பார்கள். அதிகத் தூரத்தில் இருப்பவர்கள் கொடுக்க எத்தனித்தாலும் முடியாதென்பதை உணர்ந்து அடிகள் திரும்பிப்போகும் பாதையண்டை தங்களுடைய காணிக்கையைக் கையில் வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள். இதற்குள்ளாகக் குறிப்பிட்ட அரைமணி நேரமும் கழிந்துவிடும்; மகாத்மாவும் புறப்பட்டுவிடுவார். போகும்பொழுது, "இரைச்சல் அதிகமாயிருப்பதால் நான் பேச முடிய

வில்லை. உங்களுடைய வரவேற்பிற்கு எனது வந்தனம். உங்களில் அநேகர் இன்னும் உங்களால் இயன்றதை ஹரிஜனங்களுக்கோ, பீகார் கஷ்ட நிவாரணத்திற்கோ கொடுக்கக் காத்திருக்கிறீர்களென்று தெரிகிறது. அவைகளை வசூலிக்க என்னுடன் வந்திருக்கும் மீராபென், உமாபென், கிஷன் பென் இவர்களை விட்டுச் செல்லுகிறேன். கொடுக்க வந்ததை அவர்கள் உங்கள் பக்கம் வரும்பொழுது தயவுசெய்து கொடுத்துவிடுங்கள்' என்று சொல்லிச் செல்வார்.

ஒரு மணி நேரம் சென்று மீராபென் நாங்கள் இருக்கும் வீட்டிற்கு வந்ததும், "எவ்வளவு வசூலித்தாய்?" என்பதாகக் காந்திஜி கேட்டதும், அந்த அம்மாள் முகத்தைப் பார்த்திருக்க வேண்டும்! "என்னால் இயன்ற மட்டும் கேட்டுப் பார்த்தேன். ஏதோ எனது கேவலமான நிலைமையைக் கண்டு மனமிரங்கி இரண்டொருவர் சிறிய தொகைகளைக் கொடுத்தார்கள். இது தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை" என்பதாக வாய்விட்டு அழமுடியாத துயரத்துடன் மீராபென் சொல்லுவார். ஆனால் உமா பென், கிஷன், பென் இருவரும் சிரித்த முகத்துடன், "பாபு! நாங்களும் கொஞ்சம் சில்லறை சம்பாதித்தோம்" என்பதாக உரத்துக் கூவிக் கொண்டு, சேகரித்ததைக் காந்திஜியின் முன்னிலையில் கொட்டுவார்கள்.

அன்று சாயங்காலம் மதுரைப் பொதுக்கூட்ட ஏற்பாடுகள் வெகு விமரிசையாக இருந்தன.

உயர்ந்த பிரசங்க மேடை! இரட்டை ஒலிபரப்புக் கருவிகள்! முப்பதினாயிரத்திற்குக் குறைவில்லாத ஜனங்கள். மூன்றில் ஒரு பாகம் ஸ்திரீகள். அமைதியுடன் அமர்ந்திருந்த அந்தக் கூட்டமே பார்ப்பதற்குரிய ஒரு காட்சியாக இருந்தது. கூட்டத்திற்குத் தகுந்த பணமுடிப்பு; அதற்கேற்ப ஸ்திரீகள் கொடுத்த நகைகள். இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல மதுரை வக்கீல் வைத்தியநாதையருடைய உரத்த குரல். மகாத்மாவின் பிரசங்கத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் என்னுடைய சுதந்தரத்தை அன்று அவருக்குக் கொடுத்தேன். ஒலி பரப்பும் கருவிகளைக் காட்டிலும் அவருடைய நாதமே அதிகம். மூன்று ஒலி பரப்பும் கருவிகள் ஒரே சமயத்தில் வேலை செய்வதுபோல் இருந்தது. மைதானத்தின் ஓரங்களில் இருந்தவர்கள்கூடத் தெளிவாகப் பிரசங்கம் காதில் விழுந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். ஐந்தரை மணிக்குக் கூட்டம் ஆரம்பமானபடியால் ஏழு மணிக்குள்ளாக அது முடிவடைந்து வீட்டுக்குத் திரும்பினோம்.

* * *

மறு நாள் சனிக்கிழமை பகல் ஒரு மணிவரை ஓய்வெடுத்துக்கொண்டு செட்டி நாட்டிற்குப் பிரயாணமானோம். ஐந்து மணிக்கு அமராவதி புதூரில் ராய சொக்கலிங்கம் அவர்கள் பங்களாவில் சாயங்கால ஆகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாத்மா ஆகாரத்திற்கு உட்கார்ந்ததும், அவரைக் காணவேண்டுமென மன்றாடிக்கொண்டு கை

ரேகை பார்க்கும் நிபுணர் ஒருவர் தம் நற்சாட்சிப் பத்திரங்களை ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு தலை வாசலில் நின்றார். அவர் மலையாளத்தார்; வயசு சுமார் இருபத்தைந்து இருக்கலாம். காந்தி அடிகள் சாப்பிடும் நேரத்தில் யாரும் அவரைத் தொல்லை செய்யாம லிருக்கும்பொருட்டு வாசல் காக்கும் வேலை எனக்கு அன்று கிடைத்தது. வேகமாய் உள்ளே நுழைய யத்தனித்த நண்பரைக் கண்டு தடை செய்து, "ஐயா, என்ன வேண்டும்? எங்கே உள்ளே வேக மாகப் போகிறீர்கள்?" என்று கேட்டேன். "மகாத் மாவைப் பார்க்க வேண்டும். நான் ரேகை சாஸ்திர நிபுணன். அநேகமாயிரம் கை ரேகைகளைப் பார்த் துப் பயிற்சி பெற்றவன். காந்திஜியின் கை ரேகை யைப் பார்க்கவேண்டும்" என்றார். அவரை அவ் விடமே இருக்கச் செய்து உள்ளே சென்று மகாத்மா விடம் சங்கதியைச் சொன்னேன். கிச்சிலிப் பழ ரஸத்தை உறிஞ்சிக்கொண்டே விஷயத்தைக் கேட்டு, "ரூபாய் ஆயிரம் கொடுத்தால் என் கை ரேகையைப் பார்க்கலாம்" என்று சொல்லும்படி உத்தரவளித் தார். ரேகை சாஸ்திரியிடம் காந்திஜியின் அபிப்பிரா யத்தைத் தெரிவித்தவுடன், "ஐயா, நானோ பிச்சைக் காரன். என்னிடத்தில் ஒரு பைசாக்கூட இல்லை. ஆனாலும் மகாத்மாவின் கை ரேகைகளைப் பார்த்தே தீரவேண்டும் என்கிற பைத்தியம் எனக்குத் தலைக் கேறிவிட்டது. நான் இந்த இடத்தை விட்டுப் போக மாட்டேனென்று மகாத்மாவிடம் சொல்லுங்கள்" என்று சொல்லி அங்கேயே உட்கார்ந்துவிட்டார்.

திரும்பவும் உள்ளே சென்றேன். சமாசாரத்தைச் சொன்னேன். "ஆயிரம் ரூபாய் கொடுத்தே தீர வேண்டுமென்கிற பைத்தியம் என் தலைக்கேறிவிட்ட தென்று சொல்லிவிடு!" என்று பதிலளித்துவிட்டார். இப் பதிலைக் கேட்ட சாஸ்திரி, காந்தியின் பைத்தியத்திற்கு முன் தமது பைத்தியம் பெயர் சொல்லாதென் பதைக் கண்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு வெளிக் கிளம்பினார்.

காரைக்குடி, தேவகோட்டை இரண்டு இடங்களில் கூட்டம் நடந்தது. செட்டிநாடு என்பதை உத்தேசிக்கையில் பண முடிப்பு அதிகம் இல்லை. ஆனால் கால நிலையைக் கவனித்துத் தன் வைசியர்கள் படும் கஷ்டத்தையும் சீர்தூக்கிப் பார்த்தால் மற்ற இடங்களுக்குச் செட்டி நாடு பின் வாங்கவில்லை என்றே சொல்ல வேண்டும். தீண்டாமை என்னும் பேய் நமது நாட்டில் பல வேஷங்களோடு உலாவு கிறது. மலையாள நாட்டில் காணாத தீண்டாமை; தமிழ் நாட்டில் தொடாத தீண்டாமை; இந்தியா முழுவதும் ஆலயம் நுழைய முடியாத தீண்டாமை; நாட்டார் நாடாகிய ராமநாதபுரம் ஜில்லாவில் ஆடை அணியாத் தீண்டாமை. அங்கே நாட்டார் என்கிற குடிமக்கள் உயர்ந்த ஜாதி; ஹரிஜனங்கள் தாழ்ந்த ஜாதி. தாழ்மைக்கு அடையாளம் அறிவீனம், வறுமை முதலிய கெட்ட பழக்க வழக்கங்களல்ல. ஆண் மக்கள் இடுப்பில் முழத் துண்டுக்கு மேல் கட்டக் கூடாது; மேலே துணி, சட்டை போடக் கூடாது; குடை பிடிக்கக் கூடாது; செருப்பு

அணியக் கூடாது; பெண் மக்கள் மார்பில் துணி போடக் கூடாது. இவைகளெல்லாம் அந்த ஊரில் தீண்டாமைக்கு அறிகுறி. நாட்டார்களுக்குள் நாட்டாண்மைக்காரர்கள் உண்டு. அப்படி முக்கியமானவர்களில் நூறு பேரைக் காந்திஜி தேவகோட்டையில் சந்தித்து ஒரு மணி நேரம் பேசினார்கள். தமிழ் நாட்டில் செய்த பிரசங்கங்களில் அன்று தேவகோட்டை வட்டம் நாட்டார்களுக்குச் செய்த உபதேசந்தான் முதன்மையானது. சொல்வன்மை மட்டுமல்ல. ஆத்ம உணர்ச்சி, ஜீவகாருண்யம், தயை, தர்மநியாயம் இவைகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, சிறு குழந்தைகளுக்குக் கூடப் புலப்படும்படியான முறையில் அன்று முக்கால் மணி நேரம் ஹரிஜனங்களின் சார்பாகப் பேசினார்கள். ஆனால் நாட்டார்களோ மனம் கரைந்ததாகத் தெரியவில்லை. வழக்கத்தை விடமுடியாது என்பதுதான் அவர்கள் முடிவு.

* * *

அன்று நடந்த ஒரு சம்பவம் பத்திரிகைகளில் மாறுபாடான எண்ணம் உண்டாக்கியதால் அதை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரும், காரைக்குடி ஜில்லா ஹரிஜன சேவாசங்கத்தின் தலைவருமான வக்கீல் அரங்கஸ்வாமி ஐயங்கார் ஆலயப்பிரவேச சம்பந்தமாகக் காந்திஜியுடன் பேசுவதற்கு இஷ்டப்பட்டால் காலை பத்தரை மணிக்குமேல் பதினொரு மணிக்குள் வருமாறு தம்முடைய வக்கீல் நண்பர்கள்

இரண்டொருவருக்கு எழுதியிருந்தார். அவர் கடிதம் அனுப்பியிருந்தது காந்திஜிக்குத் தெரியாது. குறிப்பிட்ட நேரத்தில் யாரும் வராததாலும் அந்தநேரத்தில் மகாத்மாஜியிடம் வேலை வாங்க அநேகர் காத்திருந்தமையாலும் ஸநாதன நண்பர்கள் வரவில்லையே என்ற ஞாபகங்கூட அடிகளுக்கு இல்லை.

சுமார் பன்னிரண்டு மணிக்குமேல் வக்கீல் நண்பர் ஒருவர் தேவகோட்டை மத்திய ஹிந்து சங்கத்தின் காரியதரிசியிடமிருந்து ஒரு கடிதம் கொண்டு வந்து காந்திஜி அவர்களிடம் கொடுக்க வேண்டுமென்றார். அன்றைத் தினம் $12\frac{1}{2}$ மணிக்கு நாட்டார் தலைவர்களைச் சந்திப்பது என்றும், பிறகு $1\frac{1}{2}$ மணிக்குச் செட்டி நாட்டில் மற்ற ஊர்களுக்குப் பிரயாணமாகி மாலை $7\frac{1}{2}$ மணிக்கு மானாமதுரையில் ரெயில் பிரயாணம் என்றும் நிகழ்ச்சிக் குறிப்புப் போட்டிருந்தது. கடிதம் கொண்டுவந்த ஐயங்கார் வக்கீல் நண்பரை நான் மகாத்மாவிடம் கூட்டிச் சென்றேன். அங்கே சென்ற பொழுது ஐயங்கார் காந்தியடிகளுக்கு ஒரு ஸலாம் போட்டார். வழக்கம்போல் புன்னகையுடன் அடிகள் அவரை அமரச் செய்து விசாரித்தார். அவர் சொல்லியதில் முக்கியமானது இவ்வளவுதான்: 'தாங்கள் எல்லா இடங்களிலும் தீண்டாமைக்குச் சாஸ்திரத்தில் இடம் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வருகிறீர்கள். நாங்கள் வக்கீல்கள்; ஸநாதன தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர்களானாலும் சாஸ்திரப் பயிற்சி எங்களுக்கு இல்லை. ஆனால் இந்த ஊரில்

ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள் வந்திருக்கிறார். அவர் சாஸ்திர ஆராய்ச்சி உடையவர். தங்கள் சார்பாக நண்பர் அரங்கஸ்வாமி ஐயங்கார் விடுத்த அழைப்புக் கடிதம் நேரம் சென்று எங்கள் கையில் கிடைத்தது. அந்தச் சமயத்தில் சுவாமிகளும் பூஜையில் அமர்ந்திருந்தார்கள். பூஜை முடிந்த பிறகு நாங்கள் அவரைக் கண்டு அவர்களுக்கு உங்களோடு தீண்டாமைக்குச் சாஸ்திர சம்மதம் இருக்கிறதா என்கிற விஷயத்தைப்பற்றி விவாதம் செய்ய விருப்பம் உண்டா என்றும், இரண்டு பெரியார்களுக்குள் ஏற்படும் சம்வாதத்திலிருந்து எம்போன்றவர்களுடைய மனசிலிருக்கும் சந்தேகம் ஒருவாறு தீரக் கூடும் என்றும் கேட்டோம். அதற்கு அவர்களும் இசைந்தார்கள். அரைமணி நேரம் சம்வாதம் ஏற்படுத்திக்கொள்ளத் தாங்கள் அனுமதி கொடுக்க முடியுமா என்று கேட்பதற்காக நான் வந்தேன்" என்றார்.

அதற்கு அடிகளும், "எனக்கும் அப்படிப் பேசச் சம்மதந்தான். ஆனால் இதோ நாட்டார்களுடன் பேசவேண்டிய நேரம் வந்துவிட்டது. அதன் பிறகு பிரயாணம். ஆகையால் இன்று இந்த இடத்தில் பேச முடியாது. நான் நேராகக் குன்னூர் (நீலகிரி) போகிறேன். அங்கே எட்டு நாட்கள் தங்கியிருப்பேன். தாங்களும், ஆசாரிய சுவாமிகளும் இஷ்டப்பட்டால் முன்னதாகவே ஒரு நாளும் நேரமும் குறிப்பிட்டுக் கொண்டு அங்கே சந்திக்கலாம்" என்று பதிலளித்தார். தாம் சொல்லிய பிரகாரம் அரங்கஸ்வாமி

ஐயங்காரைக் கொண்டு தேவகோட்டை மத்திய ஹிந்து சங்கத்தின் காரியதரிசிக்குப் பதில் எழுதும் படி சொல்லிவிட்டு, அடிகள் பிரயாணமானார். இது சிறிய விஷயம். இது சம்பந்தமாகக் கிளம்பிய வியாக்கியானங்களும், அவற்றுக்கு மேற்கோள்களும் அபிப்பிராயங்களும் பத்திரிகையில் வெளியானதற்குக் கணக்கில்லை. பொய்யை அலங்கரித்து உண்மை போலக் கூத்தாடச் செய்யும் சக்தி நம்மவர்களுக்குள் சிலருக்கு உண்டு. அந்த யுக்திதான் இந்தப் பிரயோஜனமற்ற சங்கதியைத் தினசரிகளில் பிரசுரப்படுத்திப் பூனையை யானையாகவும், பழுதையைப் பாம்பாகவும் செய்துவருகிறது.

## 5. மானமதுரை - மேட்டுப்பாளையம்

"எங்களுடைய ஊர் கார் போகிற வழியில் தான் இருக்கிறது. அங்கே வருவதற்காக நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஒரே நிமிஷம் கார் வந்து நின்றால் போதும். ஏழை ஜனங்கள் பார்க்க வேண்டுமென்று கவலைகொண் டிருக்கிறார்கள். தவறாமல் எப்படியாகிலும் எங்கள் ஊரையும் சுற்றுப் பிரயாணத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று பல ஊரார் வற்புறுத்துவார்கள். அவர்கள் ஊரைச் சேர்ப்பதற்கு முன்பாக இடம் எங்கிருக்கிறதென்று பார்க்கப்போனால், கார்போகும் வழியிலிருந்து இரண்டு மூன்று மைலுக்கப்பால் காட்டுப் பாதை வழியாய்ச் சில கால்வாய்களையும் சிற்றாறுகளையும் கடந்து செல்ல வேண்டியிருக்கும்.

"ஏன் ஐயா, கார் போகும் பாதையில் இருக் கிறதென்று கடிதம் எழுதியிருந்தீர்?" என்று கேட்டாலோ அழைத்துப் போக வற்புறுத்துபவருக் குத் தீவிரமான கோபம் கிளம்பிவிடும். "நீங்கள் டவுன் பேர்வழிகள் எல்லாம் இப்படித்தான். காந்தி எப்போது வந்தாலும் ரெயில் மார்க்கமாய்ப் பெரிய பட்டணங்கள் வழியாகத்தான் கூட்டிப் போகிறீர் கள். எங்கள் கிராமத்திற்குக் கூப்பிடு தூரத்திற் கப்பால் போகும் கப்பி ரோட்டில் காரைச் சற்று

நிறுத்தினால் என்ன உலகம் முழுகிப் போய்விடுமோ? முதல்தரமான வில் வண்டியில் ஏற்றிக் கிராமத்தை மிதித்து விட்டுப் போகும்படி செய்ய மாட்டோமா? இல்லாவிட்டால் ஒரு நாற்காலியில் உட்கார வைத்து ஊரார் எல்லோருமே அவரைத் தூக்கிப் போகும்படியான வேலை செய்ய மாட்டோமா?" என்பார்கள்.

"ஐயா, அந்தப் பெரியவருக்கு இவ்வளவு கஷ்டம் கொடாமல் நீங்கள் எல்லோரும் கப்பி ரோட் ஓரமாக ஒழுங்காக நின்றுகொண்டிருந்தால் பார்த்து விடலாமே" என்று நாம் சொன்னால், "ஏன், படத்தில் பார்த்துவிடலாமே என்று சொல்லாமல் போனீர்களே! உங்களுக்கு என்ன ஐயா, பெரியவர் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள். எங்களுடைய தாபம் உங்களுக்கு என்ன தெரியும்?" என்ற பதில் கிடைக்கும். காரியத்தைச் சாதிப்பதில் பொய் சொல்வது தர்ம நியாயம் என்கிற முறை நம் நாட்டினருக்குள் அநேகருக்கு உண்டு. அதைப் பொய்யென்று சொன்னாலும் கோபிப்பார்கள்.

வேறு ஒரு நண்பர் பின் வருமாறு கடிதம் எழுதுவார்: "ஐயா, எங்கள் ஊரில் வைதிகர்களுடைய ஆதிக்கம் அதிகம். சாதாரண சீர்திருத்த முறை ஒன்று சொன்னாலும் அவர்களுக்கு அதிகக் கோபம் ஏற்படுகிறது. ஆனால் ஊரில் இளைஞர் கோஷ்டியாகிய நாங்கள் வேலை செய்வதில் உற்சாகமுள்ளவர்களாக இருக்கிறோம். காந்தி இந்த மாதிரி ஊர்களுக்குத்தானே வரவேண்டும்? எதிர்ப்பு எங்கே அதிகமோ அவ்விடத்தில் அவர் வந்து

போனல் பிற்பாடு வேலை செய்பவர்களுக்குத் தைரியம் ஏற்படும்."

மற்ருேர் ஊரிலிருந்து திடீரென ஒரு தந்தி கிடைக்கும்: "பணம் இரண்டாயிரம் வசூலாகி விட்டது. ஜனங்களின் ஊக்கத்திற்கு அளவில்லை. இந்த ஊருக்கு வருவதென நிச்சயமானல் இதைக் காட்டிலும் இரண்டு மடங்கு வசூலாகும். உடனே மகாத்மாஜி வரும் தேதியைக் குறிப்பிட்டுப் பதில் தெரிவிக்க." நெருங்கி விசாரித்தாலோ பணம் வசூல் ஆகியிருக்காது. வசூல் பண்ணிவிடலாம் என்கிற திடமான எண்ணத்துடன் அடித்த தந்தி யாகவே இருக்கும். "இப்படித் தந்தி கொடுக்க லாமா?" என்ருல், அதற்குப் பதில், "ஏன் கொடுக் கக்கூடாது? நீங்கள் காந்தியை அழைத்துவருவதாக வாக்குக் கொடுங்கள். தொகை வசூல் செய்கிருேமா இல்லையா என்று பாருங்கள்" என்பார்கள்.

சுற்றுப் பிரயாணத்தைப் பற்றிய அறிக்கைகளை நான்கு தடவை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட் டது. அப்படி மாற்றும் காலங்களில் எவ்வளவு இடங்களைச் சேர்க்க முடியுமோ அவ்வளவையும் சேர்த்தோம். ஒன்றிரண்டு இடங்களை முதல் அறிக்கையில் சேர்த்தும் பிறகு மூன்ருவது அறிக்கை யில் பல காரணங்களை ஒட்டிச் சேர்க்க முடியவில்லை. முதலில் சேர்த்துப் பின்னர் விடுபட்டுப் போன ஊர் களிலிருந்து கிடைத்த கடிதங்களில் ஒன்றின் நகல் பின் வருமாறு:

"ஐயா, தங்கள் பேச்சை நம்பி இந்த ஊரில்

எல்லா விதமான ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டன. பணமும் வசூலாகிவிட்டது. அடிகள் வருவாரென்றும், அவர் கையிலே பணமுடிப்புச் சமர்ப்பிக்கப்படும் என்றும் சொல்லி வசூலித்திருக்கிறோம். இப்படி வராமல் எங்கள் ஊரை நீக்கி யிருப்பது பெருத்த நம்பிக்கை மோசம். முதலிலேயே வருவதற்கு முடியாதென்று சொல்லியிருந்தாலும் பாதகமில்லை. அவர் வருவதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் மகாத்மாவினுடைய பெயருக்கே கேடு விளைவிப்பவர்களாவீர்கள். இன்றைத் தினம் இரவு ரெயிலில் நாங்கள் நான்கு பெயர்கள் தங்களையும் மகாத்மாவையும் நேரில் கண்டு பேசப் புறப்பட்டு வருகிறோம்.''

வருபவர்களுக்கோ என்போன்றவர்களுடைய கஷ்டம் தெரியாது. சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலை செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டது. இவ்வளவு மணி நேரம் கார் பிரயாணம், இவ்வளவு மணி நேரம் ஓய்வு, இவ்வளவு மணி நேரம் ரெயில் பிரயாணம் என்று அடிகளுடைய மூச்சு ஒன்றைத் தவிர மற்றவை எல்லாவற்றையும் அளந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சுற்றுப் பிரயாணத்தில் திடீரென மாறுதல் செய்வதென்றால் எவ்வளவு கடினம் என்பது தங்கள் ஊருக்கு வர வேண்டுமென அழைப்பவர்களுக்குத் தெரியாது. எனக்கோ, இராப்பகலாய்த் தூக்கமில்லாமல் மலை போல் குவிந்து கிடக்கும் கடிதங்களைப் பார்க்கக்கூட நேரமின்றி உழைத்து வரும் பெரியாரை இந்த

விஷயங்களுக்காக உபத்திரவிப்பது பாவமெனத் தோன்றியது. மேலும் விட்டுப்போன ஊர்களி லிருந்து காந்திஜிக்கு நேராகத் தந்தி, கடிதம் இவை யெல்லாம் வந்துகொண் டிருக்கும். அவர் அவைகளை யெல்லாம் ஒரு கட்டாகக் கட்டி என்னிடம் அனுப்பி விடுவார். “இந்தத் தொல்லை யெல்லாம் எனக்கு ஏற்படாமல் நீ செய்யக்கூடாதா?” என்று அவர் சொல்லும்போது பதில் சொல்ல முடியாமல் திண் டாடும் என் கதியைக் கண்டு யாரும் இரக்கப்படு வார்கள். தமிழ்நாட்டுப் பிரயாணம் எட்டுநாள் அதிகப்பட்டது என்பது தெரிந்தவுடன் தங்கள் தங்கள் ஊருக்கு அடிகள் விஜயம் செய்ய வேண்டு மென்கிற அழைப்புக் கடிதங்களுக்கு அளவில்லை. நல்ல வேளையாக எட்டு நாள் ஒய்வு குன்னூரில் ஏற் பாடு செய்திருந்தால் இந்தக் கடிதங்களைக் கவனித் துக் கூடியவரையில் அவர்களைத் திருப்தி செய் வித்தல் சாத்தியமாயிற்று.

* * *

செட்டி நாட்டில் அநேகமாகக் கூட்டங்கள் ஒழுங்காகவே நடைபெற்றன. ஆனால் சிவகங்கை யில் மட்டும் கூட்டம் அதிகமாகவும் அடக்க முடியா மலும் போய்விட்டதால் மகாத்மா பேசமுடியவில்லை. மானமதுரைக் கூட்டமோ தமிழ் நாட்டிற்கே ஓர் உதாரணமாக இருந்தது. குறைந்தது சுமார் ஐயா யிரம் ஜனங்கள் இருந்திருக்கலாம். இரவு ஏழு மணி. களங்கமற்ற வானத்தில் இளஞ் சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களைப் பொழிந்துகொண் டிருந்

தான். புழுதியிலும் வெயிலிலும் அடிபட்டு வாயு வேகம் மனோவேகமாகப் பிரயாணம் செய்து வரும் காந்தியடிகள் பேரில் இரக்கம்கொண்டு அவன் கருணை சொரிந்ததுபோலவே இருந்தது.

அந்தக் கூட்டத்தில் உயர்ந்த மேடை இல்லை. நடுவில் கார் வந்து நிற்பதற்கான இடம் விடப் பட்டது. உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவராவது தங்களிடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. சத்தம் செய்தவர்களும் இல்லை. கூட்டத்தின் அமைதியும் வானத்தின் அழகும் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொண்டன. அடிகள் மனமும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தது.

வக்கீல் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயங்கார் மானு மதுரையில் தேச சேவை செய்து சிறை வாசம் செய்தவர். அவர் தவப்பயனின் பெருமையை அன்று அக் கூட்டத்தில் கண்டோம்.

அன்றிரவு மானுமதுரையில் ஸ்டேஷனில் ஏறுவது முடியாதென்று அருகிலுள்ள ரெயில்வே கேட்டில் வண்டி நிறுத்தப்பட்டு அடிகள் ஏறிக் கொண்டார். கூட்டமெல்லாம் ஸ்டேஷனுக்குப் போய்க் கூடிவிட்டதால் இந்த இடத்தில் யாதொரு கஷ்டமுமில்லாமல் ஏறிவிட்டோம். நேராகப் போத்தனூர் சென்று அங்கிருந்து காரில் குன்னூருக் குப் போவதாக ஏற்பாடு. போத்தனூரில் ஒரு சமயம் கோயம்புத்தூர் நகரக் கூட்டம் வந்துவிட் டால் இறங்குவதற்கு இடையூறு யிருக்குமோ என்ற பயத்தால் போத்தனூருக்கு ஒரு மைலுக்கு இப்பா

லுள்ள ரெயில்வே கேட்டில் இறங்குவதாக ஏற்பாடு செய்தோம். ஆனால் நீலகிரிக்குப் போகவேண்டிய கார்கள் ஸ்டேஷனில் வந்து காத்திருந்ததால், போத்தனூர் ஸ்டேஷன்மாஸ்டருக்குக் கார்களை ரெயில்வே கேட்டிற்கு அனுப்பும்படி செய்தி அனுப்பினேம். இது விஷயம் தொண்டர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் முறையே தெரிவிக்கப்பட்டு விட்டது. ஆகவே எந்தக் காரணத்திற்காக ஸ்டேஷனில் இறங்காமல் ஒரு மைல் தூரத்திற்கு இப்பால் இறங்க ஏற்பாடு செய்தோமோ அது நடைபெறவில்லை. ஸ்டேஷன் கூட்டம் முழுவதும் அவ்விடமே வந்து சேர்ந்துவிட்டது. அன்று ஸ்டேஷனில் ஒரு பிராணிகூட இல்லை.

அவிநாசிலிங்கம் செட்டியார் வயசில் இளைஞர். இளமைக்கு ஏற்ற பரபரப்பும் அவரிடம் உண்டு. கை கட்டி நின்று தொண்டு புரிந்து அடிமைச் சேவகம் செய்யவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. வீட்டுக் கவலையற்ற பிரம்மசாரி. போத்தனூரில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் அவருடைய சிருஷ்டி. பெற்றெடுத்த குழந்தையிடம் தாய்க்கு எவ்வளவு அன்பு இருக்குமோ அவ்வளவு அவருக்கு அவ் வித்தியாலயத்தினிடம் உண்டு. கோயம்புத்தூர் மற்ற எந்த ஜில்லாவைக் காட்டிலும் பண வசூலிலும் அடிகளின் வரவேற்பிலும் எவ்விதத்திலும் குறைவாகக் கூடாதென்கிற சங்கல்பம் அவர் செய்து கொண்டார். முடிவில் அவர் எண்ணம் நிறைவேறிற்று. தமிழ் நாட்டில் வசூலான தொகை

யில் கால் பங்கு கோயம்புத்தூர் ஒரு ஜில்லா மட்டுமே அளித்தது. கட்டுக்கடங்காத ஊக்கம், எல்லையற்ற உணர்ச்சி, அளவிடக்கூடாத காந்தி பக்தி கோயம்புத்தூரில் காணப்பட்டது. போத்தனூரில் இறங்கியது முதல் காந்திஜியின் சுற்றுப் பிரயாணப் பொறுப்பு முழுமையையும் அவிநாசிலிங்கமே ஏற்றுக்கொண்டு மிகத் திறமையாக நடத்திவைத்தார்.

கோயம்புத்தூர் வழியாக நீல்கிரி மலைக்குச் சென்றோம். அடிகள் மௌனவிரதம் பூண்டிருந்தார்: கார் புதிது; வேகம் அதிகம்; நிமிஷத்திற்கு நிமிஷம் மலையை நோக்கிப் பறந்து சென்றது. வழியில் மூன்று இடங்களில் பண முடிப்பு அளித்தார்கள். முக்கியமாக மேட்டுப் பாளையத்தில் வரவேற்பு மிகவும் அழகாக இருந்தது. தமிழ் நாட்டிற்குள்ளாக மேட்டுப்பாளையத்தைப் போல அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த இடம் வேறு இல்லை. ஆயிர ரூபாய் பணமுடிப்புக் கொடுத்தார்கள். அடிகள் மௌனமாகப் பெற்றுக்கொண்டார். அமைதியான அந்தக் கூட்டத்தை விட்டகன்று பத்தரை மணிக்கெல்லாம் குன்னூர் சேர்ந்தோம். அங்கே தேசபக்தர் நாகேசுவர ராவ் அவர்களின் ரமண ஆசிரமம் அடைந்தோம். நாகேசுவர ராவ் தம்பதிகள் அன்புடன் மகாத்மாவை வரவேற்றார்கள். அடிகளும் அமைதி நாடி, ஓய்வு தேடித் தமக்கியைந்த ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அதில் தங்கலானார்.

# 6. குன்னூர் - கோயம்புத்தூர்

குன்னூர் மலைச்சாரல் பிப்ரவரி மாதத்தில் தான் தன் மகிமை முழுவதையும் வெளிக்காட்டும் காலம். தளர்ந்த நரம்புகளையும் இழுத்து உறுதிப் படுத்தும் குளிர் ; வெப்பமற்று நிலவு போல் தோன் றும் சூரிய கிரணங்கள் ; களங்கமற்ற வானம் ; இவை எல்லாம் மகாத்மாவின் இளைப்பை ஆற்றுவதற்கு அமைந்தன போலவே ஒருங்குகூடி அந்த வாரம் முழுவதும் குன்னூரைச் சிறப்பித்தன. மேலும் மகாத்மா தங்கியிருந்த இடம் மிக்க அழகுடன் விளங் கிற்று. ரதம் போன்ற வேலைப்பாடுள்ள பலமான மெத்தைக் கட்டிடம். எட்டுப் பக்கங்கள் வாய்ந்த சுவர். ஒவ்வொரு பக்கத்திலும் சித்திரிக்கப்பட்ட கண்ணாடி ஜன்னல்கள். மையத்தில் உயர்ந்து எடுத்துக் கட்டிய மேல்கட்டின் பேரில் இரவில் சிவப்பு மின்சார விளக்கு. "மௌன்ட் பிளஸென்ட்" என்ற அந்தக் குன்னூர் மேடு உண் மையிலேயே அடிகள் வசித்த காரணத்தை ஒட்டி வஸந்த மாளிகையாக விளங்கிற்று.

கோயம்புத்தூரில் அந்தச் சமயம் சிறுவர்க ளடங்கிய ஒரு கோஷ்டியார் நாகை ராஜாராம் பாகவதர் அவர்களின் தலைமையின்கீழ் நாடகம் ஆடிக் கொண்டிருந்தார்கள். ராஜாராம் பாகவதர் காந்தி

யடிகளின் அத்தியந்த பக்தர். தமிழ் நாட்டிலே காந்தி சரித்திரத்தை ஹரி கதை ரூபமாக நடத்தி வருகிறவர். சங்கீத ஞானம் உள்ளவர். ஆனால் சாரீரம் இல்லை; கட்டைத் தொண்டை. தேசபக்தி ததும்பும் சரித்திரங்களை நாடகப்படுத்திச் சிறுவர்களைக் கொண்டு நடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை இந்த நாடகக் கம்பெனித் தலைவர். அந்த நாடகத்திற்கு அடிகள் வரவேண்டுமென்றும் அப்படி வருவதாயிருந்தால் அன்றைத்தினம் கிடைக்கும் தொகை முழுவதையும் ஹரிஜன இயக்கத்திற்கு அளித்துவிடுவதாகவும் சொல்லி யனுப்பினர்.

ஆனல் அடிகளோ தொழில் முறையாக நடத்தும் நாடக மேடைகளுக்குப் போவதில்லை. முதலில் முடியாதென்று மறுத்துவிட்டார். ராஜாராம் பாகவதரின் பக்தியையும், அவர் நடத்திவரும் நாடகங்களின் நோக்கத்தையும் அடிகளுக்கு விவரமாக எடுத்துக் கூறியதன் பேரில், கோயம்புத்தூருக்கு வரும்போது ஐந்து நிமிஷம் நாடகத்துக்கு வந்துபோவதாக ஒப்புக்கொண்டார். மேலும் நாடகம் நடத்துபவர்கள் அன்றைத்தினம் வருமானத்திலிருந்து தங்கள் செலவிற்காக ஒரு பைசாக்கூட எடுக்காமல் ஹரிஜன நிதிக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று நிபந்தனை செய்தார். அதுவுமன்றி நாடகத்தில் சுமார் எவ்வளவு வசூலாகுமென்று அடிகள் கேட்க, சுமார் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் எதிர்பார்க்கிறோம் என்ற பதில் கிடைத்தவுடனே பிறவிக்குணமான

வர்த்தக முறையில் கைதேர்ந்த மகாத்மா ஓர் உத்தரவு போட்டார். "ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு ரொக்கமாய் அன்று நாடகத்திற்காகப் பிரசுரங்கள் செய்வதற்கு முன்பு தம்மிடத்தில் கட்டிவிட வேண்டியது. அது ஹரிஜனப் பணமுடிப்புடன் சேர வேண்டியது. அதற்குமேல் வந்தால் பீகார் நிதிக்குச் சேரவேண்டியது. இதற்கு யார் ஜவாப்தாரி?" என்று கேட்டார்.

கோயம்புத்தூரில் பொதுஜன சேவைக்கென்றே தம் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்திருக்கிற தேசத் தொண்டர்களில் சிறந்தவர், 'ஸுப்ரி' என்று அழைக்கப்படும் கே. சுப்பிரமணியம். அவருக்கு மதுரை வைத்தியநாதையரைக் காட்டிலும் உரத்த தொண்டை. நீலகிரிப் பிரசங்கத்திற்கெல்லாம் தம்முடைய ஒலிபரப்பும் கருவியென அடிகள் அவருக்குப் பெயர் சூட்டினார். மேற்படி பணப் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அவர் வாக்களித்த தன் பேரில் பிப்ரவரி 6-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை இரவு ஒன்பது மணிக்கு நந்தனார் சரித்திர நாடகத்திற்கு அடிகள் வருவார்கள் என்கிற அறிக்கையும் போடப்பட்டது.

குன்னூரில் ஓய்வு எடுத்துக்கொண் டிருந்த நாட்களில் சதாகாலமும் அவர் வேலை செய்து கொண்டுதான் இருந்தார். மைசூரிலிருந்தும், புதுச்சேரியிலிருந்தும், அகமதாபாத் முதலிய இடங்களிலிருந்தும் கும்பல் கும்பலாக அநேகர் பல காரணங்களை முன்னிட்டுக் காந்திஜியைக் காணவந்த வண்ண

மாக இருந்தார்கள். உண்மையில் ஓய்வென்பது மகாத்மாபோன்ற குணமுடையவர்களுக்கு இருக்க முடியாது. வேலையில்லாமலும் இருக்க முடியாது. ஓய்வு என்றால் நம்மவர்களில் சிலருக்கு ஒருவித எண்ணமுண்டு. கைகால்களை நீட்டிக்கொண்டும் இடையிடையே தூங்கிக்கொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டும் ஆகாராதிகளை விதம் விதமாகப் பல முறைகள் வயிறு புடைக்க உண்டுகொண்டும் வெறும் பேச்சுப் பேசி, வீண் வார்த்தையாடிக் காலத்தை இப்படிக் கழிப்பதெனத் தெரியாமல் காலையிலும் மாலையிலும் பள்ளத்திலும் மேட்டிலும் அலைந்து திரியும் கோடைக்கால மலைவாசிகளாகிய பெரிய மனிதர்களின் ஓய்வுதான் ஓய்வு என்று நினைக்கக்கூடும். அவ்விதமான ஓய்வு மகாத்மாவுக்குக் கிடைக்கவில்லை. ஓயாது செய்துவந்த சுற்றுப் பிரயாணத்தின் இன்னல்களைச் சற்று ஒதுக்கி வைத்து மலைபோல் குவிந்து கிடக்கும் கடிதங்களுக்கு விடை அளிப்பதற்குச் சாத்தியமானதோடு, வெகு தூரம் எந்த நேரத்திலும் நடக்கவும், அதனின்று தேகத்துக்கேற்படும் ஆரோக்கியத்தைப் பெறவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் பயனாக, பாக்கி இருக்கும் கடினமான சுற்றுப் பிரயாணத்தை இனிது முடிப்பதற்கான பலத்தை நீலகிரி வாசம் அடிகளுக்கு அளித்தது.

தமிழ்நாட்டுப் பிரயாணம் பிற்பாதி பிப்ரவரி மாதம் 6-ஆம் தேதியன்று ஆரம்பமாயிற்று. மலைக்குப் போகும்போது மௌன தினமாகையால் பேசா

மல் பண முடிப்பைப் பெற்றுச் சென்ற காந்திஜியைத் திரும்புங்காலையில் மேட்டுப்பாளையத்தார் சும்மா வீட்டுவிடவில்லை. அந்த ஊரில் சற்று நேரம் தங்கி ஒரு சிறிய 'பிரசங்கம் கேட்ட' பிறகுதான் அவ்வூராருக்கு மனம் சாந்தி அடைந்தது. சொக்கம்பாளையம் சிறிய கிராமமாக இருந்தபோதிலும் ஆயிர ரூபாய்க்கு அதிகமான பண முடிப்பு அளித்தது. அதைப் பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டில் கதர் உற்பத்திக்குத் தலை நகரமாகிய திருப்பூருக்கு வந்து சேர்ந்தோம். மகாத்மா வந்த அன்றைத் தினத்தை ஒரு பெரிய திருவிழாத் தினமாகத் திருப்பூர் கொண்டாடியது. பள்ளிக்கூடங்கள், முனிசிபல் காரியாலயம், வியாபாரச் சங்கம் இவ்வகள் மூடப்பட்டன. ஏராளமான கூட்டம்.

இச் சந்தர்ப்பத்தில் இரண்டு முக்கிய சம்பவங்களைக் குறிப்பிடவேண்டும். சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் கோயம்புத்தூர்ச் சிறையினின்று அன்று காலை விடுதலை அடைந்து நேராகத் திருப்பூர்க் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். சத்தமில்லாமல் சிறை புகுந்து பிறருக்குத் தெரியாமலே வெளியேறுவதில் அவருக்கு இருக்கும் பழக்கம் மற்ற எந்தத் தேசபக்தர்களுக்கும் இல்லை. ஓய்வெடுத்துக்கொள்வதற்காகச் சிறை புக வேண்டியவர்களில் முதன்மையானவர். ஆகையால் சிறை வாழ்வைச் சுக வாழ்வாகவே அநுபவித்துவருபவர். சரீரத்தில் எடை குறைவதற்கு இடமில்லை. மன ஊக்கம் மட்டும் எடையில் ஏறிக்கொண்டு போகும்

பேர்வழி. யோசனையில் ஆழ்ந்த முகம், களங்கமற்ற புன் சிரிப்பு, மாசற்ற கதர் உடை. சிறைவாசச் சாமான்களுடன், தம்முடன் கைதியாக இருந்தவரும், ஒரு சமயம் தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய அவருடைய ஆருயிர் நண்பருமான ஈரோடு ராமசாமி நாயக்கரின் மோட்டாரில் விடியற்காலை சிறையை விட்டு நீங்கி நேராகப் பொதுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

மகாத்மாஜி வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்றிருந்த காலத்தில் அவரை லண்டனில் தம்முடைய விருந்தாளியாக உபசரித்த மிஸ் மியூரியல் லெஸ்டரும், அவருடைய அண்ணன் மகளாகிய மிஸஸ் ஹூக்கும் அன்று காலை திருப்பூர் வந்து கூட்டத்தில் காத்திருந்தனர். சரியாகப் பத்துமணிக்கு அடிகளும் வந்து சேர்ந்தார். வந்ததும் மிஸ் லெஸ்டர் அவர்களிடம் சற்றுநேரம் மனமுவந்து வார்த்தையாடிய பின்பு கூட்டம் ஆரம்பமாயிற்று. மேடையின்மீது ஏறும்போது தம்மைக் கண்டு நமஸ்கரித்த ராஜாஜி அவர்களை அவர் கண்டுகொள்ளவில்லை. கூட்டம் முடிந்த பிறகே அவருக்குத் தெரிந்தது.

திருப்பூரில் கதர் வியாபாரிகள் சங்கத்தார் காந்திஜியைப் பேட்டி கண்டு தங்கள் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். "சென்ற சில வருஷங்களாகத் திருப்பூர்க் கதர் விற்பனை குறைந்துகொண்டு போவதால் எங்கள் சரக்குச் செலவாகாமல் தங்கி விடுகிறது. இதனால்

மூலதனம் முடங்கிப் போய்விடுகிறது. நெசவுக்காரர்களுக்கு வருஷம் பூராவும் வேலை கொடுக்க முடியவில்லை. இதுகாறும் அகில இந்திய சர்க்கா சங்கத்தார் எங்களிடம் தங்கிப்போன சரக்கையெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தார்கள். அவ்விதமான உபகாரம் இப்பொழுது கிடையாது. இதற்குத் தாங்கள் ஏதாகிலும் ஒரு வழி ஏற்படுத்த வேண்டும். இல்லாவிடில் கதர் உற்பத்திக்கும் தொழிலுக்கும் பெரிய ஆபத்து ஏற்படும்" என்பதாக முறையிட்டார்கள்.

இந்த முறையீட்டுக்கு, கதர் இயக்கத்திற்கு மூல புருஷரான மகாத்மா அளித்த பதிலைத் தமிழ்நாட்டினர் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும்: "இந்தியாவில் முதன்முதலாகக் கதர் இயக்கத்தில் ஈடுபட்டது தமிழ்நாடு. அதிலும் திருப்பூர், தலைமை வகித்து இந்தியாவின் மற்றப் பாகங்களுக்கெல்லாம் கதர் அளிக்கும் ஸ்தானத்தை அடைந்தது. கதருக்குக் கிராக்கி அதிகமாகவே பல வியாபாரிகள் சீக்கிரம் பணம் திரட்டிவிட வேண்டும் என்கிற ஆசையால் தொழில் முறையில் ஒழுங்கீனமாக நடக்க ஆரம்பித்து விட்டார்கள். கேவலமான சரக்குகளை விற்றுத் திருப்பூர்த் தொழிலுக்குக் கெட்ட பெயரைக் கொண்டுவந்து விட்டார்கள். பிற்பாடு அகில இந்திய சர்க்கா சங்கத்தாரை எதிர்த்துப் பல துறைகளில் கஷ்டங்களை உண்டாக்கினார்கள். கடைசியாகத்தான் சர்க்கா சங்கத்தாரின் விலைத் திட்டத்திற்கு உள்ளடங்கி வேலை செய்ய உடன்பட்

டார்கள். இதற்குள்ளாக ஆங்காங்கு மாகாணங்களில் சர்க்கா சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அங்கெல்லாம் கதர் உற்பத்தியாகத் தொடங்கியதும் திருப்பூர்க் கதரைத் தேடுபவர் இல்லாமல் போயினர்.

"சர்க்கா சங்கத்தாரும் தங்களால் இயன்ற அளவு கட்டுக்கிடையாக இருந்த கதரை வாங்கி விற்பனை செய்தார்கள். மேலும் திருப்பூர்க் கதரில் பலவித ரகங்கள் இல்லை. மற்ற இடங்களிலே தேவைக்குத் தகுந்த சரக்குகள் தயாரித்து, மார்க்கெட்டின் கிராக்கிக்குத் தகுந்தபடி விற்பனை முறைகளைக் கையாண்டு வருகிறபடியால் திருப்பூர் வியாபாரிகளுக்கு வியாபாரம் குறைந்து விட்டது. மற்ற மாகாணங்களில் எப்படி வேலை நடக்கிறதென்பதை நீங்கள் போய்ப் பார்க்க வேண்டும். இந்திய சர்க்கா சங்கம் எவ்வளவு வருஷம் உங்களுக்கு உதவி புரிய முடியும்? பத்து வருஷம் உதவி செய்த பின்பு கூட நீங்கள் உங்கள் தொழிலை லாபகரமாகச் செய்யத் தெரிந்து கொள்ளாவிடில் நீங்கள் வியாபாரத்திற்கு உதவமாட்டீர்கள் என்றுதான் நான் நினைப்பேன். கால நிலையைக் கவனித்துச் சமயத்திற்கு ஏற்றது போலத் துணிகளைத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். உடை உடுக்கும் முறையில் ஜனங்களின் மனத்தை உருப்படுத்துவதே உங்கள் கடமையாகும். அந்தக் கடமையை உண்மையுடனும் கருணையுடனும் அதிக லாபத்தைக் கருதாமலும் கதர் இயக்கத்தின் லக்ஷ்யத்துக்கு அநுகுணமாகவும் செய்து வியாபாரம் செய்தால் உங்கள் தொழிலுக்கு ஒரு காலும்

இடையூறு ஏற்படாது.''

காந்திஜியின் இந்த உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கதர் வியாபாரிகளின் முகத்தில் அதிக மான உற்சாகம் காணப்படவில்லை. இது மகாத்மா ஆரம்பிக்கும் இயக்கங்களில் முன்பின் தெரியாமல் இறங்கும் பெரும்பான்மையோருக்கு ஏற்படும் அநுபவம். அவருடைய இயக்கத்தின் நோக்கங்களைச் சரிவர உணர்ந்துகொள்ள மாட்டார்கள். அவ ருடைய நிபந்தனைகளை நிறைவேற்றமாட்டார்கள். ஆனால், 'காந்திஜியை நம்பி நமக்கு ஒன்றும் கிடைக்க வில்லை' என்பதாகப் பழியை அவர் தலையில் சுமத்து வார்கள்.

கதருக்கு உயிர் நிலையான திருப்பூரை விட்டு அன்று பகல் மூன்று மணிக்குப் புறப்பட்டுப் பல் லடம் வழியாகப் பணமுடிப்பு, வரவேற்புப் பத்திரம் இவைகளைப் பெற்றுக்கொண்டு கோயம்புத்தூர் ஸ்திரீகள் பொதுக்கூட்டத்திற்கு வந்து சேர்ந்தோம். கூட்டம் விசாலமான மைதானத்தில் ஒரு மரத்தின் நிழலில் அமைக்கப்பட்டிருந்தது; மற்ற இடங்களைப் போலவே ஆயிரக்கணக்கான பெண்மணிகள். அவர் களைக் காட்டிலும் குழந்தைகளின் தொகை இரட் டிப்பு. காந்திஜி வந்தவுடன் கூட்டத்தில் அமளி. பிர சங்கம் ஒருவருக்கும் கேட்கவில்லை. பணமுடிப்பும் நகைகளும் கிடைத்தன. கால்மணி நேரத்திற் கெல்லாம் அடுத்த இடம் போய்ச் சேர்ந்தோம்.

கோயம்புத்தூர் பொதுஜனக் கூட்டம் மதுரைக் கூட்டத்துக்குச் சமானமாக இருந்தது. சுமார்

முப்பதினாயிரம் ஜனங்கள் இருக்கலாம். மற்ற இடங்களில் காணாத ஒரு புது நிகழ்ச்சி இக் கூட்டத்தில் குறிப்பிடக் கூடியது. காந்திஜி பிரசங்கமேடை ஒரு புறமும் அதன் பக்கத்தில் ஒலி பரப்பும் கருவியும் வைக்கப்பட்டிருந்தன. பிரசங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னால் அநேக மாயிரம் ஜனங்களுக்குத் தரிசனம் கிடைக்குமாறு கூட்டத்தின் மத்தியில் தரிசன மண்டபம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. முதலில் இந்த மண்டபத்தில் வரவேற்புப் பத்திரங்கள், பண முடிப்புகள், நகைகள், நன்கொடைகள் இவைகள் அளிக்கப்பட்டன. பிறகு மகாத்மா பிரசங்க மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து பிரசங்கம் நடந்தது. கூட்டம் அமைதியாயிருந்தது.

இரவு படுக்கைக்குப் போத்தனூர் ராமகிருஷ்ண வித்தியாலயம் போக வேண்டியது என்று ஏற்பாடு. அதற்கு முன்பு குன்னூரிலேயே ஒப்புக்கொண்டிருந்தபடி நந்தனார் சரித்திர நாடகத்திற்காக ஒன்பதரை மணிக்கு நாடகக் கட்டிடம் சென்றோம். கம்பெனிக்காரர்கள் மகாத்மாவிற்குத் தக்க வரவேற்பு அளித்தனர். தங்கள் மத்தியில் நாடக மேடையின் மீது ஐயனை இருத்தி, அடிகளின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அன்று எதிர்பார்த்த அளவு நாடகத்திற்குக் கூட்டம் வரவில்லை. நாடகக் கம்பெனியார் நஷ்டமடைந்த போதிலும் தாங்கள் கொடுக்க வேண்டுமென்று அவாவுடன் முன் பணமாகக் கொடுத்து

விட்ட படியால், நஷ்டமடைந்தோம் என்ற கவலை அவர்கள் முகத்தில் காணப்படவில்லை. அடிகள் தரிசனம் என்ற ஆனந்தக் கடலில் ஆழ்ந்து, பரவசமடைந்தவர்களாய்ச் சிறுவர்களான நடிகர்கள் விளங்கினார்கள்.

## 7. போத்தனூர் மோட்டார் விபத்து

இரவு பத்து மணிக்கு நாடகத்திலிருந்து போத்தனூர் புறப்பட்டோம். முதல் காரில் நண்பர் அவிநாசிலிங்கம் வழி காண்பிப்பதற்காக மோட்டார் ஓட்டியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். உட்புறத்தில் தக்கர், மிஸ் மியூரியல் லெஸ்டர், மிஸஸ் ஹாக், மகாத்மா இவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பின் வண்டியில் நானும் மற்ற நண்பர்களும் சென்றோம். காந்திஜியின் மோட்டார்ச் சக்கரங்கள் நல்ல பருமனுனவை. இஞ்சின் நல்ல வேகம் போகக் கூடியது. ஓட்டுபவனும் சமர்த்தன். காந்திஜியின் கார் ஓட்டுவதற்கென்றே சென்னையிலிருந்து சிபார்சு செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டவன். அவன் பெயர் கைமால். அவனுடைய ஓட்டும் திறமையை நேரில் கண்டிருக்கிறேன். தண்ணீர் விடாத ரோடுகளில் இப்படிப்பட்ட ஒரு காரைச் சுமார் நாற்பது மைலுக்குக் குறையாத வேகத்தில் ஓட்டிச் செல்லுங்கால் அதற்குப் பின் எவ்வளவு தூரம் வரையில் புழுதி கிளம்பும் என்ற விஷயம் அநுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். ஆகையால் மகாத்மாவின் வண்டி ஒரு மைல் தூரம் போன பிறகுதான் எங்கள் வண்டி போக முடிந்தது.

போத்தனூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து

ராமகிருஷ்ண வித்தியாலயம் சுமார் ஒரு மைல் தூரம் இருக்கலாம். இதில் சுமார் அரை மைலுக்கு ரெயில் பாதையை ஒட்டியே சாலையும் போகிறது. கடைசியில் ரெயில் பாதையைச் சதுரமாகக் குறுக்கிட்டுச் சாலை செல்லுகிறது. கார் ஓட்டுபவர்கள் மெதுவாகச் சென்று திரும்ப வேண்டிய இடம். மோட்டார் ஓட்டி கைமால் அந்த ஊருக்குப் புதிது. போகும் வேகமோ நாற்பது மைல். சாலை திடீரெனத் திரும்பியதும் ரெயில்வே கதவு மூடப்பட்டிருந்தது கைமாலுக்குத் தெரியவில்லை. வந்த வேகத்தில் நிறுத்த முடியாமற் போகவே குறுக்கிட்டிருக்கும் ரெயில்வே கேட் இருப்புக் கதவில் கார் சென்று தாக்கியது. தாக்கிய வேகத்தில் கதவின் பேரில் நாட்டப்பட் டிருந்த எச்சரிக்கை லாந்தல் தூக்கி எறியப்பட்டு மோட்டாரின் முன்புற மூடியில் வந்து திடீரென விழுந்தது. இரும்புக் கதவும் முளையி லிருந்து பிடுங்கிக்கொண்டு ரெயில்வே தண்டவாளத் தில் சாய்ந்துவிட்டது.

ஆனால் காருக்கு யாதொரு விதமான விபத்தும் ஏற்படவில்லை. வண்டியில் இருந்தவர்கள் ஒவ் வொருவராகக் கீழே இறங்கிக்கொண் டிருக்கும் சமயத்தில் நானும் பின் வண்டியில் போய்ச் சேர்ந்தேன். எனக்குப் பிறகு எங்களைத் தொடர்ந்து வரும் போலீஸ் வண்டியும் வந்து நின்றது. முதலில், ரெயில்வே கேட் மூடியிருப்பதால் மேல் செல்ல முடியாமல் தங்கிவிட்டதாக எண்ணினேன். ஒவ் வொருவராக இறங்குவதைப் பார்த்ததும் மனத்

திற்குச் சற்றுச் சந்தேகம் உண்டாயிற்று. கார் ஏதோ தகராறு செய்துவிட்டதுபோல் இருக்கிறதென்று நினைத்து என்னுடைய காரிலாவது அவர்களை ஏற்றிக் கொள்ளலாம் என்று முன் சென்றேன். கால் நடையாகக் காந்திஜியும் அவர்களுடைய சகாக்களும் ரெயில்வே கேட்டைத் தாண்டி வித்தியாலயத்தை நோக்கிச் செல்வதைக் கண்டேன். பிற்பாடு காரின் வேகத்தினால் இரும்பு ரெயில்வே கேட் தாக்கப் பட்டுக் கழன்று கிடப்பதையும் பார்த்தேன்.

'மகாத்மாவுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்' என்று நினைத்தபோது, என் மனம் பதைபதைத் தது. வண்டி ஓட்டிய கைமால் மனம் எவ்விதம் இருக்குமென நான் சொல்ல வேண்டியதில்லை. என்னைக் கண்டதும் ஒரே மூர்ச்சையாகத் தன் இருப்பிடத்தில் சாய்ந்துவிட்டான். எனக்கோ, 'இத்தகைய விபத்து நேர்ந்துவிட்டதே' என்ற கலக் கம் ஒரு புறம்; கைமால் மூர்ச்சையானது மற்றொரு புறம்; எந்தச் சமயத்தில் ரெயில் வந்து விடுகிறதோ என்கிற பயம் இன்னொரு புறம்; பின்னால் துரத்தி வந்த போலீஸ் அதிகாரிகளின் யோசனையற்ற கேள்விகளின் தொல்லை வேறொரு புறம். இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டது. விடிந்தால் நூறு மைல் ரோட் மார்க்கமாகப் பிரயாணம். காரில் எது உடைந்தது, எது போய்விட்டது என்கிற கவலை வேறு. இவைகளின் நடுவில் காந்தியடி களுக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் ஒன்று மில்லாமல் எல்லோரும் சுகமாக இருப்பிடம்

போனார்களே என்கிற மகத்தான திருப்தி.

கைமாலுக்கு முகத்தில் தண்ணீர் தெளித்துத் தட்டிக்கொடுத்துத் தைரியப்படுத்தியதன் பேரில் ஞாபகம் வந்தது. நடந்த விவரத்தைத் தேம்பித் தேம்பிக்கொண்டு மனவருத்தத்துடன் சொன்னான். தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஸ்ரீமான் அவிநாசிலிங்கம் பின்புறத்தில் இருப்பவர்களுடன் ஓயாது பேசி வந்தமையால் தனக்கு நிகா தெரியாமல் திடீரெனத் திரும்பியதாகவும், அதனால் காரைநிறுத்த முடியாமல் மூடியிருந்த ரெயில்வே கேட்டில் மோதி விட்டதாகவும் தன் குற்றத்தைத் தைரியமாக ஒப்புக்கொள்ள முடியாமல் உளறினான். ரெயில்வே இரும்புக் கேட்டைவிடக் காந்திஜியின் கார் மேலானது என்பது அன்று நிரூபிக்கப்பட்டது. 'மகாத்மா கார்' என்பதாக அன்று கன்யாகுமரியில் கேலியாகச் சொல்லிய அடிகள் வாக்கு உறுதியாயிற்று. அதனாலேயே தமிழ் நாட்டிற்கும் எனக்கும் மகாத்மா காந்திஜியின் உயிருக்கு ஹானி விளைவித்த அவப்பெயர் ஏற்படாமல், தப்பிப் பிழைத்தோம். இது தெய்வத்தின் கருணை என்றே எல்லாம் வல்ல இறைவன் திருவருளை மனமாரப் பிரார்த்தித்து நின்றேன்.

மகாத்மாதாம் பிழைத்துப் போய்விட்டாரே, கார் சாகாமல் இருக்கிறதா பார்க்கலாமென்று நான் மோட்டார் ஓட்டி உட்காரும் இடத்தில் அமர்ந்து ஓட்ட ஆரம்பித்த உடனே பக்கத்திலிருந்த போலீஸ் அதிகாரிகள், "ஸார், ஸார், நிறுத்துங்கள். புறப்

படக்கூடாது. நாங்கள் ஆக்ஸிடெண்டு ரிபோர்ட் செய்ய வேண்டும்'' என்றார்கள். 'கார் யாருடையது? எங்கே வாங்கியது? எப்பொழுது ரிஜிஸ்டர் செய்யப் பட்டது? தகப்பன் பெயரென்ன? யார் ஏறிச் சென்றார்கள்? எத்தனை மைல் வேகத்தில் போயிற்று? கேட் காரில் மோதினதா? கார் கேட்டில் மோதினதா?' என்பவை போன்ற முக்கியமான கேள்விகளுடன் ரிபோர்ட் தாக்கல் செய்துகொண்டார்கள். இதற்குள்ளாக ரெயில்வே அதிகாரிகளும் வந்து கேட்டைச் சோதனை செய்து இந்த நஷ்டத்தை யாரிடம் வசூலிக்கவேண்டுமெனத் தீர்மானம் செய்து கொண்டு, என் பெயரையும் விலாசத்தையும் பதிந்துகொண்டனர். பிறகு எல்லோருமாக ஒடிந்த கேட்டைத் தூக்கி ஒரு புறமாக அடக்கம் செய்து விட்டு இரவு பன்னிரண்டு மணிக்கு வித்தியாலயம் சேர்ந்தோம். காந்திஜியைக் கண்டு துக்கம் விசாரிக்கலாமென்று சென்றேன். இந்தச் சம்பவம் நிகழ்ந்தது என்ற நினைவுகூட இல்லாமல் அவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததைக் கண்டேன். காரை ஆதியோடு அந்தமாகப் பரிசோதனை செய்து விட்டு மறுநாள் விடியற்காலைப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்த பிறகு நானும் அயர்ந்தேன்.

# 8. வன்னீர்வலசு - தேவாரம்

தேசபக்தர் அவிநாசிலிங்கம் அவர்களுடைய போத்தனூர் ராமகிருஷ்ண வித்தியாலயம் சுவாமி விவேகானந்தரின் குருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்டது. இதில் சுமார் நாற்பது பிள்ளைகள் குருகுலவாசம் செய்து வருகிறார்கள். பேதமற்ற வாழ்வு, உத்தம ஆசிரியர்களின் போதனை, பிரம்மசரிய ஒழுக்கம் இவைகள் ஒருங்கே அமைக்கப் பெற்று, அந்தணர் முதல் ஹரிஜனர் வரை உள்ள வகுப்புப் பிள்ளைகளெல்லாம் யாதொரு வித்தியாசமுமின்றிப் பயின்று வரும் பாடசாலை. காந்தியடிகளால் இந்த வித்தியாலயத்திற்குப் பிப்ரவரி மீ 7-ஆம் தேதி புதன் கிழமை விடியற்காலை அஸ்திவாரக்கல் நாட்ட ஸ்ரீமான் அவிநாசிலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் போத்தனூரை அடுத்த மைதானத்தில் காந்தியடிகள் கையால் இந்தக் கைங்கர்யம் நிறைவேற்றப் பட்டது.

உடனே ரெயில் மார்க்கமாகப் போத்தனூரை விட்டுப் பொள்ளாச்சி சென்று, கூட்டத்திற்கு மகாத்மா தரிசனம் கொடுத்தார். பிறகு ரஸ்தா மார்க்கமாக உடுமலைப்பேட்டை சேர்ந்

தோம். கடுமையான வெயில் நேரமாக இருந்தும் சுமார் இருபத்தையாயிரம் ஜனங்களுக்கு மேலாகக் கூடியிருந்தனர். கூட்டம் அமைதியாகவே நடந்தது. பண முடிப்பும் குறைவானதாக இல்லை. பகல் அங்கே தங்கி மூன்று மணிக்குப் பிரயாணமானோம். கோயம்புத்தூர் ஜில்லா எல்லையைக் கடந்து, மதுரை ஜில்லாவை மறுபடி அடைந்தோம். இந்த எல்லைப்புறப் பிரதேசத்தில் நாகரிகமறியாத ஒரு குக்கிராமத்தில் இரு சிறுவர்களால் செய்யப் படும் ஹரிஜன சேவையைக் கேள்வியுற்று அங்கே செல்வதெனத் தீர்மானித்தோம்.

அப்பாவு என்னும் இளைஞர் தமது விடா முயற்சியாலும் ஊக்கத்தினாலும் ஆறுமாத காலத் துக்குள் தம் நண்பர் ஒருவருடைய உதவியைக் கொண்டு செய்திருந்த அரிய தொண்டைத் தமிழ் நாட்டார் அனைவரும் அறியவேண்டும். வன்னீர் வலசு என்ற கிராமத்தில் ஸ்ரீமான் அப்பாவு ஹரிஜன சேவை செய்வதெனத் தீர்மானித்துத் தம் நண்பர் மற்றொருவருடன் குடியேறி வசித்து வந்தார். இவர் கள் அந்த ஊரார் ஆதரவைக்கொண்டு ஹரிஜனங் களின் நன்மதிப்பைத் தம் தொண்டினாலே சம்பாதித் தனர். அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத் தும், அவர்கள் குடிசைகளைச் சுத்தம் செய்தும், அவர்கள் குழந்தைகளுக்கு ஸ்நானம் முதலியவைகள் செய்வித்தும், அவர்களுடன் சேரியிலேயே குடியிருந் தும் இம்மாதிரியான முறைகளில் தொண்டு செய்து வந்தார்கள்.

இவைகளின் பலனுக அந்தக் கிராமத்தில் ஹரிஜனங்களுக்குப் புத்துயிர் உண்டாகியிருக்கிறது. அநேகர் குடிப்பழக்கத்தை விட்டு விட்டனர். புலால் உண்ணும் வழக்கமும் குறைந்து விட்டது. காந்தியடிகளைத் தங்கள் கிராமத்திற்கு எவ்விதத்திலாவது வரும்படி செய்யவேண்டுமென்ற ஊக்கம் அப்பாவு அவர்களுக்குத் தோன்றினமையால், தாம் எடுத்த காரியம் சித்திக்கவேண்டிய முயற்சியை இடைவிடாது செய்துவந்தார். திருச்சிக்கு ஒரு முறை, குன்னூருக்கு ஒரு முறை இவ்விதமாக அலைந்து கடைசியில் தமது விடா முயற்சியால் அடிகள் தமது கிராமத்திற்கு வருவதை நிச்சயம் செய்துகொண்டு போனர்.

வன்னீர்வலசு கிராமம் உடுமலைப்பேட்டை-பழனி ரஸ்தாவிற்கு இரண்டு மைல் வடக்கில் உள்ளது. அந்த ஊருக்குச் சரியான வண்டிப் பாதை இல்லை. அடிகள் வரவேண்டுமானுல் கார் போகும்படியான வசதிகள் தேவை. "வருவதாயிருந்தால் இந்த இடையூற்றை ஒரு பொருட்டாக நினைக்க வேண்டியதில்லை" என்றுர் அப்பாவு. தம் தோழர்களுடனும் கிராம ஜனங்கள் அனைவருடனும் ரஸ்தா போடும் வேலையில் புகுந்தார். பத்துத் தினங்களுக்குள்ளாக இரண்டு மைல் தூரம் கார் போவதற்கான பாதை உண்டாக்கி, அதற்குக் 'காந்தி ரோடு' என்று நாமகரணம் செய்து சாலையின் வடபுறத்திலுள்ள மரத்தில் அப் பெயரை ஒரு பலகையில் எழுதிக் கைகாட்டியைப்போல் மாட்டிவிட்டார்.

போக முடியாத ஊருக்குப் பத்து நிமிஷத்தில் போய்ச் சேர்ந்தோம்.

அந்தச் சேரியின் அழகையும், அந்தக் குடிகளின் பாக்கியத்தையும் கண்டு புகழாதவர்கள் அன்று ஒருவரும் இல்லை. எவ்வளவு சுத்தம்! எவ்வளவு ஒழுங்கு! தென்னாட்டு விஜயத்தில் இந்தக் காட்சி ஒன்று அடிகள் மனத்திற்கு ஆனந்தம் அளித்தது என்பதற்கு ஐயமில்லை. இவ்வளவு சீர்திருத்தமும் ஒரு பைசாகூட யாரையும் கேளாமல் அப்பாவு ஒருவரே தம் முயற்சியைக் கொண்டு செய்திருக்கிறாரென்றால், அடிகளின் பின்வரும் வாக்கியத்தை அவர் ருசுப்படுத்தி விட்டாரல்லவா? "என் இயக்கத்திற்கு ஆயிரக்கணக்கான மனிதர்கள் அவசியமில்லை. லட்சக்கணக்கான திரவியம் தேவையில்லை. உண்மையான மனிதன் ஒருவனயிருந்தாலும் போதுமானது. அந்த ஒரு மனிதனுடைய செயல் உலகத்தை வென்றுவிடும்" என்று பல தடவையும் மகாத்மா வற்புறுத்தி வந்த ரகசியம் அன்று என் கண் முன்னல் புலப்பட்டது.

* * *

அன்று சாயங்கலாம் ஐந்து மணிக்குப் பழனி ஆண்டவர் மலையை அடைந்தோம். பகவானுடைய பிரசாதத்தைப் பெற்று, கூட்டம் முதலிய நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு இரவு ஒன்பது மணிக்குத் திண்டுக்கல் போய்ச் சேர்ந்தோம். தூத்துக்குடியில் கண்ட காட்சிபோல விளக்கு வெளிச்சங்களும் ஜனக்கூட்டமும் கண்

டோம். கூட்டத்தை முடித்துக்கொண்டு இரவு திண்டுக்கல்லில் தங்கி மறுநாள் காலையில் உத்தம பாளையத்துக்குப் பிரயாணமானோம்.

மதுரை ஜில்லாவின் மேற்குப் பாகத்திலுள்ள மலைச்சாரலில் இரண்டு மலைகளுக்கு நடுவில் உள்ள பாகம் உத்தமபாளையம். இரு மலைகளுக்கும் மத்தியில் பெரியாறு மேற்கு மலைத் தண்ணீரைக் கிழக்கு வெளி, பாண்டிச் சீமைகளுக்கென அள்ளிக்கொண்டு ஓடும் காட்சி பார்ப்போர் மனத்தைக் கவர்ந்தது. மலைகளுக்கு நடுவில் சுமார் ஐம்பது மைல் தூரம் செய்த பிரயாணம் மனத்திற்கு இனிமையையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் அளித்தது. இந்தப் பிரதேசத்தில் இரண்டு நாள் பிரயாணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இடங்களில் ஹரிஜன இயக்கம் ஒன்றுமே இல்லை. ஒரு சமயம் அடிகள் விஜயம் செய்த காரணத்தைக் கொண்டாகிலும் இனி ஊக்கம் ஏற்படலாமென்கிற எண்ணம் உண்டு. அடிகள் தென்னாட்டுப் பிரயாணம் பல தடவை செய்திருந்தபோதிலும், கம்பம் பள்ளத்தாக்கிற்கு வந்தது இதுதான் முதல் தடவை.

காந்திஜியை எவ்விதத்திலும் இந்த ஊர்களுக்கு அழைத்துப் போகவேண்டுமென்று முயற்சி செய்தவர்களுள் இருவர் முக்கியமானவர்கள். போடி நாயக்கனூர் நித்தியானந்தம் ஒருவர். திருச்சி, கோயம்புத்தூர், சென்னை முதலிய பல இடங்களில் எங்களைக் கண்டு எவ்விதத்திலும் போடி நாயக்கனூருக்கு அடிகள் அவசியம் வந்து தீர

வேண்டுமென்று மன்றாடி, சாம தான பேத (தண்டத்தைத் தவிர) முறைகளால் தம்மால் இயன்ற அளவு வற்புறுத்தினார்.

ஆனால் அவரைத் திருப்தி செய்ய எங்களால் முடியவில்லை. அரை நாள் பிரயாணத்திற்கு மேலாகப் போய்ப் பிறகு திரும்பவேண்டிய மலை முடுக்கில் உள்ள இடம் அது. பணமுடிப்பும் அதிகம் கிடையாது. நித்தியானந்த சுவாமி, 'எங்கள் ஊருக்கு வரமுடியாத மகாத்மா காந்தி இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?' என்று சொல்லித் தமது ஏமாற்றத்தை ஒருவாறு தெரிவித்துத் திரும்பிவிட்டார். இரண்டு மூன்று நாட்களுக்கு அப்பால் ஒரு நாள் காலையில் 'பாரதி' பத்திராதிபரும், உப்பு சத்தியாக்கிரக காலத்தில் சிறை சென்ற தேசபக்தருமாகிய நாராயணசாமி பலமான சிபார்சுகளுடன் என்னிடம் வந்து மகாத்மா அவசியம் தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று வற்புறுத்தினார். வியாபார தோரணையில் இறங்கிவிட்டார். "எங்கள் பக்கம் வந்தால் எங்கள் தாலூக்காவில் மட்டும் ரூபாய் ஐயாயிரம் வசூல் செய்து கொடுப்பேன்" என்று சொன்னவுடன் எனக்கும் சற்று யோசனை உண்டாயிற்று.

எனவே, "ஸ்ரீயுத தக்கர் அவர்களைக் கண்டு பேசி, ஐயாயிர ரூபாய் ஒரு நாள் சுற்றுப் பிரயாணத்திற்குள் கொடுப்பதாக உறுதிமொழி கொடுத்துப் பாருங்கள். ஒருகால் உங்கள் இஷ்டம் பூர்த்தியானாலும் ஆகக்கூடும்" என்பதாகச் சொன்ன

வுடன் நண்பர் நாராயணசாமி உடனே அப்போது அடிகள் பிரயாணம் நடந்த மலையாள நாட்டிற்குச் சென்று, பிரயாணத்தை ஒரு நாள் அதிகப்படுத்தித் தாம் குறிப்பிட்ட ஊர்களுக்கு அடிகள் வருவதற்காகப் பிரயாணத் திட்டம் ஏற்படுத்திக்கொண்டு வந்துவிட்டார். தெய்வாதீனமாக மதுரையில் மழை வந்த காரணத்தால் தமிழ்நாட்டுப் பிரயாணம் பத்து நாள் அதிகரித்தவுடன் தேவாரப் பிரதேசத்தின் பிரயாணமும் ஒரு நாளிலிருந்து இரண்டு நாளைக்கு அதிகரித்தது. தங்கள் ஊராகிய தேவாரத்துக்கு அரை மணி நேரம் வந்தால் போதுமென மன்றாடிய செட்டியாருக்கு அரை நாள் கிடைத்தது.

தேவார மென்பது தெய்வலோகமென்பதே அவரது கொள்கை. தேவாரம் இந்தியாவினுள் அடங்கியதால் அவருக்கு இந்தியாவினிடத்துப் பக்தி. அவர் கிராமபக்திக்கு ஏற்ற காரணங்கள் உண்டு. ஏல மலைகளுக்கு நடுவில் அம் மலைச் சிகரங்களின் குழந்தையைப் போல் அது அழகாக அமைந்துள்ளது. ஏல மணம் நிறைந்து மாசற்ற காற்று வீசுகிறது. குளிர்ந்த தண்ணீரைக் கொண்ட அருவிகள் துள்ளியோடுகின்றன. ஏல வியாபாரிகளின் கெட்டி மெத்தைக் கட்டிடங்கள் அந்த ஊரின் வியாபார மிகுதிக்கு அறிகுறியாய்த் தலைநிமிர்ந்து நிற்கின்றன. ஸ்ரீயுத தக்கர், நாராயணசாமி செட்டியாருக்குத் 'தேவாரம் ராஜா' என்று புனை பெயர் சூட்டி அழைத்தது கேவலம் வெறும் பேச்சல்ல.

அவருடைய வெற்றியின் பலனாக நித்தியானந்த

சுவாமியின் போடிநாயக்கனூரும் சுற்றுப் பிரயாணத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது! அடிகள் விஜயம் செய்வதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்பாகப் பிளேக் நோய் போடிநாயக்கனூரில் பிரவேசித்தது. இவ் வியாதி பரவிற்றென்ற விஷயம் மகாத்மாவுக்குத் தெரிந்தவுடன், 'எவ்விதத்திலும் அவ்விடம் நான் போவது நியாயம் அல்ல" என்பதாக உறுதியாகச் சொல்லிவிட்டார். காந்திஜி தம் உயிருக்குப் பயந்து போகாமல் நின்று விட்டாரென்று யாரும் நினைத்திருக்க மாட்டார்களென்றே கருதுகிறேன். அடிகள் பம்பாயில் பிளேக் நோய் கண்ட காலத்திலும், நேட்டால் முதலிய இடங்களிலிருந்த காலங்களிலும் தாமே பிளேக் நோயாளிகளுக்குப் பக்கத்திலிருந்து அவர்களுடன் இராப் பகலாக உழைத்திருக்கிறார். அவர் போக மறுத்தது மற்றவர்களின் நன்மையை எண்ணியே.

"பிளேக் நோய் தொத்து வியாதி என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இவ்விதக் கொள்கை கொண்ட நான் போடிக்குப் போனால் அவ்விடத்தில் ஆயிரக் கணக்காகக் கூடும் ஜனங்கள் பிளேக் இல்லாத ஊர்களுக்கும் நோயைக் கொண்டு போகக் கூடும். அதன் காரணமாக அநேகர் உயிர்விட நேரலாம். ஆகையால், போடிநாயக்கனூர்ச் சுகாதார அதிகாரிகள் அந்த ஊரில் பிளேக் நோய் இல்லை என்பதாக அத்தாட்சி கொடுத்தால்தான் அவ்வூருக்கு வர முடியும். இல்லாவிட்டால் அங்கு வரமுடியாது"

என்று தமது முடிவான அபிப்பிராயத்தை மகாத்மாஜி தெரிவித்துவிட்டார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோல, இவ்வளவு செய்து அடிகள் வருவதற்கான ஏற்பாடு முடிந்தும் பிளேக் குறுக்கிட்டுக் கெடுத்து விட்டதனால் அவ்வூர் வாசிகள் அடைந்த வருத்தம் சொல்லி முடியாது. கடைசியில் அங்கே போகும் ரஸ்தாவில், ஊருக்கு எட்டு மைலுக்கு இப்பாலுள்ள மைதானத்தில் ஒரு பந்தல் போட்டு அவ்வூர் வாசிகள் ஆயிரக் கணக்காக வந்து, அடிகளை வரவேற்றுப் பண முடிப்பு, உபசாரப் பத்திரம் முதலிவைகளை அளித்துத் தரிசனம் செய்துவிட்டுப் போனார்கள்.

திண்டுக்கல்லிலிருந்து முறையே வத்தலகுண்டு, பெரியகுளம், தேனி, சின்னமனூர், உத்தம பாளையம், கம்பம், கோம்பை, தேவாரம் முதலிய கிராமங்களைச் சுற்றிக்கொண்டு, மறுநாள் பிற்பகல் தேனி ஸ்டேஷனில் ரெயில் ஏறி இரவு ஒன்பது மணிக்குச் சோழவந்தான் வந்து சேர்ந்தோம். தேசபக்தர்கள் மட்டப்பாறை வேங்கடராமையர், முனகால பட்டாபிராமையர், டாக்டர் கோபாலசாமி இவர்களுடைய முயற்சியால் அன்றைத்தினம் சோழவந்தானில் வெகு அமைதியான கூட்டம் நடந்து, பண முடிப்பும் அடிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அன்றிரவு பதினொரு மணிக்கு ரெயில் ஏறி விடியற்காலை நான்கு மணிக்குத் திருச்சி சேர்ந்தோம்.

## 9. திருச்சிராப்பள்ளி - நாமக்கல்

திருச்சி ஜங்ஷன் ஸ்டேஷன், டவுனுக்கு மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. நாங்கள் பிரயாணம் செய்த வண்டி விடியற்காலை 3-50 மணிக்கு வந்தது. அவ் வேளையில் அநேகர் கூடி யிருக்க மாட்டார்களென நினைத்தேன். அப்படி இல்லை. பிளாட்பாரம் முழுதும் ஜனத்திரள். இறங்க இடமில்லாமல் காந்திஜி இருக்கும் வண்டி யின் முன்பாகக் கூட்டம் கூடிவிட்டது. வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்கள், தலைவர் உட்படப் பிரசன்ன மாகிவிட்டனர். வரவேற்புக் கமிட்டித்தலைவர் வக்கீல் ஸ்ரீநிவாஸ ஐயர் வைதிகப் பற்றுள்ளவர். ஆனால் தேசபக்தியில், முதிர்ந்த சத்தியாக்கிரகியைக் காட்டிலும் சிறந்தவர். கும்பகோணம் சங்கராசாரிய ஸ்வாமிகளிடத்தில் அத்தியந்த பக்தியுடையவர். மகாத்மாவிடத்திலும் அதே உணர்ச்சி கொண்டவர். ஹரிஜன இயக்கத்தில் முற்றும் ஈடுபட்டவர். அன்று காலையில் ஸ்நானம், ஜபம் முதலியவை செய்து முடித்துக்கொண்டு கட்டு விபூதியுடன் கதராடை அணிந்த புனித புருஷராக அடிகளைத் தம் கோஷ்டி யாருடன் வரவேற்றார்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு சீக்கிரம் வீடு போய்ச் சேர்ந்தோம். காலைப் பிரார்த்தனை நடந்தது.

அன்றைத்தினம் அலுவல் மிகவும் கடுமையானபடி யால் குறிப்பிட்ட நேரத்திற்கு ஐந்து நிமிஷம் முன் பாகப் புறப்பட்டுவிட்டோம். போலீஸ் அதிகாரி களின் உதவியை எண்ணியும் ஜனங்களுடைய ஆவலை எண்ணியும் இந்த இந்தத் தெருக்கள் வழியாக இன்ன இன்ன இடங்களுக்குப் போவ தென விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இதனால் அடிகளைத் தரிசிக்க இஷ்டமுள்ளவர்கள் ஆயிரக் கணக்காக ஆங்காங்கே கூடினதோடு, போலீஸ் அதி காரிகளும் தகுந்த ரோட் பந்தோபஸ்து செய்வதற்கு அநுகூலமாக இருந்தது. ஆனால் எதிர்பாராத ஒரு கோஷ்டியாருக்குங் கூட இந்த ஏற்பாடு நன்மை அளித்தது. 'அடிகளை வரவேற்கக் கூடாது; அவர் ஹிந்து மதத்தை வேரோடு அறுக்க யத்தனம் செய்துகொண்டு வருகிறார்' என்றும், தாங்களே உண்மை ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுகிறவர் கள் என்றும் சொல்லிக்கொண் டிருக்கும் ஒரு கோஷ்டியாருக்குக் கறுப்புக்கொடிகள் கட்டவும், 'காந்தி! திரும்பிப்போ' என்கிற விளம்பரங்கள் ஒட்டவும் வசதியாக இருந்தது. தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் காந்தியடிகள் கண்ணுக்கு விளக்கமாகத் தெரியும்படி கறுப்புக் கொடிகள் கட்டிய தோரணங்களையும் விளம்பரங்களையும் தூக்கிக்கொண்டு தெருவில் குறுக்கும் நெடுக்கும் சிலர் அலைந்துகொண் டிருந்த காட்சி இந்த ஊரில் தான் முதல் முதலாகக் காணப்பட்டது. ஒரு வாடகை மோட்டார்காரில் ஆங்கிலம் படித்துப்

பட்டம் வாங்கின பிராம்மணர்கள் இருவர் கட்டுக கட்டாக விபூதி யணிந்து, கதர் தரித்துக்கொண்டு, காந்திஜி பற்றிக் கேவலமாக எழுதியுள்ள துண்டுப் பிரசுரங்களை இரண்டு பக்கங்களிலும் வாரி இறைத் துக்கொண்டு முன்னால் போய்க்கொண் டிருந்தார்கள்.

ஆனால் அடிகள் மனத்தில் எள்ளளவேனும் இந்தக் காட்சியைப்பற்றி வருத்தம் இல்லை. 'எதிர்ப் பிரசாரம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையை மரியாதையுடன் உபயோகிக்கிறார் கள்' என்பதைப் பற்றி அவருக்கு உண்டான ஆனந் தத்திற்கு அளவில்லை. எதிர்ப்பிரசாரம் தப்பான முறையில் நடத்தாமல் ஒழுங்காக நடத்தினார்கள் என்பதை அன்றைத்தினம் சாயங்காலம் நடந்த கூட்டத்தில் எடுத்துக் காட்டியபோது அவருடைய உள்ளம் எவ்விதமென்பதை அனைவரும் அறிய நேர்ந்தது.

காந்தியடிகளின் ஹரிஜன இயக்கத்திற்கு ஹிந்துக்களில் மேல் ஜாதியினர் என்று சொல்லிக் கொள்பவர்களில் விரோதமாக இருப்பவர்கள் அநேகர் உண்டு. இதில் ஜனத்தொகைக் கணக்கின் பேரில் பார்ப்போமேயானால் பிராம்மணர்கள் சிறு பான்மையோராகவும், பிராம்மணரல்லாத ஹிந்துக் கள் பெரும்பான்மையோ ராகவுமே இருக்கவேண் டும். ராமநாதபுரத்து நாட்டார்கள், திருச்சி மேல அரசூர்ப் பிராம்மணரல்லாத ஹிந்துக்கள் இவர்கள் ஹரிஜனங்களை நடத்திவரும் முறை பத்திரிகை படிப் பவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். தேவகோட்டை

யில் நாட்டார்கள் மகாத்மாஜியைக் கண்டு பேசிய பொழுது தங்கள் நியாயத்தைப் பலமாக எடுத்து உரைத்தபோதிலும், கேவலமான துண்டுப் பிரசுரங்களாவது, கறுப்புக் கொடிகளாவது வைத்துக் கொண்டு இடைஞ்சல் செய்யவில்லை. தங்களுக்கு விரோதமாயிருந்தாலுங்கூட அடிகளை மாலையிட்டு வரவேற்றார்கள். திருச்சியில் பிராம்மணரல்லாதாரில் அநேகர் ஹரிஜன இயக்கத்திற்கு விரோதமாயிருப்பினும், வெளிப்படையாகப் பிரசாரம் செய்து குறிப்பிடக்கூடியவர்களாக இருந்தவர்கள் பிராமணர்களே. பிராம்மணர்கள் தாம் இந்த இயக்கத்திற்கு விரோதமாக இருக்கிறவர்களென்று நினைக்கும்படியான முறையில் இது நடந்தது. இந்தப் பிராம்மணர்கள் மேல்நாட்டுப் படிப்புப் படித்து, வருணாசிரம தர்மத்தை அனுஷ்டானத்தில் தாங்களே கொலை செய்துகொண்டு, அதை மறைப்பதற்காகச் செய்த இந்த முயற்சியிலும் கறுப்புக்கொடி முதலிய மேல் நாட்டு முறைகளைக் கையாண்டது ஒரு பெரிய வேடிக்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீரங்கம் தென்னாட்டில் முக்கியமான வைணவ க்ஷேத்திரம். அந்த ஊருக்கு மகிமை அளித்தவர் ஸ்ரீமத் ராமாநுஜர். வைணவக் கொள்கையைச் சிக்கெடுத்துச் சுத்தம் செய்து, கோடிக்கணக்கான மக்களின் மனத்திலிருந்த துயரத்தை நீக்கி முக்தி அளிக்கும் ரகசியங்களை விளம்பரப்படுத்தி, தமது ஆயுளின் கடைசிக் காலத்தை இந்தப் புனித க்ஷேத்திரத்தில் செலவழித்துச் சமாதியானார்.

ஜாதி வேற்றுமை தெய்வ சந்நிதானத்தில் கிடையா தென்ற உண்மையைச் சுமார் எண்ணூறு வருஷங்களுக்கு முன்பே உபதேசித்த முனிவர் செய்கையும், இன்று அதே தத்துவத்தைப் பாமர ஜனங்களுக்கு ஐயந் திரிபறப் பறை சாற்றுவிக்கும் அடிகளின் உள்ளமும் சத்தியத்தின் மாறாத உருவத்திற்குச் சான்றாகும்.

புனித ஸ்ரீரங்கத்தில் காலஞ்சென்ற தேசபக்த சிரோமணியான கொடியாலம் ரங்கசாமி ஐயங்காரின் தம்பி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பொதுஜனங்களின் சார்பாக அளித்த வரவேற்புப் பத்திரத்தில், 'தங்களை உண்மை ஸநாதனி என்று நாங்கள் கருதுகிறோம்' என்று இருந்த ஒரு வாக்கியம் அடிகளின் மனத்தில் பதிந்தது. அதற்குப் பதிலளிக்கும் பொழுது, 'தாங்கள் என்னை உண்மை ஸநாதனி என்று அழைத்ததை நான் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொல்லியதனால் அடிகளிடம் ஸநாதன தர்மத்தின் உண்மை உணர்ச்சி எப்படி வேரூன்றி யிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம்.

* * *

அன்று சாயங்காலம் புத்தூர் மைதானத்தில் கூடிய கூட்டத்தைப் போல அதற்கு முன் திருச்சியில் ஒருவரும் பார்த்ததில்லை. இஸ்லாம் நண்பர் ஒருவர் அளித்த வரவேற்புப் பத்திரத்தில் குறிப்பிட்ட விஷயம் அடிகளுக்குத் தம் இயக்கத்தின் தத்துவத்தை வற்புறுத்துவதற்கு ஒரு சந்தர்ப்

பத்தைக் கொடுத்தது. அந்த வரவேற்பில், 'தாங்கள் பொது ஜன ஊழியத்தை விட்டு ஒரு கூட்டத்தாரின் முன்னேற்றத்தை மட்டும் பிரத்தியேகமாகக் கவனிக்கும் காலம் சீக்கிரம் மாறி முன்போலவே எல்லா இந்தியச் சமூகத்தினருக்கும் தொண்டு செய்யும் காலம் வருமென்று நம்புகிறோம்' என்று கண்டிருந்தது. இதற்கு அடிகள், 'இந்த இயக்கம் ஒரு வகுப்பினரைக் குறித்ததாக வெளிப்படையாகத் தோன்றினாலும் இதன் உட்கருத்து அது அல்ல. மனித சமூகத்தில் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை மனித இயல்புக்கு விரோதமாக நடத்தும் முறை மனித சமூகத்திற்கே கேவலத்தை உண்டாக்குகிறது.. தீண்டாமையை ஒழிக்கும் இயக்கமானது மனிதருக்குள் பிறவியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் விபரீத எண்ணத்தை ஒழிப்பதற்கான முறை. இந்தத் தேசத்தில் ஹிந்துக்களுடன் கூட வாழும் மற்ற மதத்தினர்களிடத்தும் இந்த ஜாதி வேற்றுமை ஒவ்வொரு வீதத்தில் பரவியிருக்கிறது. ஆகையால் இந்த நோய் ஹிந்து சமூகத்தினரிடமிருந்து ஒழியுமேயானால், இந்தியாவுக்கும், இந்தியாவின் மூலமாக மற்ற எல்லாச் சமூகத்திற்கும் நன்மை ஏற்பட்டுச் சமத்துவமும், சகோதரத்துவமும் பரவும். இதில் என் எண்ணம் கைகூடுவதற்கு மற்ற மதத்தினரின் உள்ளன்பையும் ஆர்வத்தையும் கோருகிறேன்' என்று வெகு உருக்கத்துடன் பதில் அளித்தார். தமிழ் நாட்டில் அடிகள் செய்த சொற்பொழிவுகளில் திருச்சியில் செய்த

ஆத்ம உணர்ச்சி ததும்பிய சொற்பொழிவு மிக மேன்மையானது.

மறு நாள் காலை சேரிகளைப் பார்வையிட்டு ரெயில் மார்க்கமாகக் கரூர் சென்றோம். திருச்சியி லிருந்து அடிகள் கோஷ்டியைப் பின் தொடர்ந்து டாக்டர் சாஸ்திரியாரும், அவர் மனைவி கல்யாணி அம்மாளும், தேசியக் கல்லூரித் தலைவர் சாரநாத ஐயங்காரும் வந்தார்கள். குளித்தலை ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம். அந்த ஊர்க் கோவிந்தசாமி முதலியார் பழுத்த தேச பக்தர். அடிகள் குளித் தலையில் இறங்கி ஊருக்குள் செல்லவில்லை என்ற துக்கம் அவருக்கு அளவில்லை. பல தடவை முயன்றும் அவர் எண்ணம் நிறைவேறாது போயிற்று. இப்படி அடிகள் இறங்க முடியாமல் போனதற்கு நானும் தக்கர் பாபாவுந்தான் காரணம் என்பது அவ ருடைய எண்ணம். அதே பிரகாரம் துண்டுப் பிரசுரம் வழங்கினார். குளித்தலையில் அடிகள் இறங்க வேண்டும் என்கிற அவா எனக்கும் உண்டு. மாறி மாறிப் பிரசுரித்த பிரயாணத் திட்டங்கள் ஒன்றில் குளித்தலைக்கு ரோட் மார்க்கமாகக் காரில் போவதாகத் திட்டம் போடப்பட்டுப் பிற்பாடு மாறியதில் ரெயில் பிரயாணம் செய்யும்படி நேரிட்டது. இதற்காக மகாத்மாஜி திருச்சி ஜில்லா எல்லை நுழைந்தது முதலாக நண்பர் கோவிந்தசாமி உண்ணாவிரதம் இருப்பதாகவும், அடிகள் ஜில்லா எல்லை தாண்டும் வரையில் உணவு அருந்துவதில்லை என்றும், அப்படிப் பட்டினி கிடக்கும் தேசபக்த

ருடைய தேக நிலையை எண்ணிப் பொதுமக்கள் அடிகளைச் சீக்கிரமாக ஜில்லா எல்லை தாண்டிச் செல்லும்படி வேண்டுவதாகவும் கையெழுத்திடாத அச்சிட்ட துண்டுப் பிரசுரம் கரூரில் எனக்குக் கிடைத்தது. ஆனால் நண்பர் கோவிந்தசாமி உணவு உட்கொள்ளாமல் இருபத்து நான்கு மணி நேரமாகியும் அடிகள்பால் தமக்கு இருக்கும் பேரன்பினால் உடல் தளர்ச்சியின்றிக் கரூருக்கும் வந்திருந்தார். அடிகளைச் சீக்கிரம் புறப்படுமாறு நோட்டீஸில் கண்டபடி வற்புறுத்த வேண்டிய அவசியம் நேரவில்லை. பகல் மூன்று மணிக்குக் கரூரில் கூட்டம் முடிந்ததும் ரோட் மார்க்கமாக ஈரோடு நோக்கிப் புறப்பட்டோம்.

சுமார் இரண்டாயிரம் மைல்வரையில் தமிழ் நாட்டில் அடிகள் காரில் பிரயாணம் செய்தபோதிலும் மோட்டார்காரினால் சாதாரணமாக ஏற்படக் கூடிய விபத்துக்கள் இதுவரையில் நேரவில்லை. இன்று கரூரிலிருந்து புறப்பட்டுப் பத்து மைல் தூரம் சென்றவுடன் காந்திஜியின் கார் டயரில் லாடம் ஏறிக் காற்றுப் போய்விட்டது. பின் தொடர்ந்து சென்ற என் மூடு மோட்டார்காரில் அவரை ஏற்றிவிட்டு, நானும் மற்றவர்களும் மற்றொரு காரில் சென்றோம். நாங்கள் கொடுமுடி சேர்வதற்குப் பத்து நிமிஷம் முன்பாகவே அடிகள் கார் அங்கே சென்றுவிட்டது. கூட்டத்தின் மத்தியில் காரை நிறுத்தி, மோட்டார் ஓட்டியின் உதவியைக் கொண்டு மேல் கூட்டில் ஏறி உட்கார்ந்து

கொண்டுவிட்டார். அவ்விடம் உபந்நியாசத்தைத் தமிழ்ப்படுத்திச் சொல்லிய பாக்கியம் என் மோட்டார் ஓட்டிக்குக் கிடைத்தது. கூட்டம் முடிவதற்கு முன்பாக நாங்கள் வந்துவிட்டபடியால் அடிகள் மோட்டார் மேல் கூட்டில் உட்கார்ந்து தரிசனம் கொடுத்ததைக் கண்டு களித்தோம்.

சூரியன் அஸ்தமிக்கும் சமயம் ஈரோடு போய்ச் சேர்ந்தோம். இரவு ஏழு மணிக்குப் பொதுக் கூட்டம். கூட்டம் கட்டுக்கு அடங்கவில்லை. ஓயாத சத்தத்தினால் யாதொரு விஷயமும் பேச முடியாமல் போய்விட்டது. வரவேற்புப் பத்திரங்களும், பண முடிப்பும் பெற்றுக்கொண்டு இரவு $8\frac{1}{2}$–மணிக்குப் பவானி சேர்ந்தோம். இங்கே கூட்டம் மிக அமைதியுடன் நிறைவேறியது. இரவு பத்து மணிக்குத் திருச்செங்கோடு சென்று கூட்டம் முடிந்த பின்னர் 11–மணிக்குப் புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் சேர்ந்தோம். அடிகளின் உடல் கடுஞ் சோர்வு அடைந்திருந்தது. மறுதினம் மௌன தினம். இரண்டு நாள் தொடர்ந்து ஓய்வு ஏற்பாடு செய்ய எண்ணி இவ்வளவு கஷ்டத்திற்கு அடிகளை ஆளாக்க நேர்ந்தது.

காந்தி ஆசிரமத்தில் நடந்த நிகழ்ச்சிகள் ஏற்கனவே வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆகவே மேலே செல்கிறேன். பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி காலையில் காந்தி ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டுச் சேலம் நோக்கிச் சென்றோம். முதல் தங்குமிடம் நாமக்கல். தமிழ் நாட்டில் தேசிய இயக்கத்

'தில் கலந்துகொண்ட ஊர்களில் நாமக்கல் முதன்மை யானது. கவி ராமலிங்கம் பிறந்து வளர்ந்த ஊர். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் பின் வாங்காது தேசீய இயக்கத்தில் முன்னணியில் நின்ற இடம்.

மிட்டாதார் வேங்கடாசல ரெட்டியார் வயசில் இளையவர்; தேச பக்தியில் முதியவர். சிறை வாசத் திற்கு அஞ்சாமல் தேச சேவை செய்தவர். இவரும் வக்கீல் நாகராஜையரும் மேற்கொண்ட முயற்சி பலன் தராதுபோக இடமில்லை. அன்றைத்தினம் கூட்டம் கூடிய இடம், காலம், ஜனக்கூட்டம் இவை ஒருங்கே அமைந்ததன் அழகு மற்ற எந்த இடத்தி லும் பார்க்கவில்லை. சூரியன் உதயமாகும் திக்கு நோக்கி, மலைச்சாரல் முழுதும் மனிதர்கள் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் காணப்பட்டார்கள். இயற்கை மேடை தவிரச் செயற்கை மேடை இல்லை. அடிகளை எந்த இடத்திலிருந்தும் எல்லோரும் பார்க்கக்கூடியதாக இருந்தது. கூடியவர்களின் அமைதியும் ஒழுங்கும் ஒப்பற்றவை. சூரியனுடைய இளங்கிரணங்கள் வீசப்பெற்று, மனிதமயமாக இருந்த மலைச்சாரல் அன்று அளித்த காட்சி என்றும் காணக் கிடைக்காது. காந்தியடிகள் விஜயம் செய்த வருஷம் மாசம், தேதி இவைகள் அந்த மலைப்பாறை யில் சிலாசாஸனம் செய்யப்பட்டு என்றைக்கும் அழிக்க முடியாத காட்சியாக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

# 10. சேலம்

நாமக்கல்லை விட்டு எட்டு மணிக்குப் புறப்பட்டுச் சேந்தமங்கலம், ராசிபுரம் மார்க்கமாகப் பத்தரை மணிக்குச் சேலம் சேர்ந்து, ஸ்ரீமான் நடேச பண்டாரம் அவர்களுடைய புதிய மாளிகையை அடைந்தோம். பண்டாரம் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் அன்று அடிகளை வரவேற்ற பெருமை மறக்கக் கூடியதன்று.

சேலத்தில் 'காந்தி ஐயர்' ஹோட்டல் பெயர் பெற்றது. அந்த ஹோட்டலுக்குச் சொந்தக்காரரின் இயல்பான பெயர் எனக்குத் தெரியாது. பொது ஜனங்கள் அவரைக் காந்தி ஐயர் என்றுதான் அழைக்கிறார்கள். ஹரிஜன இயக்கம் தமிழ் நாட்டில் தலையெடுத்த காலத்தில் சேலம் காந்தி ஐயரும் அதில் ஈடுபட்டார். தரித்திரனாக வேண்டுமென்ற பிரியம் யாருக்காகிலும் இருப்பின் காந்தியடிகளை நாடினால் போதும். சாமான்ய மானிடர்களால் விரும்பப்படும் பொருள் காந்தியடிகளிடம் கிடையாது. அப்படிப்பட்ட பொருளாளர் அடிகளைப் பின்பற்றினால் தங்களுடைய பொருளை இழந்து அடிகளுடைய தவப் பொருளில் பங்கு எடுத்துக் கொள்ளலாம். இதற்கு அன்று சேலம் காந்தி ஐயர் உதாரணமாக இருந்தார்.

ஹோட்டல் ஐயர் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டவுடன் தம் ஹோட்டலில் ஹரிஜனங்கள் நுழையவும் மற்ற ஜாதி ஹிந்துக்களுடன் இருந்து உணவு உண்ணவும் அநுமதி கொடுத்தார். இதன் பலனை ஒரு வாரத்திற்குள் அநுபவித்தார். அவர் ஹோட்டலுக்கு யாரும் சாப்பிடப் போவதில்லை. ஹோட்டலுக்கு யாரும் சாப்பிட வராவிட்டால் ஹோட்டல்காரர் கதி என்ன ஆகுமென்று நான் சொல்லவும் வேண்டுமா? காந்தி ஐயர் ஓட்டையாண்டி யாகி விட்டார். இருப்பினும் மகாத்மாவின் மேல் பாரத்தைப் போட்டுத் தாம் பிடித்த விரதத்தை விடாது கைப்பற்றி வந்தார். பதினைந்து நாட்கள் ஆயின. ஒருவர் இருவராக மெல்ல மெல்ல ஜாதி ஹிந்துக்கள் திரும்பி வர ஆரம்பித்தனர். மாதம் ஒன்றாயிற்று. போன பேர்வழிகளில் பாதிப்பேர் திரும்பி விட்டனராம். இரண்டாவது மாதத்தில் எல்லோரும் திரும்பி விட்டனர். மூன்றுவது மாதத்தில் காந்தி ஐயர் ஹோட்டல் சேலத்தில் கியாதி அடைந்து விட்டது. நஷ்டமடைந்த பணம் வட்டியும் முதலுமாகத் திரும்பிவிட்டது. சேலம் நகர சபையார், தங்கள் எல்லைக்குள் எந்தச் சாப்பாட்டு இடம் இருந்தபோதிலும் அதனுள் எல்லா ஜாதியாரும் சமமாகப் புகும் உரிமை வேண்டுமென்கிற நியாயத்தை வற்புறுத்த வேண்டுமெனத் தீர்மானம் செய்தார்கள். பொது ஜனங்களுக்கெனச் சாப்பாடு, பலகாரம், சிற்றுண்டி முதலியவை அளிக்கும் இடங்களில் ஒரு ஜாதியாரை மட்டும் வராமல் தடைசெய்யும் ஹோட்டல்களுக்கு

லைசென்சு ரத்து செய்யப்படுமெனத் தீர்மானம் நிறைவேற்றிச் சென்னைச் சர்க்கார் அநுமதிக்கு அனுப்பினார்கள். சென்னைச் சர்க்கார் அதற்கு அநுமதி கொடுக்க மறுத்தார்கள். நகர சபையார், சென்னைச் சர்க்கார் இரு திறத்தாரையும் காந்தி ஐயர் தம்முடைய உண்மையான தீரச் செயலால் வென்று விட்டார். சத்தியாக்கிரகம் எல்லாத் துறைகளிலும் வெற்றிபெறும் என்பதற்கு இந்தச் சிறு செயல் ஓர் அத்தாட்சி.

காந்தி ஹோட்டல் ஐயர் அடிகளைக் காண வந்தார். சரித்திரத்தைச் சொன்னார். மகாத்மா தம் ஹோட்டலுக்குள் வந்து சற்று வீற்றிருக்க வேண்டுமென்று மன்றாடினார். கதையைக் கேட்ட அடிகள் வருவதாக ஒப்புக்கொண்டார். காந்தி ஐயரின் ஆனந்தத்திற்கு அளவில்லை. தம் ஹோட்டலுக்கு முன்பாகப் பெரிய பந்தல் ஒன்று அமைத்தார்; அலங்காரம் செய்தார். ஒரு வரவேற்புப் பத்திரம் தயாரித்தார். தம் சொந்தத்தில் இரு பண முடிப்புக்கள் தயாரித்தார். ஒன்று ஹரிஜன இயக்கத்திற்கு; மற்றொன்று பீகார் கஷ்ட நிவாரணத்திற்கு. புஷ்ப மாலைகளுடன் அடிகளின் வரவை எதிர்பார்த்த வண்ணமாக ஹோட்டல் வாசலில் காத்திருந்தார். அடிகள் காந்தி ஐயர் ஹோட்டலுக்கு வரப்போகிறார் என்ற வதந்தி ஊரில் பரவவே, சேலம் நகரம் முழுவதும் ஐயர் ஹோட்டலில் முன்பாகக் கூடிவிட்டது. பிற்பகல் மூன்றரை மணிக்கு அடிகள் அவ்விடம் வந்தபொழுது கார் போக முடியாமல்

கூட்டம். இறங்கவும் முடியவில்லை. ஹோட்டலில் போகவும் வழி இல்லை. காந்தி ஐயர் தம்மால் இயன்ற அளவு முயன்றும் பயன்படவில்லை.

ஐந்து நிமிஷம் காத்திருந்தும் கூட்டம் வழி விடாமல் போனபடியால் பணப்பை, புஷ்பமாலை, வரவேற்புப் பத்திரம் இவைகளை எடுத்துக்கொண்டு மிகுந்த கஷ்டத்துடன் காரை அடைந்து, படிக்கட்டில் இருந்தபடியே அடிகள் பாதத்தில் பண முடிப்பைச் சமர்ப்பித்துப் பூமாலையைச் சூட்டினார்.

## 11. தஞ்சாவூர் - நாகப்பட்டணம்

சேலத்தைவிட்டுப் புறப்பட்டு ரெயில் மார்க்கமாய்த் திருச்சி வழியாகச் சென்று வியாழக்கிழமை காலை ஆறு மணிக்குத் தஞ்சாவூரில் இறங்கினோம். ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு மைதானத்தில் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். மத்தியில் உயர்ந்த மேடை. நான்கு புறத்திலும் ஏராளமான ஜனங்கள். சூரியன் உதயமாகும் நேரம். அடிகளுக்கு வரவேற்புப் பத்திரங்கள், அத்தர், மாலைகள், ஊதுவத்திகள், வாசனைச் சரக்குகள், இன்னும் பெயர்போன தஞ்சை நகர்க் கைத்தொழில் சாமான்கள் அளிக்கப்பட்டன. மகாத்மா பதில் அளிக்கும் நேரம் சூரியனும் கிழக்குத் திக்கில் பூமியைப் பிளந்து கொண்டு செந்தீக் கிளம்பியது போல் பாதி பூமிக்கு மேலும், மறு பாதி பூமிக்கு உள்ளுமாகத் தோன்றினான். வெப்பமில்லாத இனிய கிரணங்கள் குளிர்ந்த காலை நேரத்தில் சுவர்ண மயமான கலசங்கள் கொண்ட தஞ்சைக் கோபுரத்தின்மீது வீசிப் பார்ப்பவர் மனத்தைக் கொள்ளைகொண்டன. இடம், காலம், காட்சி இவைகள் ஐயன் மனத்தில் ஊடுருவிச் சென்று, கருணைமயமான அவர் இருதயத்தில்

பட்டவுடன் அக் கருணையே சொற்பொழிவாகப் பிரவகித்தது. கேட்போர் மனமும் அவ்வாறே உணர்ச்சியில் ஈடுபட்டது. கூட்டத்தில் ஜனங்கள் மூச்சு விட்டார்களோ அல்லது உயிரற்ற பதுமைகளாக இருந்தார்களோ என எண்ணும்படி இருந்தது. அன்று நிகழ்ந்த சொற்பொழிவை அதன் சுவை குன்றாது இன்று எழுதுவது முடியாது. எனினும் அதன் கருத்தைச் சுருக்கிச் சொல்லுகிறேன்:

"இன்றைத் தினத்துக் காட்சி என் மனத்தை உருக்குகிறது. மனிதனின் உடலில் உண்டாகும் களைப்பை ஆற்றி, மனத்திற்குச் சாந்தத்தைக் கொடுக்கிற இந்த முகூர்த்தத்தில், உறங்கும் உலகத்தை, பெற்றெடுத்த தாய் தன் அருமைக் குழந்தைகளை அன்புடன் தட்டி எழுப்புவதுபோல, தங்கமயமான தன் இனிய கிரணங்களைக்கொண்டு சூரிய நாராயணன் எழுப்புகிறான். ஈசன் அமர்ந்துள்ள கோயிலின் சிகரங்களின் மீதும் உடுக்க உடையின்றி, உறங்க இடமின்றித் திறந்த குடிசைகளிலும் மரத்தடியிலும் தினைப்புலங்களின் தட்டிகள் மீதும் வசித்து, பயிர்களைக் காத்து உலகத்தோர் உய்யும் வண்ணம் தொண்டு புரியும் ஹரிஜனங்கள்மேலும் யாதொரு வித்தியாசமுமின்றிச் சூரியன் பிரகாசிக்கிறான். அன்பின் வடிவமாகி, ஜீவகோடிகளிடத்து ஏற்றத்தாழ்வின்றித் தன் கிருபையை வீசும் தெய்வத்திற்கு நாம் கோயிலொன்று அமைத்து, கருணைக் கடலைச்

சிறைப்படுத்துவதுபோல, 'என் தெய்வத்தை ஒரு சிலரே காணலாம்' என்று நிபந்தனை அமைப்பது இயற்கைத் தர்மத்திற்கு நேர் விரோதமானது என்பதை இன்று சூரியன் அளிக்கும் காட்சியினின்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். மனிதனின் ஏற்றத் தாழ்வு இயற்கையில் இல்லை. செயற்கையால் கற்பனை செய்யப்பட்ட ஒரு திட்டம் இது. இதற்குத் தெய்வ சந்நிதானத்தில் இடம் இல்லை. இந்த உண்மைதான் நமது ஸநாதன தர்மத்தின் மெய்ப்பொருள். தீண்டாமை என்னும் வழக்கம் சாஸ்திர சம்மதமானதல்ல. ஸநாதன தர்மம் நிலைபெற வேண்டுமானால் தீண்டாமை ஒழிய வேண்டும். இந்த உண்மைக்குச் சூரிய நாராயணனே சாட்சி" என்னும் பொருளடங்கிய சொற்பொழிவை நிகழ்த்தியதும் அக் கூட்டம் சற்று நேரம் மதிமயங்கி நின்றதுபோல் காணப்பட்டது. சாமான்களை ஏலம் போட ஆரம்பம் செய்தவுடனே மகாத்மாவின் அரிய மந்திரத்தினின்றும் விடுபட்ட ஜனங்கள் சிரித்தார்கள்; கை தட்டினார்கள். நாங்களும் கும்பகோணம் நோக்கிப் புறப்பட்டோம்.

*   *   *

தஞ்சாவூர் ஜில்லாவிற்குத் தஞ்சாவூர் தலைநகரமாக இருந்த போதிலும் உயிர்நிலை கும்பகோணந்தான். காவிரி நதி தன் கரங்களால் அணைத்து, தனது ஜீவ தாதுவால் பொன்னை விளைக்கும் புனித பூமி கும்பகோணம். இடறி விழுந்தால் ஆலயங்களும் குளங்களுமே. கோவில்

களில் பணக்காரக் கோயில்கள் உண்டு; விளக்குப் போடுவதற்கு வீதியில்லாத கோவில்களும், வெளவால்கள் குடிபுகுந்த கோவில்களும் உண்டு. அப்படிப் பாழாயிருந்தாலுங்கூட ஹரிஜனங்களின் சாயை அந்தப் பாழடைந்து இடிந்த மதில் சுவர் களின்மீதும் படக்கூடாது. குருட்டு வைதிகத்திற்கு முதல் பரிவட்டம் பெற்ற இடம். இருந்த போதிலும் மகாத்மாவினிடத்து அன்புகொண்டு, அவ்வன்பைப் பல துறைகளிலும் காட்டிய நகரம். காங்கிரஸ் தொண்டர்களும், சிறைவாசம் செய்த சத்தியாக் கிரகிகளும் நிறைந்த ஊர். யாது காரணம் பற்றியோ ஹரிஜன இயக்கத்தில் ஊக்கம் இல்லாததோடு ஸ்ரீரங்கத்தைப்போல எதிர்ப் பிரசாரமும் நடந்து கொண்டு வந்த இடம்.

இந்த ஊரில் இவ்வளவு எதிர்ப்புக்கும் இடையில் பின் வாங்காது வேலை செய்துவந்தவர் டாக்டர் சாம்பசிவம் அவர்கள். அவர் முயற்சி இல்லாவிட்டால் அங்கே ஒன்றும் நடந்திராது. ஆனால் அவர் சிறை சென்ற தேச பக்தரல்ல. மகாத்மாவின் வரவேற்புக்காகச் செய்த ஏற்பாடு களில் காங்கிரஸ் தொண்டர்களாகச் சிறை சென்ற வர்களில் சிலரைப் பல காரணங்களை முன்னிட்டு அவர் தம்முடன் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆகையால் கட்சி இரண்டாயிற்று. வரவேற்புக் கமிட்டிக்குப் போட்டிக் கமிட்டி ஒன்று உண்டா யிற்று; தலைமை வகிக்க ஒரு டாக்டரும் கிடைத்தார். சண்டைக்குக் குறைவில்லை. மகாத்மா

ஒரு வழியாகப் போய் ஓர் இடத்தில் தங்கப்போகிறார் என்று விளம்பரம் செய்தவுடன் எதிர்க் கட்சியார் வேறு மார்க்கமாகப் போய் வேறு இடத்தில் தங்கப் போகிறார் என்று விளம்பரம் செய்தார்கள். முடிவில் தாங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து தாங்கள் விளம்பரம் செய்தபடி நிகழ்ச்சி நடைபெறாவிட்டால் தாங்கள் அடிகள் வரும் மோட்டார்கார் முன்பாக வழிமறித்துச் சத்தியாக்கிரகம் செய்வதாகத் தந்தி அடித்தார்கள். மகாத்மாஜிக்கு இதன் விஷயம் ஒன்றும் தலைகால் புரியவில்லை. பிறகு ஆதியோ டந்தமாக எல்லாச் சச்சரவுகளையும் அவருக்கு விவ ரித்த பிறகு அன்றைத்தினம் கூட்டத்தில் இதைப் பற்றித் தம் அபிப்பிராயத்தைத் தெளிவாக எடுத்து உரைத்தார். "ஹரிஜன சேவையில் எல்லோருக்கும் பங்கு எடுத்துக்கொள்ள உரிமையுண்டு. காங்கிரஸ் கொள்கைகளைப் பின்பற்றினவர்களுக்கு மற்றவர் களைக் காட்டிலும் விசேஷமான பாத்தியதை இல்லை. ஹிந்து மதத்தைச் சார்ந்திருக்கும் தீண்டாமை என்னும் தொத்து நோயை ஹிந்துக்கள் அனைவரும் ஒருங்குகூடி ஒழிக்க வேண்டியது. இதில் கட்சி, எதிர்க் கட்சி, அதிக உரிமை, குறைந்த உரிமை என்பதற்கெல்லாம் இட மில்லை என்பதை நான் காங்கிரஸ் நண்பர்களுக்கு வற்புறுத்துகிறேன்" என்று கூறினார்.

டாக்டர் சாம்பசிவ ஐயர் சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரையில் வசூலித்திருந்தும், மற்ற ஏற்பாடு கள் செவ்வனே செய்திருந்தும், தமக்கு எதிர்ப்

பிரசாரம் செய்த கோஷ்டியாருடைய வரவேற்புப் பத்திரத்தையும், சுமார் மூந்நூறு ரூபாய் உள்ள ஒரு மெலிந்த பண முடிப்பையும் முதல் முதலாக அடிகள் கையில் சமர்ப்பிக்க இடம் கொடுத்தது பெரிதும் பாராட்டத் தகுந்த விஷயம். மேலும் தஞ்சாவூர் ஜில்லா எல்லை நுழைந்தது முதலாகக் கடைசியில் சீர்காழி எல்லை தாண்டும் வரையில் எங்களுக்கு வழிகாட்டியாகவும் பொறுப்பாளியாகவும் உடன் வந்து அவர் செய்த தொண்டை மறக்க முடியாது.

* * *

கும்பகோணத்தில் நகர பரிபாலன சபையார் மகாத்மாவுக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்தைப் பற்றி நேயர்கள் அறிய வேண்டும். அருஞ் சொற்களால் அடிகளை வரவேற்றும், சீரிய சொற்களால் அடிகளின் ஆலயப் பிரவேச இயக்கத்தைக் கண்டித்தும் எழுதப்பட்டிருந்தது. மேலும் தங்கள் வரவேற்பைத் தங்கள் கட்டிடத்திலேயேதான் கொடுப்போம் என்றும், பொதுக்கூட்டத்தில் கொடுப்பதில் தங்களுக்கு இஷ்டமில்லை என்றும் மகாத்மாவுக்குத் தெரிவித்தவுடன், அவர் அவசியம் அவர்கள் கொடுக்கும் இடத்துக்கே போய் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், தம்முடன் அபிப்பிராய பேதம் உள்ள சபையோர்களுடைய வரவேற்பைப் பெறுவது தமது கடமை என்றும் சொல்லி, முதல் முதலாக அவ்வூர் நுழைந்ததும் டேல் நகர மண்டபத்திற்குச் சென்று வரவேற்புப்

பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். அதற்குப் பதில் சொல்லுங்கால், உங்களுடைய அன்புத்தும்பியுள்ள வரவேற்புக்கு என் வந்தனத்தை அளிக்கிறேன். ஹரிஜனங்கள் ஆலயங்களில் பிரவேசிக்கும் கிளர்ச்சியைப்பற்றி உங்கள் எச்சரிக்கையைக் கவனித்தேன். தற்சமயம் மேல் ஜாதி என்று கோயிலில் புகும் உரிமையுடையவர்களில் பெரும்பாலோருடைய சம்மதமின்றி நான் ஒரு ஹரிஜன ஹிந்துவையும் கோயிலில் புகுத்த எத்தனிக்க மாட்டேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்புங்கள். உங்கள் மனத்தையும் இருதயத்தையும் மாற்ற வேண்டிய முயற்சிதான் நான் நடத்திவரும் இயக்கம். உங்கள் அபிப்பிராயம் எவ்விதம் என்னுடன் மாறுபடினும், நான் செய்யும் முயற்சியை மாத்திரம் என்னால் நிறுத்த முடியாது. தீண்டாமை என்னும் வழக்கத்துக்கு நமது சாஸ்திரத்தில் இடமில்லை என்ற பூரணமான நம்பிக்கை எனக்கு இருக்கிறபடியால், அந்தத் தீய வழக்கத்தை ஒழிக்கவேண்டிய கடமையை நான் ஏற்றுக்கொண்டு தீர வேண்டும். ஆலயப் பிரவேச விஷயமாக உங்கள் மனத்தை மாற்ற நான் எவ்வளவு முயன்ற போதிலும், உங்கள் முழுச் சம்மதமில்லாமல் ஒரு ஹரிஜனனும் உள் நுழைய மாட்டானென்று நான் உறுதி கூற முடியும்" என்னும் வாக்குறுதியை அந்த முனிசிபல் சபையோருக்கும், அவர்கள் மூலமாக இந்தியாவில் தமக்கு மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட ஸநாதன உலகத்திற்கும் பறை சாற்றினார்.

அன்றைத்தினம் வெயிலின் கடுமை அதிகம். கும்பகோணத்தை விட்டுப் புறப்படும்பொழுது பிற்பகல் இரண்டரை மணி. இந்தக் கொடுமையான வெயிலில்கூட நாங்கள் ஏறிச்சென்ற மோட்டார் வண்டியின் மேல்கூட்டைப் போடுவதற்குக் கூடியிருந்த ஜனங்கள் சம்மதிக்கவில்லை. காந்தியடிகளின் தரிசனத்தின் பொருட்டுக் காத்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குத் தரிசனம் கிடைக்காமல் போகும்படி செய்ய எங்களுக்கும் மனந் துணியவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் நாச்சியார் கோவிலின் வழியாகக் குடவாசலுக்கும் பிறகு கொரடாச்சேரிக்கும் போய்ச் சேர்ந்தோம். வண்டியைவிட்டுக் கீழே இறங்காமல் காரில் இருந்தபடியே வரவேற்புப் பத்திரம் பெற்றுப் பதில் சொல்வதற்கு நிகழ்ச்சிக் குறிப்பில் ஐந்து நிமிஷம் அளித்திருந்தது. ஆனால் நடந்ததோ அந்த ஏற்பாட்டுக்கு நேர் விரோதமாக இருந்தது. கார் போகும் ரஸ்தாவிற்குக் கீழ்ப்புறம் ஒரு மணல் வெளி. அதன் மத்தியில் உயர்ந்த மேடை. அதற்கும் ரஸ்தாவுக்கும் கால் மைல் தூரம். இந்தக் கால் மைல் தூரத்தில் பாதிக்குக் கூடக் கார் போக முடியாது. அப்புறமுள்ள மணலில் அந்த வெயிலில் மகாத்மா கால் நடையாக நடக்க வேண்டியதாயிற்று. ஆனால் கூட்டத்தை ஒழுங்குபடுத்தவோ, அடிகளைக் காப்பாற்றி மேடைக்குக் கொண்டுபோகவோ ஒரு விதமான ஏற்பாடும் இல்லை. கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக்கொண்டோம். முன் பின் போக

முடியவில்லை. காலடியில் காய்ந்து சுட்டுக்கொண் டிருக்கும் மணல்; தலையில் எறித்துக்கொண் டிருக்கும் வெயில். சுற்றிலும் மூச்சுவிட முடியாத மணல் தூளி. இதன் மத்தியில் ஒரு பர்லாங்கு தூரமுள்ள மேடைக்குப் போய்ச் சேரவேண்டும். எவ்விதத்தில் ஐயன் போய்ச் சேருவதென்பது புரியவில்லை. எங்களுக்குப் பின்புறம் வந்து மோதும் மனித அலைகளால் மோதப்பட்டு எங்களுடைய செயலில்லாமலேயே மேடையின் படிக்கட்டின் அடியில் தள்ளப்பட்டோம்.

மேடையின்மேல் இரட்டைக் குத்துவிளக்குகள், புஷ்பம், ஊதுவத்தி, தாம்பூலத் தட்டு, பழவர்க்கங்கள் முதலிய இனிய பொருள்கள் அலங்காரமாக வைக்கப்பட்டு, திருமண மண்டபம் போல் காணப்பட்டது. அடிகள் அமர்ந்ததும் ஒரு பெரியவர், அடிகளைப்பற்றித் தாம் இயற்றியுள்ள வெண்பாக்களைப் பாடி அரங்கேற்ற முயன்றார். ஆனால் அதற்கு அவகாசம் இல்லாமையால், பணமுடிப்பு, வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு சுருக்கமாகப் பதிலளித்துவிட்டுக் கீழே இறங்க எத்தனித்தோம். போகும்பொழுது இருந்த அமளியைக் காட்டிலும் இறங்கும்பொழுது அமளி பன்மடங்கு அதிகரித்து விட்டது. கூட்டத்தில் வர முடியாமல் வெகு தூரத்திலேயே தள்ளப்பட்டு ஒதுங்கிவிட்ட ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அடிகளை மீட்கவேண்டிய சூழ்ச்சிகளைச் செய்துகொண் டிருந்தார். முதலாக, ஒரு நாற்காலியை அனுப்பி அதில் ஐயனை அமர

வைத்துத் தூக்கி வந்துவிடும்படியாகத் தூது அனுப்பினார். காந்திஜி தனிமையாக நடந்து வந்தால் அவர்மீது ஜனங்கள் விழாமல் சுற்றிலும் இருப்பவர்கள் எந்த அவஸ்தைக்கு உட்பட்டாகிலும் அவரைக் காப்பாற்றிக்கொண்டு போக முடியும். இதன்றி நாற்காலியில் உட்கார வைத்துத் தூக்கி விட்டால், தூக்குகிறவர்களின்மேல் கூட்டம் வந்து விழுவதற்கு அஞ்சாது. நாற்காலியுடன் மகாத்மாவும் கீழே விழ நேரிடுமென்று பயங்கொண்டு அது வேண்டாமென்று அனுப்பிவிட்டு, கால் நடையாகவே கூட்டத்தின் மத்தியில் இறங்கி வழி செய்து கொண்டு வந்தோம். அதற்குள்ளாக ராஜகோபாலாசாரியார், ஒரு நண்பருடைய சிறிய மோட்டார் வண்டியை ஆட்களைக் கொண்டு அந்த மணலில் தள்ளி வந்து நிறுத்தவும் அடிகளைப் பாதி வழியில் அதில் ஏற்றித் திரும்பவும் சாலை வந்து சேர்ந்தோம்.

சிவகாசியில் மழையில் பட்ட அநுபவத்திற்கு இன்று மணலில் பட்ட அநுபவம் சற்றேனும் குறையவில்லை. ஐந்து நிமிஷம் போட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றரை மணி நேரமாக நீண்டது. 4 மணிக்குத் திருவாரூர் போகவேண்டியவர்கள் 5½ மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். சேர்ந்ததும் கூட்டத்தை நடத்திய பிறகு டாக்டர் நாகநாதையர் ஏற்பாட்டின்படி அவ்விடம் பெரிய மிராசுதாராகிய முதலியார் அவர்கள் வீட்டில் சாயங்கால போஜனம் உட்கொண்டு இருட்டுகையில் நாகப்பட்டணம்

புறப்பட்டோம். இரவு 8½ மணிக்குக் கூட்டம் மற்ற இடங்களைப் போலவே வரவேற்பு முதலியவை களுடன் நடைபெற்றது. கடுமையான பிரயாணத் தோடு, வெயிலின் கொடுமை ஒரு புறம்; நிகழ்ச்சி முறையை அளவிற்கு மீறி ஏற்பாடுகள் செய்த கஷ்டம் மற்றொரு புறம்; கூட்டங்களின் மத்தி யிலும் புழுதிக் கடலிலும் நுழைந்து வெளி யேறின களைப்பு - இவைகளால் மகாத்மாவிற்குத் தேக சிரமம் அதிகரித்ததோடு, தினசரி செய்ய வேண்டிய வேலைகளும் அன்று செய்ய முடியாமல் போயிற்று. இதன் காரணமாக மறுநாள் காலையில் 6–மணிக்குப் புறப்பட வேண்டிய பிரயாணம் 8–மணிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

## 12. சீர்காழி - சிதம்பரம்

மறுநாள் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு நாகூர் வழியாகக் காரைக்கால் சென்று அங்கே கூட்டம் நடத்திப் பணமுடிப்புப் பெற்றுக்கொண்டு, தரங்கம்பாடி வழியாக மாயவரம் சென்றோம். நாகையைப்போலவே மாயூரத்திலேயும் சிறிய தொரு பணமுடிப்பைப் பெற்றுக்கொண்டு சீர்காழி போய்ச் சேர்ந்தோம். மணி 11-இருக்கலாம். மைதானத்தில் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்றதும் சுயமரியாதைக் கட்சிக்காரர் கறுப்புக் கொடிகள் ஏந்தி ஒருபுறமாக நின்றுகொண் டிருந் தார்கள். ஆனால் அவர்கள் அமைதியாகவும் முறையுடனும் தங்கள் கருத்தை வெளியிட்டது மெச்சத் தகுந்தது.

புயற் காற்றினால் அடிபட்ட சீர்காழியின் நிலையைக் கவனிக்கவேண்டி அன்றைத்தினம் விடியற் காலையில் ஸ்ரீமான் தக்கர் அவர்களும், தமிழ் மாகாண ஹரிஜன சேவா சங்கத்தின் காரிய தரிசியான ராமச்சந்திரன் அவர்களும் நாகப் பட்டணத்திலிருந்து அனுப்பப்பட் டிருந்தார்கள். அவர்கள் சீர்காழியின் பக்கத்திலுள்ள கிராமங்

களைச் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு, கூட்டம் நடந்துகொண் டிருக்கும்போது அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். கூட்டத்தின் ஒரு புறத்தில் மகாத்மா அமர்ந்திருக்கும் மேடைக்குப் பின்புறம் கார் வருவதற்காகப் பாதை ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் அடிகளுடைய மோட்டார்காரும் நின்று கொண்டிருந்தது. அதற்குப் பின்புறம் தக்கர் பாபாவின் காரும் வந்து நின்றது. அப்பொழுது அங்கே நின்றுகொண் டிருந்த போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டர் அருளானந்தம் அவர்கள் தக்கர் பாபா காரை அங்கே நிறுத்தக்கூடாதென்று உத்தரவு செய்தார். அதைக் கேட்ட தக்கர் அவர்கள் தாம் காந்திஜியின் காரியதரிசி என்றும், தாம் ஏறி வந்த மோட்டார்காரும் காந்திஜி அவர்களுடையது தான் என்றும், போகும் இடங்களிலெல்லாம் இந்த இரண்டு கார்களும் சேர்ந்துதான் இருந்துகொண்டு வந்திருக்கின்றன என்றும் சொன்னார். தம் உத்தரவை மீறிப் பேசியதாக நினைத்துக்கொண்ட ஸப் இன்ஸ்பெக்டருக்கு அடங்காத கோபம் எழுந்து விட்டது.

உடனே ஸப் இன்ஸ்பெக்டர் மோட்டார் ஓட்டியைப் பார்த்து, "நீ இங்கே இந்த வண்டியை நிறுத்தக்கூடாது. அப்படி உத்தரவுக்கு மீறினால் உன்னைப் பிராஸிகூஷன் செய்வேன்" என்று கர்ஜித்தார். அதற்குத் தக்கர் அவர்கள், "நீங்கள் ஏன் மோட்டார் ஓட்டியை விரட்டுகிறீர்கள்? நான் அல்லவா குற்றவாளி? என்னை அல்லவா நீங்கள்

பிராஸிகூஷன் செய்ய வேண்டும்?" என்ருர். இந்த மறுப்பைக் கேட்ட ஸப்இன்ஸ்பெக்டருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "நீ யார், சாக்கைப்போல இந்த முரட்டுச் சொக்காயைப் போட்டுக்கொண்டு என்னை எதிர்த்துப் பேசுகிறவன்? அடே! மோட்டார் ஓட்டி! வண்டியை ஓட்டுகிருயா இல்லையா?" என்று சத்தத்துடன் தமது பூரண அதிகாரத்தையும் காண்பித்தார். போலீஸ் அதிகாரியின் வசைச் சொல்லைக் கேட்ட தக்கர் அவர்களும் மோட்டார் ஓட்டியைப் பார்த்து, "நீ வண்டியை ஓட்ட வேண்டாம். வருவதைப் பார்க்கலாம்" என்று சொன்னூர். மோட்டார் என்னுடையது. அதை ஓட்டுபவன் இன்னது செய்வதென்று தெரியாமல் முன்னும் பின்னுமாக விழித்துக்கொண்டு வண்டியை விட்டு இறங்கிவிட்டான். மகாத்மா கோஷ்டியில் பிரயாணம் செய்து வந்த பூட்டோ என்னும் ஜெர்மானியர் இந்தச் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு அளவற்ற கோபம் வந்து, தாம் மோட்டார் ஓட்டியின் ஸ்தானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டார். "இனி யார் வந்து ஓட்டுகிருன் எனப் பார்க்கிறேன். இரண்டு கதவுகளும் திறந்திருக்கும் வரை எவன் உட்புகுவானெனப் பார்க்கிறேன். இந்தக் கதவு வழியாகப் புகுவதற்கு முன்னுல் மறு கதவு வழியாக வெளிக் கிளம்பும்படி செய்ய எனக்குப் போதிய பலம் இருக்கிறது. இதை ஒருகை பார்த்துவிட வேண்டும். இந்த அவமரியாதையை நான் ஒரு நிமிஷங்கூடப் பார்த்துக்கொண்டு சும்மா

இருக்க முடியாது" என்று ஆரவாரம் செய்தார்.

பக்கத்தில் இருந்த டிப்டி சூப்ரென்டென்ட், ஹெப் இன்ஸ்பெக்டருடைய லீலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தும் அவரை அடக்கப் பிரயத்தனப்படவில்லை. தம்முடைய சொந்த ஹோதாவில் அந்த மோட்டார்காரை அவ்விடத்திலிருந்து ஓட்டிவிடும் படிக்கு உத்தரவு செய்தார். அதற்கும் இணங்குவார் இல்லாமையால், தம் போலீஸ் பரிவாரங்களையெல்லாம் ஒரு திரளாகக் கூட்டி அழைத்துக் கொண்டு கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுதே மறைந்துவிட்டார். ஏன் மறைந்தார் என்பது எனக்குத் தெரியாது. ஒருகால் தம்முடைய பந்தோபஸ்திலிருந்து மகாத்மாவை நீக்கிவிட்டால், அவர் படும் கஷ்டத்தினால் போலீஸ் செய்துவந்த பாதுகாப்பின் மகிமை மகாத்மாவுக்கும் அவர் காரியதரிசிக்கும் உலகத்துக்கும் நன்கு புலப்படும் என்ற எண்ணமாக இருக்கலாம். ஆனால் அன்று இந்தப் பாதுகாப்புக் குறைவினால் ஒருவிதமான ஆபத்தும் நேரவில்லை. கூட்டம் அமைதியாக நடைபெற்றது. கறுப்புக் கொடி நண்பர்களும் ஒவ்வொருவராக மறைந்தார்கள். அன்றைத் தினம் வசூலான ரூபாய் எழுநூறு கொண்ட பண முடிப்பையும் சீர்காழி புயற் காற்றில் கஷ்டமடைந்த ஹரிஜனங்களுக்கு உபயோகிக்கும்படி அடிகள் கொடுத்து விட்டார்.

* * *

அன்றைத் தினம் பகல் 11 மணிக்குச் சிதம்

பரம் வரவேண்டியவர்கள் 3¾ மணிக்கு வந்து சேர்ந்தோம். வழக்கம்போல் ரெயில்வே ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம். கஷ்டத்துடன் மோட்டார் வண்டியை அடைந்தோம். ஸ்வாமி ஸகஜானந்தமும் அவர் நண்பர்களும் அடிகளை வரவேற்றார்கள். நிகழ்ச்சிகள் மூச்சு விடுவதற்கு நேரமில்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதன் விவரம் எங்களுக்கு முன்பு தெரிவிக்கப்படவில்லை. எனினும் எவ்விதத்திலாவது விரைவில் முடிக்கலாமென எண்ணிப் புறப்பட்டோம். மோட்டார் விரைவாகச் சென்று, குறிப்பிட்ட இடங்களில் நிகழ்ச்சிகள் சுருக்கமாக நிறைவேறினால் அன்றைத் தினம் வேலைகள் செவ்வனே நடைபெற்றிருக்கும். ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் நுழைவதற்கு முன்பே எதிர்பாராத ஓர் இடையூறு ஏற்பட்டது. போகும் வழியில் பாதையை வளைத்து ஒரு பெரிய பந்தல் போட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது. அங்கே ஏராளமான கூட்டம். அடிகளினுடைய மோட்டார் வந்து நின்றதும் அவர்கள் இறங்கி அங்கிருக்கும் கட்டிடத்தினுள் வந்து வரவேற்பு, உபசாரப் பத்திரம் முதலியவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அங்கிருந்த நண்பர் வற்புறுத்தலானார். நேரமாயிற்று என்றும், இவ்விடத்து நிகழ்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும் வரவேற்பை மோட்டாரில் இருந்தபடியே செய்தால் பெற்றுக்கொள்வது உசிதமென்றும் எவ்வளவோ சொல்லியும் நண்பர் குஞ்சிதபாதம்

கேட்டாரில்லை. இறங்கத்தான் வேண்டுமென வற்புறுத்தியவுடன் மகாத்மாவும் முடியாதென்று சொல்லி, மோட்டார் ஓட்டியை வண்டியை ஓட்டும்படி சொன்னார். அதற்குள்ளாகக் குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் மோட்டார் வண்டிக்கு முன்பாகக் குறுக்கே படுத்துக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்தார்.

"ஓகோ! சத்தியாக்கிரகத்திற்கு மூல புருஷனென நினைத்துக்கொண் டிருக்கும் என்னிடத்திலேயே என்னுடைய பாடத்தைக் காட்டுகிறுப் போல் இருக்கிறது. சரி, வண்டியை விட்டுக் கீழே இறங்கி நடந்து போகலாம்" என்று காந்திஜி வண்டியை விட்டு இறங்கத் தலைப்பட்டவுடன் கூட்டத்தில் வண்டியின் பக்கத்தில் நின்றுகொண் டிருந்த நண்பர்கள் சிலர் படுத்துக் கிடக்கும் குஞ்சிதபாதம் பிள்ளையைப் புரட்டி இழுத்து வண்டி போகவழி செய்தார்கள். குஞ்சிதபாதம் பிள்ளையவர்களுடைய மனத் துயரத்திற்கு அளவில்லை. அவருடைய கோபம் உள்ளூர் வாசியாகிய ஸ்வாமி ஸகஜானந்தத்தின் மீது பாய்ந்தது. "அடே ஸகஜானந்தம்! நீயும் வண்டியில் உட்கார்ந்து கொண்டு இந்தக் காரியம் நடந்ததா? உன்னை ஒரு கை பார்த்துவிடுகிறேன், போ!" எனக் கர்ஜித்து ஸகஜானந்தத்தைக் கோப விழிகளுடன் வெறித்துப் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுதே மோட்டார் நகர்ந்துவிட்டது.

இதனால் கால் மணி நேரத்திற்கு மேலாக

வீணுகிவிட்டது. அங்கிருந்து ராமலிங்கம் ஹரிஜன இலவசப் பாடசாலையைப் பார்வையிடப் போனேம். அப்பொழுதுதான் அப் பாடசாலையைச் சுத்தம் செய்வதற்காக ஒரு வேலைக்காரன் வின்றுகொண் டிருந்தான். மாணவர்களையும் காணவில்லை; உபாத் தியாயரும் இல்லை. அந்தத் தர்மத்தை ஏற்படுத்திய மூல புருஷனும் இல்லை. அங்கிருந்து திரும்பி மற் ெருரு தெருவில் தாலூகா போர்டார் வரவேற்பைப் பெற்றுக்கொள்வதற்காகச் சென்ருேம். இருநூறு ரூபாய்கொண்ட பணமுடிப்பு அளித்து அதை ஸ்வாமி ஸகஜானந்தத்தின் நந்தனர் கல்விக் கழகத் திற்கு அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் கள். அது முடிந்ததும் நந்தனர் கல்விக் கழகம் போய்ச் சேர்ந்தோம்.

* * *

தென்னுட்டில் தீண்டப்படாதவர்களில் ஒரு வராகப் பிறந்து, இள வயசிலேயே தமிழ், ஸம்ஸ் கிருதம் முதலிய பாஷைகளைப் பயின்று, வைதிக ஞானத்தைப் பெற்று, தம் ஜாதியாரின் கேவலமான நிலையைக் கண்ணுற்றுப் பரிதாபப்பட்டுத் தம் ஆயுள் நாட்களைத் தம் ஜாதியாரின் ஊழியத்துக்கே அர்ப் பணம் செய்திருக்கிறவர் ஸ்வாமி ஸகஜானந்தம். அவருடைய பக்தியின் உருவமாக அமைந்திருப்பது நந்தனர் கல்விக் கழகம். ஆதரிப்பாரின்றிப் பலவிதக் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கும் ஹரிஜனங்களைப் பல வருஷங்களுக்கு முன்னுல் முன்னேற்றுவதற்காக முயற்சியெடுத்த பெருமை ஸகஜானந்தத்திற்கே

உரியது. நந்தனருக்கு வழி காட்டிய தெய்வம் தமக்கும் வழிகாட்டுமென்று பூரண நம்பிக்கை கொண்டு தீண்டப்படாதவர்களுக்குத் தொண்டு செய்ய முன்வந்து நந்தனார் முக்தி பெற்ற ஓமக் குளத்தருகே ஓர் இடம் வாங்கி, ஹரிஜனங்களுக்கென ஓர் ஆசிரமம் ஸ்தாபித்தார். தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களை முன்னேற்றும் முயற்சியில் உலக சிரேஷ்டரான மகாத்மா காந்தியின் மேல் இந்நாளில் வெடிகுண்டு எறியப்பட்டதென்றால், இருபது வருஷங்களுக்கு முன்னால் ஸகஜானந்தத்தின் முயற்சிக்கு எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டிருக்குமென வாசகர்கள் ஊகித்துக்கொள்ளலாம். அந்நாளில் ஸகஜானந்தத்தின் கஷ்டத்திற்கு அளவே இல்லை. முன்னாளில் நந்தனார் பட்ட கஷ்டங்களுக்கு இந்நாளில் ஸகஜானந்தம் பட்ட கஷ்டம் எந்த விதத்திலும் குறைவுடையதல்ல. நந்தனாரைப்போலவே இவரும் தமது விடாமுயற்சியினாலும் தளரா ஊக்கத்தினாலும் எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றார். தற்சமயம், நந்தனார் மடம், கோயில், மாணவர், மாணவி இவர்களுக்கெனப் பள்ளிக்கூடம், சாப்பாட்டு வசதிகள் இவைகள் எல்லாம் முறையே ஏற்படுத்தப்பட்டுச் சுமார் முந்நூறு சிறுவர் சிறுமிகள் படிக்கக்கூடிய வாசஸ்தலம் அமைந்திருக்கிறதென்றால், ஸகஜானந்தத்தின் முயற்சியின் பெருமை இத்தன்மையதெனத் தமிழ் நாட்டார் அறிந்துகொள்ளலாம். ஸகஜானந்தம் ஆங்கிலம் அறியாத தமிழர். உடம்பில் வெகு காலம் வரையில் சட்டை

கூட அணியாமல் ஒற்றைத் துண்டு அணிந்து கொண்டிருந்தவர். மகாத்மா ஜியிடத்தில் உள்ளன்பு நிறைந்தவர்.

தற்சமயம் மகாத்மா ஹரிஜனங்களுக்காகச் செய்துவரும் தியாகம் இவர் மனத்தைக் கவர்ந்த தெனச் சொல்லவும் வேண்டுமா? தென்னாட்டிற்குக் காந்திஜி விஜயம் செய்யப்போகிறார் எனக் கேட்டவுடன் சிதம்பரத்திற்கு அவசியம் வர வேண்டுமெனவும், அப்படி வருங்காலையில் நந்தனார் மடத்திலேயே தங்கவேண்டுமெனவும் ஸகஜானந்தம் அடிகளுக்கு எழுதிய கடிதத்தை அவர் எனக்கு அனுப்பிய பொழுது அதில் தம் கையினால் ஒரு வரி எழுதியது குறிப்பிடத்தக்கது. "நான் சிதம்பரம் போகும்படி சுற்றுப் பிரயாணத்தில் ஏற்பாடு செய்தால், நான் தங்குவதற்கு நந்தனார் மடத்தைத் தவிர வேறு இடம் இல்லை" என்று எழுதி, அதை எனக்கு அனுப்பியிருந்தார். நந்தனார் மடத்திற்காகவே சுற்றுப் பிரயாணத்தில் சிதம்பரம் சேர்க்கப்பட்டது. சுற்றுப் பிரயாணத் திட்டத்தில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டும், சிதம்பரம் மாத்திரம் சுற்றுப் பிரயாணத்திலிருந்து நீக்கப்படவில்லை. ஸகஜானந்தம் உத்தமப் பிரம்மசாரி. நந்தனார் மடந் தான் அவருடைய செல்வக்குழந்தை. உலகம் அழிந்திடினும் நந்தனார் மடமும் பள்ளிக்கூடமும் உயிர் வாழ்ந்தால் போதும் என நினைக்கும் அன்பு வாய்ந்தவர். அவ்வன்பின் காரணமாக, ஹரிஜன இயக்கத்தின் பொருள் முழுவதும் தம் சிருஷ்டிக்கே

உரித்தானது என எண்ணுவார். பள்ளிக்கூடம் கட்டியாகவில்லை எனக் கவலை; மடம் கட்டி முடிய வில்லை என்று இரவு நித்திரை இல்லை. "விக்கிரகங் களைக் கோயில் கொண்டு எழுந்தருளச் செய்துவிட் டேனே; அவைகளுக்குப் பூஜை நியமங்கள் சாசுவத மாக ஏற்பாடாகவில்லையே?" என்ற ஏக்கம். இத் துயரங்களுக்கு இடையே தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, சென்னை சட்ட சபை இவைகளில் ஸ்தானம். அங்கே செல்வதெல்லாம் தமது குழந்தையைக் காப் பாற்றுவதற்கே என நம்பிப் பணி ஆற்றி வரும் மனப்பான்மை. இவருடைய முயற்சி பரி பூரணமாகுமாறு இறைவன் அருள் புரிய வேண்டு மென்பது என் பிரார்த்தனை. தமிழ் நாட்டினர் தங்கள் செல்வமாகக் கருதி இந்த ஸ்தாபனத்தைக் காப்பாற்றவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

* * *

சாயங்கால போஜனத்தை நந்தனர் மடத்தில் முடித்துக்கொண்டு அண்ணாமலைச் சர்வகலாசாலை மாணவர்கள் கூட்டத்திற்குப் போவதற்காகப் புறப் பட்டோம். எங்கள் சொந்த மோட்டார்கள் சீர்காழி யில் கொள்ளிடத்தைத் தாண்ட முடியாமல் சுற்று வழியாக வரவேண்டியிருந்ததால் இரவு பத்து மணிக்கு மஞ்சக்குப்பம் வரும்படி ஏற்பாடு செய்து விட்டோம். சிதம்பரம் கமிட்டியார் ஏற்பாடு செய் திருந்த மோட்டார் வண்டியில் போக வேண்டிய தாயிற்று. நந்தனர் மடத்தை விட்டுப் புறப்பட்டதும் எங்கள் வண்டிக்கு முன்பாக ஒரு மோட்டார் வண்டி

வழிகாட்டிபோல ஓடத் தலைப்பட்டது. அதில் நான்கு நண்பர்கள் உட்கார்ந்துகொண்டு மெதுவாக ஓட்டிக்கொண்டு சென்றனர். எங்களுடைய வண்டி முந்துவதற்கும் இடம் கொடுக்கவில்லை; தாங்களும் விரைவாகப் போகவில்லை. எங்கள் மோட்டார் ஓட்டியை வேகமாக ஓட்டும்படி வற்புறுத்தியும் அவர் ஓட்டுவதற்கு உடன்படவில்லை. முன் போகும் வண்டியைப் பின் பற்றாது வேறு வழியாகப் போவதற்கும் இணங்கவில்லை. அப்படி ஒரு முறை இணங்கியபோதும், முன் சென்ற வண்டி திரும்பவும் மற்றொரு வழியாக வந்து எங்களைத் தடைப்படுத்திக் கொண்டு சென்றது.

கடைசியாக ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வரும்பொழுது வந்த ரஸ்தாவில் எந்தப் பந்தலில் குஞ்சிதபாதம் சத்தியாக்கிரகம் செய்தாரோ அதே பந்தலில் எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது! நண்பர் குஞ்சிதபாதம் தம் கையில் ஒரு சிறு பண முடிப்பை ஏந்திக்கொண்டு, வண்டிக்கு முன்பாக வந்து நின்று, இறங்கி அந்த மடத்திற்குள் வர வேண்டுமென மகாத்மாவை வற்புறுத்தலானார். முடியாது என்று அடிகள் எவ்வளவோ வற்புறுத்தியும் குஞ்சிதபாதம் பிள்ளை கேட்கவில்லை. அங்கே கூடியிருந்த ஜனத்திரளுக்கு அளவில்லை. 'வண்டியை ஓட்டு' என்று சொன்னால் மோட்டார் ஓட்டி அதற்கு இணங்கவில்லை. இதை எல்லாம் பார்த்துக்கொண் டிருந்த மகாத்மா திடீரென்று, மோட்டார் வண்டியை விட்டுக் கீழே குதித்துக்

கால் நடையாக அந்தப் பந்தலை விட்டு வெளியே நடக்கத் தலைப்பட்டார். உடனே வண்டியில் இருந்த நாங்களும் அவரைப் பின்பற்றி அவர் பேரில் கூட்டம் வந்து விழாமலும், அவர் போகும் வழியில் எவ்வித இடையூறும் ஏற்படாமலும் இருக்குமாறு அடிகளைச் சுற்றிக் கை கோத்துக்கொண்டு, எவ்விடம் போகிறோம் என்பது தெரியாமல் சென்றோம். எங்களுக்கு முன் வழிமறித்து வந்த மோட்டார் வண்டியும், நாங்கள் ஏறி வந்த மோட்டார் வண்டியும் எங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை.

கூட்டத்தால் தள்ளப்பட்டு ஒரு பர்லாங்கு தூரம் நடந்து சென்றோம். கடைசியில் எதிர் பாராதபடி பொதுக்கூட்டம் கூட இருக்கும் மைதானத்திற்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே வந்து சேர்ந்துவிட்டோம். அண்ணாமலை நகர் போகலாம் என்றால் போவதற்கு வண்டி இல்லை. பொதுக்கூட்டம் நடக்கும் இடத்திலோ ஜனங்கள் ஏராளமாகக் கூடி இருந்தனர். உடனே அடிகளுடைய எண்ணப்படி பொதுக்கூட்டத்தை அப்பொழுதே நடத்துவ தெனத் தீர்மானித்து அண்ணாமலை நகருக்குச் சற்று நேரம் கழித்து வருவதாகச் செய்தி அனுப்பி, நாங்கள் வருவதற்காக ஒரு மோட்டார் வண்டியை அனுப்பும்படி கேட்டுக்கொண்டோம். அன்று அடிகளுக்கு உண்டான மனத்துயரத்துக்கு அள வில்லை. அதை ஒருவாறு அன்று கூட்டத்தில்

வெளியிட்டார். "அன்பின் மிகுதியால் நண்பர்கள் சிலர் எனக்கு உண்டாக்கிய கஷ்டத்தை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் செய்ய வேண்டிய சுற்றுப் பிரயாணம் ஒரு வரம்புக்கு உட்பட்டு நடக்க வேண்டியிருக்கிறது. அதில் கால அளவு முக்கியமானது. அதன்படி நடக்காவிட்டால் பிரயாணம் செய்வது முடியாது. இதை நண்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதை அறியாமல், அன்பின் மிகுதியால் என்னைத் தடை செய்வது தகாது."

அவ்விடம் விட்டகன்று அண்ணாமலைநகர் போய்ச் சேர்ந்தோம். சிதம்பரத்தின் அமளிக்குப் பிறகு இங்கிருந்த அமைதி மனத்திற்கு ஆறுதல் அளித்தது. கலாசாலை மாணவர்களும் உபாத்தியாயர்களும் சோமசுந்தர பாரதியார் அவர்களை முன்னிட்டுக்கொண்டு அடிகளை வரவேற்று உபசரித்த பின்னர் ரெயில் மார்க்கமாகக் கூடலூருக்கு இரவு ஒன்பது மணிக்கு வந்து சேர்ந்தோம்.

# 13. மஞ்சக்குப்பம் - கோடம்பாக்கம்

ரெயில் மார்க்கமாகப் போன ஊர்களிலெல்லாம் இறங்கும் இடங்களில் பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை. வரவேற்க எதிர் பார்த்து நிற்பவர்கள் இருக்குமிடத்தில் மகாத்மாவின் வண்டி நிற்பதில்லை. மகாத்மாவுக்காகத் தயார் செய்திருக்கும் மோட்டார் வண்டிக்குப் போய்ச் சேருவதற்குச் சரியானபடி வழி விட்டு ஜனங்கள் ஒதுங்கி நிற்பதும் இல்லை. கூட்டம் சற்று விலகின பிறகு மகாத்மா இறங்கலாமென்றாலோ அவர் இறங்கும் வரையில் கூட்டமும் விலகுவதில்லை. இரவு நேரங்களில் வெளிச்சம் பிரகாசமாக இல்லாத ஸ்டேஷன்களில் இந்தக் கஷ்டம் அதிகம். மோட்டார் வண்டிக்குப் போய்ச் சேருவது பிரம்மப் பிரயத்தனமாகிவிடும். அப்படிப் போய்ச் சேர்ந்தும், கார் புறப்பட முடியாது. எங்கே போவது, வழி எப்படி, எங்கே கூட்டம், எங்கே தங்குவது - இவைகளைச் சொல்லக்கூடியவர்கள் எங்கள் மோட்டாருடன் வந்து சேருவதில்லை. இதற்குள் நேரம் அதிகரித்துக்கொண்டு போகும். கடைசியாக ஒரு வழி காட்டி வந்து புறப்பட்டால் வண்டியிலிருந்தபடியே எல்லாம் நடக்கும்; அதற்காகப் பந்தல், மேடை முதலியவை அமைத்து அரை மணி நேரம் நடவடிக்கைகளுக்குரிய ஏற்பாடு

செய்யப்பட்டிருக்கும். கூடலூரில் எல்லாம் இந்த மாதிரியேதான் நடந்தது. ஆனால் அடிகள் மோட்டாரை விட்டு இறங்க முடியாதென மறுத்துவிட்டார். அதனால் அங்கே கூடியவர்களுக்கு ஏமாற்றம். மணி ஒன்பதரை ஆகிவிட்டது; காலையில் நாகப்பட்டணத்தில் துவக்கிய பிரயாணம். இனி மஞ்சக்குப்பம் ஜில்லாவின் நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற வேண்டும். ஜனங்கள் தங்களுடைய ஏமாற்றத்தை மாத்திரம் நினைப்பார்களே தவிர அடிகளுடைய கஷ்டத்தைக் கவனிக்கமாட்டார்கள்.

கடைசியாக மஞ்சக்குப்பம் சேர்ந்தோம். ஜில்லா போர்டார் வரவேற்பு ஒரு புறம்; தாலூக்கா போர்டார் வரவேற்பு மற்றொரு புறம்; கடைசியாகப் பொதுக்கூட்டம். இவைகளை எல்லாம் முடித்துக்கொண்டு இரவு பதினொரு மணிக்கு வீடு சேர்ந்தோம். மறுநாள் காலையில் புதுச்சேரி. பிறகு மோட்டார் மார்க்கமாகத் திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்குச் சென்று பின்னர் ரெயில் மார்க்கமாக இரவு ஒன்பது மணிக்கு ராயவேலூர் போய்ச் சேர்ந்தோம்.

மற்ற இடங்களில் இறங்குவதற்கு எவ்வளவு கஷ்டம் நேர்ந்ததோ அதைக்காட்டிலும் பன்மடங்கு கஷ்டம் இந்த ஊரில் ஏற்பட்டது. நாங்கள் மோட்டார்காருக்குப் போய்ச் சேருவது மிகவும் கடினமாகிவிட்டது. எங்களுடன் கூட்டத்தை ஒதுக்கி வழி ஏற்படுத்திவந்த ஜெர்மன் இளைஞர் பூட்டோ அவர்களின்மேல் கூட்டம் வந்து தாக்கியது-

ஒரு நிமிஷத்திற்குள் பூட்டோ கீழே தள்ளப்பட்டு அவர்மேல் ஜனங்கள் ஏறி மிதித்துக்கொண் டிருந்தார்கள். காரில் ஏறிவிட்ட எங்களுக்கு, பூட்டோ எங்கே போய்விட்டார் என்று தெரியவில்லை. மோட்டார் புறப்படத் தலைப்பட்டது. உடனே பின் தட்டில் உட்கார்ந்துகொண் டிருந்த காந்தியடிகள், "ராஜன்! மோட்டாரை நிறுத்து. பூட்டோ கூட்டத்தால் மிதிபட்டுக் கிடப்பதுபோலத் தோன்றுகிறது. உடனே கீழே போய்ப் பார்" என்று சொன்னவுடன் நானும் கீழே இறங்கினேன். மூச்சுவிட முடியாமல் கூட்டம். போட்டிருந்த விளக்குத் தூண்கள் சாய்ந்து விளக்கு அவிந்து இருள் மயமாக மூடிவிட்டது. கூட்டத்தின் அடியிலிருந்து உயிரற்ற உடல்போல் நசுக்கப்பட்டுக் கிடந்த பூட்டோவை இழுத்துத் தூக்கி மோட்டாரில் ஏற்றிக்கொண்டோம். தெய்வாதீனமாக மூச்சுப் போய்விடவில்லை. கையில் நாடியும் பலவீனமாக அடித்துக்கொண் டிருந்தது. ஆனால் ஞாபகம் மட்டும் இல்லை. வெடி வேகமாக, நாங்கள் இறங்கவேண்டியிருக்கும் ராமஸ்வாமி முதலியாரவர்கள் வீட்டுக்குள் சென்று, பூட்டோவை மெதுவாகத் தூக்கி உள்ளே எடுத்துச் சென்றோம். அங்கே அடிகளும் பூட்டோ பக்கத்தில் ஒரு மணி நேரம் உட்கார்ந்துகொண்டு அவருக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்து ஞாபகம் வந்த பிறகு பிரார்த்தனை செய்யச் சென்றார். நானும் அன்றிரவு முழுவதும் அவர் பக்கத்தில் இருந்து மருந்துகள் கொடுத்த பிறகு, மறுநாள்

காலை பூட்டோவுக்குப் பூர்ண ஸ்மரணை வந்தது.

காந்தியடிகளின் அஹிம்சா முறையைக் கவனிக்க வேண்டி, தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்து அடிகளுடன் பிரயாணம் செய்துகொண்டு வந்தவர் பூட்டோ. பிறப்பில் ஜெர்மானியர். ஹிட்லரின் இயக்கத்தில் பூரண நம்பிக்கையுள்ளவர். இவருக்குக் காந்தியடிகளின் அஹிம்சா முயற்சியில் கருத்துச் சென்றதே ஆச்சரியம். இப்படிப்பட்ட ஒருவர் கூட்டத்தால் மிதிபட்டு மகாத்மாவின் காலடியிலே உயிர் துறக்க நேர்ந்திருந்தால் அது எப்படி இருக்குமென நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

வேலூரில் விசேஷ நிகழ்ச்சி வேறு ஒன்றும் இல்லை. அன்று பிற்பகல் மோட்டாரில் ரோட் மார்க்கமாகக் காட்பாடி, குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் என்னும் இடங்களுக்குச் சென்று சாயங்காலம் ஆறு மணிக்குக் கிறிஸ்துகுல ஆசிரமம் சேர்ந்தோம்.

இந்தியக் கிறிஸ்தவர்கள் முதன்மையாக இந்தியர்களே என்பதை ஞாபகமூட்டுவதற்காகவே இந்த ஸ்தாபனம் ஏற்பட்டதெனச் சொல்லலாம். ஆசிரமிகள் நடை உடை பாவனைகளெல்லாம் தேசிய மயமாக இருந்தன. ஒவ்வோர் அமைப்பிலும் தேசியம் ததும்பி நின்றது. நோயாளிகளுக்குத் தர்ம ஆஸ்பத்திரி. ஏழைகளுக்குத் தர்மப் படிப்பு. அன்பின் மயமாகி உலகத்தைப் புனருத்தாரணம் செய்த ஏசுநாதர் வாழ்க்கையின் உட்கருத்தையே தங்கள் வாழ்நாட்களுக்கு இன்றியமையாத தர்ம

மாகக் கைக்கொண்டு, அம் மகானின் உபதேச முறைகளைக் கைப்பற்றி நடக்கும் தேசபக்தர்களின் வாழ்வு புனித வாழ்வென்று சொல்லவும் வேண்டுமா? அந்த ஆசிரமத்தின் கண் ஒரு புனிதமான அமைதி நிலவி நின்றது. அங்கே அமைக்கப் பெற்றுள்ள கோயில் தமிழ்நாட்டிலுள்ள மற்ற ஹிந்து கோயில்களைப்போலக் கட்டப்பட்டு, ஹிந்து ஜன சமூக வாழ்க்கையில் உன்னதமாகக் கருதப் பட்டுள்ள முறைகளைக் கையாண்டு பார்ப்போர் மனத்தைக் கவரும் காட்சியாக இருந்தது. டாக்டர் பேட்டன் என்னும் ஆங்கில ஏசு பக்தரும், டாக்டர் ஏசுதாஸன் என்னும் இந்திய தேசீய பக்தரும் இந்த ஸ்தாபனத்திற்கு மூல புருஷர்கள். அவர்கள் அடிகளை அன்புடன் வரவேற்றார்கள். அன்றிரவு அந்தக் கோயிலில் அடிகளின் முன் நடந்த வேத கோஷமும் பஜனையும் குறிப்பிடத்தக்கன. எவ்விதத்திலும் இந்த ஆசிரமத்தைச் சுற்றுப் பிரயாணத்தில் சேர்க்க வேண்டும் என்னும் அடிகள் விருப்பத்திற்கு இணங்க, இங்கே ஐந்து மணி நேரம் தங்கி அன்றிரவு ஜோலார்ப்பேட்டையில் ரெயில் ஏறி மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தோம்.

தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் மகாத்மா சென்னைக்கு மறு முறை வந்தது அந் நகர வாசிகளை உத்தேசித்து அல்ல. கோடம்பாக்கத்தில் தேசபக்தர் கணேசனவர்கள் ஆரம்பித்திருந்த ஹரிஜனத் தொண்டை நேரில் கண்ணுற்று அதற்காக வேண்டிய உதவி புரிய வேண்டும் என்னும் எண்ணத்துடன்

இரண்டு நாள் அவ்விடம் தங்க ஏற்பாடு ஆகியிருந்தது. மௌன தினமும் அதற்கு அடுத்த ஓய்வு நாளும் கணேசனுக்கென்றே அடிகள் ஒதுக்கி வைத்துவிட்டார். ஸ்ரீமான் கணேசனவர்களுடைய தேசத் தொண்டைத் தமிழ்நாட்டில் அறியாதவர் இல்லை. அவரிடத்தில் மகாத்மாவுக்கு உள்ளன்பு அதிகம். மகாத்மாவின் இயக்கம் ஒவ்வொன்றிலும் ஈடுபட்டுச் சென்ற பத்து வருஷங்களாக உழைத்து வருபவர் அவர். அவர் ஒருவரை எண்ணியே ஓய்வு நாட்களில் சென்னையில் தங்க வேண்டுமென்று அடிகள் கட்டளையிட்டார்.

கோடம்பாக்கம் வைபவம் முழுவதும் கணேசனைச் சேர்ந்தது. பாழாகக் கிடந்த ஒரு பெரிய ஓட்டைக் கட்டிடத்தை இரவு பகலாய் உழைத்து மகாத்மா தங்குவதற்கு வசதியாக ஏற்பாடு செய்திருந்தார். எனினும் தோல் பதனிடும் நாற்றம் மட்டும் மாறவில்லை. பண்டைக் காலத்தில் குசேலர் கிருஷ்ண பகவானுக்கு அளித்த பழைய அவலைப் பகவான் எப்படி உண்டாரோ அதுபோல் கணேசன் விடுதியையும் அவர் அளித்த உணவையும் அடிகள் அன்புடனும் ஆனந்தத்துடனும் அநுபவித்தார். அடிகள் வசித்ததன் காரணமாகக் கோடம்பாக்கம் தொழிற்சாலை புனிதமாகி அங்கே ஹரிஜனத் தொண்டு நடந்துவருகிறது.

மௌன தினத்தன்று விசேஷ சம்பவம் ஒன்றும் இல்லை. பிரார்த்தனையின் போது ஹரிஜன் சாஸ்திரியாரின் மனைவியின் இனிய சங்கீதம் அடிகள் மனத்

திற்கு அமைதி அளித்தது. அவருடைய பாட்டைக் கேட்க வேண்டும் என்ற விருப்பத்தை அடிகள் தெரிவித்ததன் மேல், இரண்டு நாட்களிலும் அந்த அம்மாள் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளைச் சுவையுடன் பாடிப் பிரார்த்தனைக் கூட்டத்தின் மனங் குளிரச் செய்தார்கள்.

ஓய்வு தினமாகிய செவ்வாய்க்கிழமையன்று தமிழ் மாகாண ஹரிஜன சேவாசங்கத்தாருடைய போர்டுக் கூட்டம் கோடம்பாக்கத்தில் நடந்தது. அடிகள் அரை மணி நேரம் அங்கே கூடியிருந்த தொண்டர்களுக்கு அரியதொரு பிரசங்கம் செய்தார். மறுநாள் காலை தாம்பரம் ஸ்டேஷனில் ரெயில் ஏறி, செங்கற்பட்டு வழியாகக் காஞ்சீபுரம் சேர்ந்தோம். பகல் உணவை அங்கே முடித்துக்கொண்டு மோட்டாரில் ஆர்க்காடு, ராணிப்பேட்டை வழியாக ஆரணி சென்று திரும்பும் காலையில் சோளங்கிபுரம் வழியாக இரவு ஒன்பது மணிக்கு அரக்கோணம் அடைந்தோம். தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் கடைசிக் கூட்டம் இங்கேதான். கூட்டம் அமைதியாக இருந்தது. கடைசிச் சொற்பொழிவாகையால் அடிகளும் தமிழர்களுக்குத் தமது நன்றியறிதலைச் செலுத்தி, போலீஸ்காரர்களுக்கும் ரெயில்வே கம்பெனியாருக்கும் அவர்கள் செய்த பேருதவிக்குத் தமது வந்தனத்தைச் செலுத்தி விடை பெற்றுக் கொண்டு இரவு 10½ மணிக்குக் குடகு நாட்டிற்குப் பிரயாணமானார்.

# 14 முடிவுரை

மகாத்மாவின் ஹரிஜனச் சுற்றுப் பிரயாணத்தில் பூரண பாக்கியம் பெற்றது தமிழ் நாடு. பிப்ரவரி மாதம் 23-ஆம் தேதி முதல் மார்ச்சு மாதம் 22-ஆம் தேதி வரை அடிகள் தமிழ்நாட்டில் தங்கியிருந்தார். இந்தப் பாக்கியம் தமிழ்நாடு பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் சிறைவாசம் செய்துகொண் டிருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார். அகில இந்திய ஹரிஜன சேவா சங்கத்தாருடைய ஏற்பாட்டின் பிரகாரம் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் மே மாதக் கடைசியில் போட்டிருந்தது. தீண்டாமைப் பேய் தலை விரித்துத் தாண்டவமாடுவது தென்னாட்டிலே தான். ஆதலின் தீண்டாமை ஒழிவதற்கான அடிகளின் சுற்றுப் பிரயாணம் தமிழ்நாட்டிலிருந்து ஆரம்பமாவதுதான் பொருத்தம். தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிந்ததென்றால் இந்தியாவிலேயே தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று சொல்லலாம். அப்படி இருக்க, சுற்றுப் பிரயாணத்தைக் கடைசியாக இந் நாட்டில் வைத்துக்கொண் டிருந்தால் பஞ்சாப், வங்காளம் முதலிய இடங்களில் மகாத்மாவின் சுற்றுப் பிரயாணம் சுருக்கப் பெற்றது போலவே தான் தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கும். இம் மாதிரி ஏற்படக் கூடுமென ஊகித்த ராஜகோபாலாசாரியார், கோயம்புத்தூர்ச் சிறையில் இருந்தபடியே தந்தி மூலமாகப் போராடிச் சுற்றுப்

பிரயாணத் திட்டத்தை மாற்றித் தமிழ்நாட்டுப் பிரயாணம் முதலில் வருமாறு முயன்ருர். தமிழ்நாடு அதனுல்தான் பாக்கியம் பெற்றது.

இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் 18 நாட்கள் ஹரிஜன இயக்கத்திற்காகச் செலவழிந்தன. மீகுதி யான 12 நாட்களில் நீலகிரிமலையில் எட்டு நாட்களும், மௌனம், ஓய்வு இவைகளில் நான்கு நாட்களும் கழிந்தன. பதினெட்டு நாளில் மகாத்மா சுமார் இரண்டாயிரம் மைல் பிரயாணம் செய்தார். 112 இடங்களுக்குச் சென்ருர். சுமார் இரண்டு கோடி ஜனங்கள் வரையில் மகாத்மாவின் தரிசனம் பெற்று, அவர் பிரயாணம் செய்யும் நோக்கம் இன்னது என்பதைத் தெரிந்துகொண்டார்கள். ஒரு லக்ஷத்துப் பதினேழாயிரம் ரூபாய் ரொக்கமாகவும் நகை முதலியனவாகவும் அடிகளுக்குச் சமர்ப்பிக்கப் பட்டது. இவ்வளவு ஜனத்திரளுக்கு உணர்ச்சி ஊட்டச் செய்த ஹரிஜனத் தொண்டைக் காந்தி யடிகளன்றி மற்ற எவரால் செய்திருக்க முடியும்? இந்தப் பிரயாணம் இனிது முடிந்து, அடிகள் யாதொரு விபத்துமின்றி நம் நாட்டை விட்டு அகல வேண்டும் என்கிற கவலை மனத்தில் குடிகொண்டு, தினந்தோறும் இரவில், வழிபடும் தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு காலங் கழித்த எங்களுக்கு அன்று அரக்கோணத்தில் அவரை வழியனுப்பிய பிறகு இருந்த சந்தோஷம் அளவிட முடியாது. எடை குறையாமல், வலிமை குன்ருமல், மனத் தளர்ச்சி அடையாமல், மகாத்மா தமிழ்நாட்டுச்

சுற்றுப் பிரயாணத்தை முடித்தது நம் நாட்டினர் செய்த பெரும் புண்ணியமாகும். வைதிகக் கூட்டத்தாரும் சுயமரியாதைக்காரர்களும் நடந்துகொண்ட மாதிரி மிகவும் மெச்சத் தக்க விஷயம். அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும், அடிகளிடத்தில் அவர்களுக்கு அன்பு இருந்தது என்பதற்கு ஐயமே இல்லை. தமிழ்நாட்டில் ஹரிஜனங்கள் அடைந்த லாபத்தை இவ்வளவென்று அளவிட முடியாது. ஆலயப் பிரவேச இயக்கத்தைத் தவிர்த்து மற்றவைகளில் தமிழ்நாட்டினர் ஒருமுகமாக மகாத்மாவைப் பின்பற்றித் தொண்டாற்றினார்கள். சாதாரணமாய்க் குறைந்தது நூறு வருஷங்களில் நடைபெற வேண்டிய முயற்சி இந்தப் பதினெட்டு நாளில் நடந்திருக்கிறதென்று சொல்வது மிகையாகாது. சென்ற இடங்களிலெல்லாம் வரவேற்பும் பண முடிப்பும் அன்பும் ஆரவாரமும் அடிகள் மனத்தை ஊடுருவிச் சென்றன. என்றென்றும் தமிழ் நாட்டினர்பால் அடிகளின் அன்பு குடிகொண்டு விட்டது. மகாத்மா சுற்றுப் பிரயாணத்தின்போது தமிழ்மக்கள் ஆற்றிய தொண்டு சரித்திரத்தில் வரையப்படும் என்பதில் ஐயமில்லை.

"பத்து வருஷத்துக்கு முன்னால் காந்தி மகாத்மா தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, டாக்டர் ராஜன் மகாத்மாவின் மொழிபெயர்ப்பாளராகப் பிரயாணம் செய்து வந்தார். அந்தப் பிரயாண அநுபவங்களைக் கட்டுரைகளாக எழுதும்படி டாக்டரவர்களை வேண்டினேன். அவை தமிழ் நாட்டின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. புதிது புதிதாகத் தமிழில் எழுதத் தொடங்கிய டாக்டரின் நடையில் ஜீவசக்தியும் ஹாஸ்யமும் ததும்பியதோடு தங்கு தடையில்லாத தெளிந்த இயற்கை ஓட்டமும் இருந்தது. கட்டுரைகளைப் படித்தவர்கள் எல்லோரும் மகாத்மாவுடன் தாங்களும் பிரயாணம் செய்து எல்லா வைபவங்களையும் நேரில் கண்டு கேட்டு அநுபவித்தது போலவே மகிழ்ச்சி அடைந்தார்கள்."

**'கல்கி'**